கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 08.08.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



“சுயமரியாதை இழப்பு!”

ஐயோ வேண்டாம் ஆராய்ச்சிப் படிப்பு?

40 வயசுக்கு சேமிப்புத் திட்டம்!

எண்ணெய் தீபம் நெய் தீபம் எது நல்லது?



மொபைல் ஸ்பெஷல்



விஜய் விரும்பிய ஆந்திரப் புயல்!



சிறுநீர் கசிவா ?

அடி இறக்கமா ?

இலவச தொலைபேசி ஆலோசனை : 0422 2323456

GAURI - UROGYNECOLOGIST

பெண்களுக்கு ஏற்படும் சிறுநீர் கசிவு, அடிஇறக்கம் பிரச்சனைகளுக்கு தீர்வு !

இருமினாலோ, தும்மினாலோ சிறுநீர் கசிகிறதா ?

"சிலிங் சிகிச்சை"

அமெரிக்கா/இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் ! சிறந்த மருத்துவ முறைகள் !

GAURI UROLOGY

(Chennai only)

ஆண்களுக்கு ஏற்படும் பிராஸ்டேட் பிரச்சனைகள்

சிறுநீர்ப்பை, சிறுநீரகத்தில் ஏற்படும் கற்கள்

அவசரமாக அடக்கமுடியாமல் சிறுநீர் கழிக்கும் பிரச்சனைகள்

புற்றுநோய்

GAURI THE CONTINENCE CENTER

www.urogynecology.in

GAURI

Chennai
No1. Crescent Park St
T.Nagar
Chennai -17
Ph:044-24341055
044-24322591


Coimbatore
Bala Medical Center
Ramanathapuram
Coimbatore - 45
Ph:0422-2323456
0422-2323333

Bangalore
(விரைவில்)
Motherhood
Hospital
IndraNagar

கல்கி

08.08.2010





''பாடகிக்குக் கவர்ச்சி தேவையில்லை!''

- சைந்தவி

பாடகி சைந்தவி காட்டில் அடைமழை. ஒரே சமயத்தில் மூன்று ஹிட் பாடல்கள். பொம்மாயி (சுறா) அடடா மழைடா (பையா), ஆருயிரே (மதராசபட்டினம்) என மூன்று பாடல்களும் இவருக்குப் பெரிய திருப்புமுனை.

ஹிட் பாடல்கள்?

''டிவியில, எஃப்.எம்ல எப்போதும் இந்தப் பாட்டுகள்தான் ஒலிச்சுகிட்டே இருக்கு. பொம்மாயி பாடும்போது மணி சர்மா ஸார், 'இதுவரை உன்னை எல்லோரும் ரண்டக்கா சைந்தவிதான் சொன்னாங்க. இனிமேல் நீ பொம்மாயி சைந்தவியா மாறிடுவே'ன்னு சொன்னார். அதேபோல நடந்திருச்சு. நாம பாடற பாடல் ஹிட் ஆகறதும் நம்மைப் பார்க்கிறவங்க எல்லாம் அதைச் சொல்லிப் பாராட்டறதும் ஒரு தனி சந்தோஷம்தான்.''

ரியாலிட்டி ஷோக்களால போட்டி அதிகமாயிடுச்சா?

''டிவி ஷோக்கள்ல பாடுறவங்களால மக்கள் கிட்ட சுலபமாக அறிமுகமாக முடியும். ஆனா, அதுவே சினிமாவுக்கான நுழைவுச்சீட்டுக் கிடை

யாது! எந்த இசையமைப்பாளரும் இந்த மாதிரி டிவி ஷோ பார்த்து பாடகரைத் தேர்வு செய்றதில்லை. நான் இந்தத் துறையில ஆறு வருஷமா பாடிக்கிட்டு வர்றேன். எழுநூறு பாடல்களை நெருங்கிக்கிட்டிருக்கேன். ஒவ்வொரு பாட்டுக்கும் புதுக் குரலை மியூஸிக் டைரக்டர் அறிமுகப்படுத்துறதால நிறைய பாடகர்கள் வந்துட்டாங்க. போட்டி கடுமையா இருக்கும்ங்கிறது உண்மைதான். ஆனா, சுசிலா, ஜானகி, சித்ரா, ஹரிணினு இவங்க எல்லாம் சினிமாவுல நீண்டகாலம் நீடிச்ச அளவுக்கு இப்போ உள்ள பாடகர்களால முடியாதது வருத்தம்தான்!''

பாடகிகளும் கவர்ச்சி உடை அணிந்து பாடி, ஆட வேண்டிய சூழல் வந்திருச்சே?

''நான் அப்படியெல்லாம் பண்ணமாட்டேன். எனக்குப் பாட்டுதான் முக்கியம். பார்க்க ரொம்பப் பாரம்பரியமா இருக்கிறதுதான் என் ஸ்டைல். நான் எப்பவும் திருநள்ளாறு தியாகராஜர் சன்னதியோட விபூதியை வெச்சுகிட்டுதான் மேடை ஏறுவேன். மேடையில பாடுறப்போ மார்டனா இரு, மத்தவங்க மாதிரி டிரெஸ் பண்ணிக்கோன்னு நிறைய பேர் சொல்லிட்டாங்க. ஆனா கவர்ச்சி உடைகள்ல எனக்குத் துளிகூட விருப்பம் இல்லை. அதேபோல, பாடகிகள் காம்பியரிங், டப்பிங்... எல்லாம் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. எனக்கு நல்லா பாடறதிலும் கர்நாடக சங்கீதத்தை இன்னும் முழுமூச்சா கத்துக்கறதுலயும் தான் விருப்பம். இப்போ கச்சேரிகளும் பண்ண ஆரம்பிச்சுட்டேன்.''

இசையமைப்பாளர் ஜீ.வி.பிரகாஷுடன் காதல்னு கிசுகிசு வந்ததே?

''ஜீ.வி பிரகாஷ் இசையில நான் பாடின முதல் பாட்டே 'ஆருயிரே' தான். அந்தப் பாட்டை நான் பாடணும்னு டைரக்டர் விஜய் விருப்பப்பட்டார். மத்தபடி, ஜீ.வியுடன் காதல்னு வந்த செய்திகளை நான் பொருட்படுத்தவேயில்லை.''

- மலர்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**
பொறுப்பாசிரியர் :
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**
ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : **ரூ.500/-**
வெளிநாடு : **ரூ.3,800/-**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

● ஆர்.நாகராஜன், சென்னை - 117

? ஊழல் அமைச்சர்கள்மீது கர்நாடக ஆளுநர் நடவடிக்கை எடுப்பதுபோல, சில மத்திய அமைச்சர்கள் மீது ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாரா?

! கர்நாடக ஆளுநர் நடவடிக்கை எடுக்க முடியாது. அறிவுரை வழங்க மட்டுமே முடியும். அதேபோல் ஜனாதிபதியும் மத்திய அரசுக்கு ஆலோசனைகள் வழங்க இயலும். இருவரும் மீடியாவை நாடாமல் முதல்வரை அல்லது பிரதமரை அழைத்துப் பேச வேண்டும் என்பது மரபு.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

? கலைஞர் - ஜெயலலிதா அறிக்கைப் போரால் நாட்டுக்கு என்ன நன்மை?

! அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் எப்படித் தாக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்கான பாடமாகக் கொண்டால் நன்மையே!

● கல்யாணி பாலு, திருநெல்வேலி

? உமாசங்கர், ஐ.ஏ.எஸ். இடைநீக்கம், 'நேர்மையான அதிகாரிகளுக்கு இதுதான் கதி' என்ற தவறான சமிக்ஞையை இதர அதிகாரிகளுக்குக் கொடுத்து, நல்ல நிர்வாகத்தைக் கெடுத்துவிடாதா?

! அது, அவர் பணியில் சேரும்போது சமர்ப்பித்த ஜாதிச் சான்றிதழ் நிஜமா, போலியா என்பதைப் பொருத்தே அமையும். போலியாக இருப்பின், பதவி வகித்தபோது அவர் எவ்வளவு நேர்மையானவராக இருந்திருப்பினும் அவரது செயல்பாடுகள்மீது சந்தேக நிழல் படியும்.

● கோதை ஜெயராமன், மீஞ்சூர்

? சாமானியர் காமராஜரா? கருணாநிதியா?


! ஒருவர் சாமானியர்; மற்றவர் சமாலியர்!

● ஏ.எஸ்.யோகானந்தம், ஔவையார்பாளையம்

? குருக்ஷேத்ரா தொகுதி காங்கிரஸ் எம்.பி. நவீன் ஜிண்டால், தமது ஐந்தாண்டு சம்பளத்தைப் பள்ளிக் குழந்தைகளின் கல்விக்காக நன்கொடையாக்கியிருப்பது பற்றி?



நீங்கள் கேட்டவை




● போரால்...




● ... பாடம்!



● சான்றிதழ் சர்ச்சை



● போலிக் கறை!



● பயனற்றப்பேச்சு!

சாமானியர் காமராஜரா? கருணாநிதியா?

! தமது சம்பளத்தை வழங்கியதோடு, மத்திய அரசு ஆரம்பக் கல்விக்கும் இடைநிலைக் கல்விக்கும் ஒதுக்கியிருக்கும் பல கோடி ரூபாய் முறையாகப் பயன்பட உதவினால் இன்னும் சிறப்பாக இருக்கும். கல்வி ஒன்றுதான் இந்தியாவின் உண்மையான முன்னேற்றம்.

● **ஆர்.ராஜதுரை, சீர்காழி**

? தமது வாழ்க்கை வரலாற்று நாவலின் கையெழுத்துப் பக்கத்துக்காக 'ரத்தம் சிந்திய' சச்சின் பற்றி...?

! நல்ல வேளையாக அது தவறான செய்தி என்று சச்சின் சொல்லிவிட்டார்! ஆட்டத்துக்காக மட்டுமின்றி, அறிவுடைமைக்காகவும் வாழ்த்துக்குரியவராகிறார்.

● **என்.எஸ்.மணிமாறன், திருவண்ணாமலை**

? ''இலங்கைப் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவி புரியவே யாழ்ப்பாண மருத்துவ முகாமுக்குச் சென்றேன்'' என்கிறாரே அசின்?

! வீராவேசப் பேச்சு, கடையடைப்பு, கறுப்புக் கொடி, கண்டன ஊர்வலத்தைவிட, அசினின் பணி ரணத்தை ஓரளவேனும் ஆற்றியுள்ளதைப் பாராட்டத்தான் வேண்டும்.

● **பி.ஜெயபிரகாஷ், பொள்ளாச்சி**

? 'அத்துமீறி தங்கள் மாநிலத்துக்குள் நுழைந்த சந்திரபாபு நாயுடுவுக்குக் கைதி உடையைப் போட்டு, சாப்பிட தட்டையும் குவளையையும் தந்து சிறையில் தள்ளியிருக்க வேண்டும்' என்று பால் தாக்கரே சொல்லியுள்ளது பற்றி..?

'மஹாராஷ்டிரம் தமக்கே சொந்தம்' என்பது போல் நடந்து கொள்ளும் தாக்கரேயின் அரசியல் அநாகரிகங்கள் பேசவும் கேட்கவும் தற்காலிகக் கிளுகிளுப்பை அளிக்கும். நிரந்தரப் பயன் தராது. பெரும்பான்மை மக்கள் ஒதுக்கியும் ஒதுங்கியும் போய்விடுவார்கள்.

● **ச.சங்கீத சரவணன், கூறைநாடு** ✱

? தமிழ்நாடு முழுவதும் போலிகள் ஜாலியாக உலா வருகிறார்களே - கவனித்தீர்களா?

! போலி சாமியார், போலி மருந்து, போலி டாக்டர்,

போலிச் சான்றிதழ் - தமிழக அரசின் ஆரோக்கியம் போலியோ தாக்கியது போல சூம்பத் துவங்கியுள்ளது!



● விரட்டும் ஐந்து!

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? "நீ ஒரு நடிகன்; ஹீரோ மட்டும் கிடையாது. சண்டைபோடு, டூயட் பாடு! ஆனால் இரண்டு படங்களில் நல்லா நடிச்சுடு!" என்று ரஜினி சூர்யாவுக்கு அட்வைஸ் கொடுத்துள்ளாரே... இரண்டு படங்களில் நன்றாக நடித்தால் போதுமா?



● முக்கிய...

● ... இரண்டு



! போதும். சூப்பர் ஸ்டார் சொன்னது மிகச் சரி. அந்த இரண்டு படங்கள், ஒரு நடிகனை வாழ்க்கை முழுவதும் ஞாபகம் வைத்துக் கொள்ளப்போதும்.

● ஏ.சுகுமார், காட்பாடி

? தன் காதலனைப் பழிவாங்க, அவனது மூன்றரை வயது மகனைக் கொலை செய்த இளம் பெண்ணின் செயல்..?

! மன்னிக்க முடியாததுதான். அப்பெண் இந்நிலைக்கு வர, அவனது வாரிசைக் கலைத்தது; அவளை ஏற்றுக்கொள்ள மறுத்தது - இக்குற்றங்களுக்குப் பின்னால், தண்டனை பெறாமலிருக்கும் ஆணாதிக்க அராஜகத்தை நாம் மறந்துவிடுவதும் மன்னிக்க முடியாததுதான்.

● எஸ்.ஜெயகாந்தன், புன்செய்புளியம்பட்டி

? "என் வெற்றிக்குப் பின்னால் ரசிகர்கள்தான் உள்ளனர்" என்கிறாரே விஜய்!

! வரிசையாக ஐந்து தோல்விகளைக் கொடுத்த ரசிகர்களை, விஜய் என்ன கடிந்துகொள்ளவா முடியும்? தாஜா பண்ணத்தான் வேண்டும்!

● எஸ்.ராமசாமி, வடக்கு தயிர்பாளையம்

? "மாவோயிஸ்ட்கள் மீதான நடவடிக்கை திருப்தி அளிக்கவில்லை; அதற்கு ப.சிதம்பரம்தான் பொறுப்பு", என காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக் விஜய் சிங் குறைகூறியிருப்பது சரியா?

! கூறிய விஷயமும் தவறு; சொன்ன விதமும் தப்பு. நாக்ஸலைட்டு, மாவோயிஸ்டு ஆகியோரைக் கட்டுக்குள் வைப்பது மாநில அரசுகளின் கடமை. மத்திய அரசின் உதவி கோரினால் வழங்கப்படும். இதுவே இன்றைய நிலைமை. கூட இருந்து குழி பறிக்காமல், திக் விஜய் சிங், கட்சி மட்டத்தில் ஆலோசனை நடத்தி அரசுக்கு வழி காட்டுவது நலம்.

❐ ரூ.150 பரிசு பெறுபவர் : கல்யாணி பாலு, திருநெல்வேலி

✱ ரூ.75 பரிசு பெறுபவர் : ச.சங்கீத சரவணன், கூறைநாடு

விஜய் விரும்பிய ஆந்திரப் புயல்!



ஹன்சிகா மோட்வானி - விஜய்யின் 'வேலாயுதம்' படத்தின் மெயின் ஹீரோயின். ஜெனிலியாவின் நடிப்பில் மனம் லயித்த விஜய், அவரை 'வேலாயுதம்' படத்தின் ஹீரோயின் ஆக்கிக் கொண்டாலும், அவரோடு ஏற் கெனவே நடித்த 'சச்சின்' சரியாகப் போகா ததையும் கவனத்தில் வைத்துத்தான் மெயின் ஹீரோயினாக மோட்வானியை டிக் பண் ணினாராம். என்னதான் அழகு... நடிப்பு.. என ஆயிரம் ப்ளஸ்கள் இருந்தாலும் அதிர்ஷ்டத்துக்கும், நேரத்துக்கும் முக் கியத்துவம் கொடுப்பது கோடம்பாக் கத்தின் குலவழக்கம் அல்லவா? அந்த வழக்கப்படி ஆந்திரப் புயல் 'மோட்வானி'யை மோஸ்ட் வான்டட் ஹீரோயினாக்கி விட்ட னர். அம்மணி ஆந்திரத்தில் தொட்ட தெல்லாம் துலங்கியதால், தமிழகத்தின் ரசிகர் களின் கனவுக்கன்னியாகப் பதவி உயர்வு. தேச முத்துடு, ஜெய்பவா, ராஜகொடுக்கு... என்று நீண்டுகொண்டே போகிறது மோட்வானியின் ஹிட் பட லிஸ்ட். அனுஷ்கா, இலியானா, காஜல் அகர்வால்... என முன்னணி நடிகைகள் அனைவரையும் பின்னுக்குத் தள்ளி விட்டு தன் திறமையால் முன்னணிக்கு வந்தவர் என்ற குட் இமேஜ் வேறு மோட்வானி மீது. எனினும், எந்த வெற்றி மமதையையும் சிரசில் ஏற்றிக் கொள்ளாத புத்திசாலி என்ற நல்ல பெயரும் அம்மணிக்கு இருப்பதால் அடித்தது விஜய்யின் 'வேலாயுதம்' ஜாக்பாக்ட். 'அன்று மலர்ந்த பூ போல' ஹீரோயின் வேண்டும் என்ற விஜய்யின் வாக்கை, வேதவாக்காக எடுத்துக்கொண்டு தேடிய இயக்குநர் ராஜாவின் முதல் சாய்ஸ்தான் இந்த மோட்வானி என்ற பேச்சும் உண்டு.

சினிமாவில் ரஜினி ரூட்டில் பயணிக்கும் விஜய்க்கு, அண்ணாமலை படத்தில் ரஜினி ஏற் றிருந்த 'பால்காரன்' வேடம்தான் வேலாயுதம் படத்தில் விஜய்க்கும். தங்கைக்காக எதையும் செய்யத் துணியும் அண்ணன், மக்களுக்காக தங்கையைத் துறப்பதுதான் வேலாயுதத்தின் ஒன் லைன் ஸ்டோரி. வேலாயுதத்தை வெற்றிப் படமாக்க வேண்டும் என்பதில் ரொம்பவும் கவனமாக இருக்கிறாராம் விஜய். தொடர் தோல்விகள் கொடுத்த பாடமும் இதற்கொரு



காரணம். மேலும், 'ஜெயம் ராஜா' முதன் முறையாக கதை எழுதி இயக்கும் படம் என்பதால் வேலா யுதத்தின் வெற்றி முக்கியம் என்கின்றனர் படக் குழுவி னர். நல்ல நேரம் பார்த்து ஹைதராபாத்தில் சண் டைக் காட்சிகளைச் சுடச் சுடச் சுட ஆரம்பித்து விட் டனராம். 'ஆந்திரப் புயல்' கரை கடந்த நேரம் விஜய்க் கும், ராஜாவுக்கும் நல்ல நேரமாக இருக்குமா?

– மகிமைராஜன்

சென்னைப் பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் பொன்னுசாமி, தன் கீழ் ஆராய்ச்சி படிப்பில் ஈடுபட்ட மாணவி மீது பாலியல் கொடுமை புரிந்ததாகப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு அவரை இடைநீக்கம் செய்திருக்கிறது. இதே போன்ற மற்றொரு புகாரால், சென்னை மாநிலக் கல்லூரி பேராசிரியர் மாதவன் மீதும் காவல்துறையில் முதல் தகவல் அறிக்கை பதிவாகியிருக்கிறது. எனில், இனி மாணவர்கள் 'ஐயோ வேண்டாம் ஆராய்ச்சிப் படிப்பு' என அலறத்தான் வேண்டுமா?

காட்சி-1 -வசூல் மாஸ்டர்

கோவை மாவட்டம் பல்லடம் தாலுகாவைச் சேர்ந்த மாணவர் அவர். நெசவாளர் குடும்பம். மிகவும் கஷ்டப் பட்டு மொழியியல் படிப்பில் பட்ட மேற்படிப்பு முடித்தபின், ஆராய்ச்சியில் முனைவர் பட்டம் வாங்கும் ஆர்வம் தொற்றிக்கொண்டது. ஒரு பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம்பெற்ற கல்லூரி யின் துறைத் தலைவரை வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு படிப்பைத் துவக்கினார். 'மாதா மாதம் ஐந்தாயிரம் கொடு; பத்தா யிரம் கொடு' என்று 'அன்புத் தொல்லை' கொடுத்திருக்கிறார் வழிகாட்டி. படிப்பை விட்டுவிட்டு ஓடி விடலாமா என்று விழி பிதுங்கி நிற்கிறார் மாணவர்.

காட்சி - 2 : குற்றமும் தண்டனையும்

பல்கலைக்கழகத்தின் துறைத் தலை வராக வரவேண்டியவர் அவர். அவரிடம் ஆராய்ச்சிப் படிப்பு படிக்க வந்த ஒரு மாணவியிடம், தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சி செய்திருக்கிறார். துணிந்து அவரைப் பற்றி புகார் செய்தார் மாணவி. பின்னர் ஒரு கமிட்டி அமைக் கப்பட்டு, குற்றச்சாட்டு உண்மை என்று கண்டறியப்பட்டது. அவர் இடைநீக்கம் செய்யப்பட்டு, துறைத் தலைவர் பதவி யும் மறுக்கப்பட்டது. இது சமீபத்திய செய்தி.



இந்தியாவில் முனைவர் பட்டத்துக்கான பி.ஹெச்.டி போன்ற ஆராய்ச்சிப் படிப்பைத் தொடரும் மாணவ- மாணவியரின் எண்ணிக்கை லட்சத்துக்கும் மேல். நூற்றுக்கும் மேற் பட்ட சப்ஜெக்ட்டுகளின் கீழ் ஆராய்ச்சி மேற்கொண்டு வரும் இவர்கள் சந்திக்கும் பிரச்னை வெளிச்சத்துக்கு வருவதில்லை. இவர்களில் ஐ.ஐ.டி. மற்றும் மத்திய - மாநில அரசுகளின் ஆராய்ச்சி மையங்கள், பல்கலைக் கழகங்கள்... ஆகியவற்றில் முழு நேரமாகப் படிப்பவர்களுக்கு மத்திய-மாநில அரசின் மற்றும் பல்கலைக்கழக மான்யக் குழுவின் மாத உதவித் தொகைக் கிடைக்கும். அதுவும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குத்தான். ஆனால், இன்று நூற்றுக் கணக்கானோர் இந்தக் காலகட்டத்தையும் தாண்டி மேலும் சில வருடங்கள் படிப்பைத் தொடரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதற்குக் காரணம், வழிகாட்டியின் 'இழுத்த இழுப்புக்கு' அவர்கள் உடன் படாததுதான். அதிலும் மாணவிகளின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது. முழு நேர ஆராய்ச்சி படிப்பு மாணவர்கள் தவிர, கல்லூரி பேராசிரியர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரிபவர்கள், ஆர்வம் காரணமாகவோ அல்லது பதவியில் ஏற்றம் பெறவோ ஆராய்ச்சிப் படிப்பைப் பகுதி நேரமாக மேற் கொள்கிறார்கள். இவர்கள் வழி காட்டிகளின் அலட்சியம் காரணமாகவும் காலவரையறையைத் தாண்டி 'படித்துக்' கொண்டேயிருக்கிறார்கள். இவர்களில் சில புத்திசாலி(?) மாணவர்கள் குறுக்கு வழியில் கொஞ்சம் பணத்தை வெட்டி 'தீஸிஸ்' தயார் செய்து முனைவராகி விடுகிறார்கள். இவர்களுக்கு உதவ சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில்

மூன்று 'முழுநேர' பேராசிரியர்களே இருக்கிறார்கள்.

''ஆராய்ச்சி மாணவர்களைச் சின்னச் சின்ன வேலைகளுக்கு, வழிகாட்டிகள் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற உண்மையை மறுப்பதற்கில்லை'' என்கிறார் சென்னையைச் சேர்ந்த வழிகாட்டியான ஒரு பேராசிரியர். ''குறிப்பாகச் சொல்வதென்றால் ரயில்வே டிக்கெட் ரிஸர்வ் செய்து தரச் சொல்வது; வழிகாட்டியின் குழந்தைகளுக்கு டியூஷன் எடுக்கச் சொல்வது, மின்கட்டணம் கட்ட பால் கார்டு வாங்க அனுப்புவது... போன்றவற்றைச் சொல்லலாம். எல்லா வழிகாட்டிகளும் மோசமானவர்கள் அல்ல; படா கில்லாடி மாணவ-மாணவிகளும் இருக்கிறார்கள். களத்தில் பாடுபட்டு உழைக்காமல், வலைதளத்திலிருந்து லட்டாக விவரங்களைப் பெற்று அரை குறையாகப் பேப்பர்கள் தயாரித்தால் வழிகாட்டிக்குக் கோபம் வரத்தானே செய்யும். பாலியல் பிரச்னைகள் இல்லையென்று சொல்ல முடியாது. நேரம் காலம் இல்லாமல் ஆய்வகத்தில் ஆராய்ச்சி செய்யும் மாணவிகளுக்கு ரிஸ்க் உண்டு. ஆனால், பொதுவான விழிப்புணர்வு, மீடியாவின் தொடர் கண்காணிப்பு ஆகியவற்றால் பாலியல் புகார்கள் மிகக் குறைந்து கொண்டு வருகின்றன'' என்கிறார் அந்த வழிகாட்டி.



திருவாசகம்

'' 'பாலியல் புகார் வந்தால் கமிட்டி போட்டு விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்ற யு.ஜி.ஸி.யின் சுற்றறிக்கையை எல்லோர் பார்வைக்கும் கொண்டு சென்றதால் கோபப்பட்டு என்னை முறைத்தனர் சில ஆசிரியர்கள்'' என்கிறார் ஓய்வுபெற்ற பதிவாளர் ஒருவர். ஒருசில பேராசிரியர்கள் தங்கள் முழு நேர மாணவ - மாணவிகளிடம் நியாயமாக நடந்து, வழிகாட்டி கைதூக்கி விடுவார்கள். அதேசமயம் பகுதி நேர ஆராய்ச்சியாளர்களாக இருக்கும் அரசு அதிகாரிகள், போலிஸ் அதிகாரிகள் ஆகியோர்களைப் 'பயன்படுத்தி'யும் கொள்வார்கள்.

''நீங்கள் குறிப்பிடுகிற எல்லா பிரச்னைகளும் இருக்கத்தான் செய்கின்றன. வழிகாட்டிகள் மாணவ-மாணவிகளைத் தங்கள் சொந்தக் குழந்தைகள் போல் எண்ணினால் இதுபோன்ற எந்தப் புகாரும் வராது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'பச்சைப் பெட்டி' வைத்திருக்கிறோம். பெயர் சொல்லியோ, சொல்லாமலோ புகார் எழுதிப் போடலாம். கண்டிப்பாக விசாரிப்போம். ஆறு மாதத்துக்கு ஒருமுறை ஆராய்ச்சி மாணவ-மாணவிகளைக் கூட்டி அவர்கள் பிரச்னைகளைக் கேட்கிறோம்.

ஆசிரியர் தொழில் புனிதமானது. பொறுப்புமிக்கத் தலைமுறையை உருவாக்கும் கடமை அவர்களுக்கு உண்டு'' என்கிறார் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருவாசகம்!

– ப்ரியன்

மை... பைக்!



சிறு கிராமம் ஒன்றில் பிறந்து வளர்ந்த, பயந்த சுபாவமுள்ள எனக்கு முப்பத்தைந்தாவது வயதில் முக்கிய திருப்பம் ஏற்பட்டது. முதல் குழந்தையின் படிப்புக்காகப் போக்குவரத்துக்கு ரொம்பவும் கஷ்டப் பட்டோம். அடுத்தது இரட்டைக் குழந்தைகள் (முதல் பெண், இரண்டாவது இரண்டும் பெண் குழந்தைகள்). எப்படிப் பள்ளிக்கு அனுப்புவது என்று யோசித்த போது, என் கணவர் விளையாட்டாக ஸ்கூட்டர்ல கொண்டு போய் விடுகிறாயா? என்று கேட்க, நானும் பயத்தோடு தலை அசைத்தேன்.

சைக்கிளைக்கூட தொட்டுப் பார்த்திராத எனக்கு, மனத்தில் என் குழந்தைகளின் படிப்பு மட்டும்தான் ஒரே இலட்சியமாக இருந்தது. 'பிள்ளையாரின் அருளோடு' பாரதியின் 'அச்சமில்லை... அச்சமில்லை' என்ற பாடலை மனத்தில் இருத்தி, ஸ்கூட்டர் ஓட்டக் கற்றுக்கொண்டேன். இதோ... வெற்றிகரமாக நான் ஸ்கூட்டரில் வலம் வரும் இது 12-வது ஆண்டு!

- தா.பாக்கியலட்சுமி, ஆறுமுகநேரி

'தமிழ்நாடு காங்கிரஸ் கருணாநிதி காலில் வீழ்ந்து கிடக்கிறது' என்று நெல்லை கண்ணன் கல்கிக்கு அளித்த பேட்டி குறித்து, மூத்த காங்கிரஸ் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பீட்டர் அல்போன்ஸிடம் கருத்து கேட்டோம். விரிவாகப் பேசினார் அல்ஃபோன்ஸ்.

"ஒவ்வொரு பிரச்னையிலும் இரண்டு விதமாகப் பார்க்கக்கூடிய கட்டாயம் காங்கிரஸுக்கு இருக்கிறது. ஒன்று தேசிய அளவிலான பார்வை. மற்றொன்று மாநிலங்களின் கோணத்தில் பார்ப்பது. இந்த அளவுகோல்களுக்குள் காங்கிரஸ் கட்சியின் அரசியல் ரீதியான செல்வாக்கை உயர்த்தும்வகையில் செயல்பாடுகள் இருக்கும். அதே சமயம் இறையாண்மையைக் காத்து மதச்சார்பற்ற அணியைப் பலப்படுத்தும் தேசிய நோக்கமும் எங்கள் செயல்திட்டத்தில் அடக்கம். கட்சி நலனுக்குச் சரி என்று படுவது தேசிய நலனுக்கு எதிராக இருக்கக்கூடும். தேச நலன் என்று வரும்போது கட்சியைக் காவு கொடுக்க வேண்டிவரும். 'நானையா?', 'கட்சியா?' என்றால் கட்சிதான் பெரிசு. 'கட்சியா?', 'தேசமா?' என்றால் தேசம்தான் முக்கியம். இந்த வகையான எங்கள் நிலைப்பாடு தேசிய அளவிலும், மாநில அளவிலும் எங்களுக்குச் சில இடையூறுகளையும் அவமானங்களையும் சுயமரியாதை இழப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஒருபுறம் மாவோயிஸ்டுகளின் அட்டகாசம்; மற்றொருபுறம் உலகமயமாதல் சூழலில், இந்தியப் பொருளாதார ஏற்றத்துக்காக முதலீடுகளை அனுமதிக்கும் நிலை; அரசியல் சமூக அமைப்பில் ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு. இவற்றுக்கிடையே பலவிதமாகப் பிரிந்துகிடக்கும் அரசியல் சக்திகளை அனுசரித்தும் அரவணைத்தும் மத்திய ஆட்சியையும் கட்சியையும் நடத்த வேண்டும். எனவே, காங்கிரஸில் முடிவுகள் எடுப்பதில் பல சிரமங்களும், எடுத்த முடிவில் பல விமர்சனங்களும் இருப்பது இயல்பே. தமிழ்நாட்டில் கட்சியின் நிலைப்பாடும் இதில் அடக்கம்."

தமிழ்நாடு காங்கிரஸ் சுயமாக இயங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயம் தானே?

"இனி தமிழகத்தில் 'தனித்து' ஆட்சி கிடையாது!"

"இன்று என்ன சூழல்? பா.ஜ.க.வும் இடதுசாரிகளும் கைகோத்துக் கொண்டு பாராளுமன்றத்தில் காங்கிரஸைத் தர்மசங்கடத்தில் தள்ளுகின்றன. கிடைக்கும் முதல் வாய்ப்பில் ஆட்சியைக் கவிழ்க்கத் துடியாய்த் துடிக்கிறது பா.ஜ.க. இந்த நிலையில் தங்கள் கட்சிக்கு அரசியல் ரீதியாகப் பிரச்னை என்றாலும் காங்கிரஸை உறுதியுடன் ஆதரித்து வரும் மாநிலக்

கட்சியின் ஆதரவை இழந்து பலவீனப்பட வேண்டுமா? கட்சித் தலைமைக்கு உள்ள நெருக்கடிகளையும் சவால்களையும் புரிந்துகொள்ளாமல் இங்கே மேடையில் சிலர் லாவணி பாடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனுகூல சத்ருக்கள். வெறும் தத்துவம் மட்டுமே பாராளுமன்ற ஜனநாயகத்தில் வெற்றியைத் தந்துவிடாது.''

காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைக்குமா?

''தமிழ்நாட்டில் மட்டுமல்ல. அகில இந்திய அளவிலும் எந்த ஒரு தனிக்கட்சியும் தனித்து ஆட்சி அமைப்பது அடுத்த முப்பது ஆண்டுகளுக்குச் சாத்தியமல்ல. ஒவ்வோர் ஊரிலும் முரண்பட்ட அரசியல் சக்திகள் உள்ளூர்ப் பிரச்னை தொடர்பான செல்வாக்கில் வளர்கின்றன. மக்கள் பிளந்து கிடக்கிறார்கள்; பொது நன்மை என்றில்லாமல் 'சுயநலம்' பெருத்துப் போய்விட்டது. வெவ்வேறு கட்சிகளில் இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட பிரச்னைக்காகக் கைகோக்கும் நிலை. உதாரணம் தெலுங்கானா பிரச்னை. வலுவான கூட்டணியே வெற்றிக் கம்பத்தைத் தொடும். இதுதான் தமிழ் நாட்டிலும் நிலைமை. அந்த வகையில் காங்கிரஸ், தமிழ்நாட்டில் ஒரு முக்கிய தவிர்க்க முடியாத சக்தியாக இருக்கிறது. கடந்தகாலத்தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். காங்கிரஸைத் தவிர்த்துவிட்டு இங்கே யாரும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது.''

அது என்ன கடந்த காலத் தவறுகள்?

''அமரர் எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு ஜானகி அம்மாள் வேண்டுகோளை ஏற்று அரசு நடத்தும் வாய்ப்பு காங்கிரஸுக்குக் கிடைத்தது. கோட்டைவிட்டோம். 1996ல் ரஜினி காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைய பாடுபடுவதாகச் சொன்னார். யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாத தலைமை அதைப் புறக்கணித்தது. தனித்து ஆட்சி குறித்தோ, அல்லது தோழமை கட்சியின் போக்குக் குறித்தோ பேச வேண்டிய இடம் பொதுக்கூட்டம் அல்ல; உட்கட்சி அரங்கம். மாலை நேர கைதட்டலுக்காகப் பேசுவது நிலைமையை மேலும் சிக்கலாக்கும். முதலில் காங்கிரஸ் எங்கே போக வேண்டும் என்ற வரைபடத்தைத் தயார் செய்யுங்கள். அதை அடையும் பாதையை ஒருமித்த குரலில் தலைமைக்குச் சொல்லுங்கள். இதை விட்டு விட்டு ஒரு நல்லிணக்கச் சூழலைப் பாழ்படுத்தி கட்சியைப் பலவீனமாக்கிவிடாதீர்கள்.''

- ப்ரியன்



பீட்டர் அல்ஃபோன்ஸ்



கல்கி



2010 ஆகஸ்ட் 8
விக்ருதி ஆடி 23
மலர் : 69
இதழ் : 2

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


புதைசேற்றில் அமெரிக்கா!

திருடனுக்குத் தேள் கொட்டியது போன்ற நிலையில் சிக்கியுள்ளது அமெரிக்கா! ஆஃப்கானிஸ்தானுக்கு எதிரான யுத்தத்தில் அந்த நாடு செய்த அநீதிகளும் அக்கிரமங்களும் அம்பலமாகியிருக்கின்றன. ராணுவத்தைச் சேர்ந்தவர்களே ரகசிய ஆவணங்களை 'விக்கி லீக்ஸ்' என்ற இணையதளத்துக்கு ரகசியமாகத் தர, அத்தளத்தின் மூலம் அமெரிக்கா பேரிலான உலகறிந்த குற்றச்சாட்டுகளுக்கு வலுவான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அவற்றை மறுக்க முடியாத அமெரிக்கா, ஆவணக் கசிவுக்குக் காரணமானவர்களைத் தேசத் துரோகக் குற்றம்சாட்டி, விசாரணை நடத்த முற்பட்டிருக்கிறது! இதனால் உலகின் கவனம் திசை திரும்பி விடாது.

ஜனநாயகம், சுதந்திரம் என்று கொட்டி முழக்கும் அமெரிக்கா, பிற நாடுகளின் விவகாரத்தில் மூக்கை நுழைத்துக் கட்டுப்படுத்த முயற்சி செய்கிறது. இந்த ரீதியில்தான் ஆஃப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்கத் தாக்குதல்கள் நிகழ்ந்து வருகின்றன; அமெரிக்க ஆக்கிரமிப்பு நீடிக்கிறது. இந்தத் தாக்குதல்களுக்கு முகாந்திரமே இல்லை என்பதைக் கசிவுகள் உறுதிசெய்கின்றன. ராணுவம் நிகழ்த்திய மனித உரிமை மீறல்களையும் அராஜகக் கொடூரங்களையும் அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்களையும் ஆதாரத்துடன் பிட்டுப்பிட்டு வைக்கின்றன.

அது மட்டுமல்ல... ஆஃப்கானிஸ்தான் பேரில் தாக்குதல்





தொடர்வதற்குச் சௌகரியமாக, பாகிஸ்தானில் அமெரிக்கா கால் ஊன்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த நாடு ஆதரித்து வளர்க்கும் பயங்கரவாதம் அனைத்தையும் அமெரிக்கா கண்டும் காணாமல் இருந்து வருவதையும் 'விக்கி லீக்ஸ்' கசிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. இன்றைய பாக். ராணுவ தளபதி பர்வேஸ் கயானி அந்நாட்டின் முன்னாள் உளவுத் துறைத் தலைவராக விளங்கியவர். அவர் தலைமையில் ஊக்குவிக்கப் பட்ட தாலிபான் தொடர்பு குறித்து பல செய்திகள் கிடைத்துள்ளன.

அமெரிக்கா எதனால் இந்தப் புதை சேற்றில் சிக்கியது? ஏன் இதிலிருந்து மீள முயற்சி மேற்கொள்ளாமல் யுத்தத்தை நீடிக்கச் செய்கிறது..?

உலகில் மிக அதிகமாகப் போர்த் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் நாடு அமெரிக்கா. இந்த உற்பத்தி முழுதும் தனியார் வசம். உலகில் எங்கு யுத்தம் நடந்தாலும் இந்த உற்பத்தி நிறுவனங்களுக்குக் கொள்ளை லாபம்; எங்கு யுத்தம் நின்றாலும் அவற்றுக்கு லாபம் குறைந்துபோகும்! அவ்வாறு குறைந்துபோகாமல் பார்த்துக்கொள்ள, உற்பத்தியாளர்கள் அமெரிக்க அரசியல்வாதிகளைக் கைக்குள் போட்டுக் கொள்வதும், அந்த அரசியல்வாதிகள் உலகில் போர்ச் சூழல் மாறிவிடாதவாறு அரசியல் கொள்கைகளைச் 'சரிகட்டிக்' கொண்டு போவதுமாகத்தான் இத்தனை காலமும் நிகழ்ந்து வந்திருக்கிறது.

இந்த அவலத்தை நேரடியாக ஒத்துக்கொள்ளாவிட்டாலும், பிற நாடுகள் பேரிலான ஆக்கிரமிப்புக் கொள்கையை மாற்றுவதாகவும் குறிப்பாக ஆஃப்கான் யுத்தத்தை விரைந்து நிறுத்துவதாகவும் தேர்தல் வாக்குறுதி அளித்தார் அதிபர் ஒபாமா.

அதனை நிறைவேற்ற இதுவே உகந்த தருணம். கசிவுக்குக் காரணமானவர்களைக் கண்டிப்பதும் தண்டிப்பதும் அமெரிக்க ராணுவக் கட்டுப்பாட்டைப் பாதுகாப்பதற்கு அவசியமே. ஆனால் அதைவிட அவசியம் அவசரம் - ஒபாமா தமது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதுதான்! ●

இது புதுசு

மொபைல் ஸ்பெஷல்



Nokia 5130C
விலை: ரூ.4,949

Nokia 2700C
விலை: ரூ.3,769

நடுத்தர மக்கள் அதிகம் விரும்பும் செல்ஃபோன்கள் இவை. இரண்டிலுமே உள்ள பொதுவான அம்சங்கள்...

கேமரா,
எஃப்.எம். ரேடியோ
ப்ளூ டூத்
வீடியோ மற்றும் வாய்ஸ் ரெகார்டிங்
4GB வரை மெமரியை விரிவு படுத்தலாம்.



Nokia N 97m
விலை: ரூ.18,519



Nokia X6
விலை: ரூ.15,919

கீழ்க்கண்ட மாடல்களின் முக்கியமான அம்சம், டச் ஸ்க்ரீன் டிஸ்ப்ளேதான். இதைத் தவிர GPS, GPRS, wi-fi, bluetooth... இவைகளும் இதில் இருக்கின்றன.

Nokia 5233 / 5230 / 5235:



I Phoneகள் வாங்கிக் கட்டுப்படியாகவில்லையா? (ரூபாய் 40,000). ஆனால், அதில் உள்ள அத்தனை அம்சங்களும் இருக்கும் **Sony EricssonXperia X 10** இப்போது பிஸினஸ் மக்களுக்கு மத்தியில் பிரபலம்.

இதன் விலை ரூ. 27,949

கூகுல் மேப், கூகுல் டாக், யூட்யூப் என ஏகப்பட்ட விஷயங்களை உள்ளடக்கியிருக்கும் இந்த செல்ஃபோனின் சிறப்பம்சம் **Android OS** தொழில்நுட்பம்தான்.

- சம்பத்குமார்



மோஸ்ட் வாண்டட்!

● பிரேமா ஹரிஹரன், புதுதில்லி

? வாரசூலை என்றால் என்ன?

வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளும் போது கவனிக்க வேண்டிய ஒன்று.

திங்கள் - சனி ஆகிய கிழமைகளில் கிழக்கு நோக்கிப் பயணம் மேற்கொள்ளக் கூடாது.

செவ்வாய் - புதன் கிழமைகளில் வடக்கு திசையில் உள்ள ஊர்களுக்குப் பயணிக்கக் கூடாது.

ஞாயிறு - வெள்ளிக் கிழமைகளில் மேற்கு திசையில் உள்ள ஊர்களுக்குப் பயணம் செய்யக் கூடாது.

வியாழக் கிழமைகளில் தெற்குத் திசை நோக்கிப் பிரயாணம் மேற்கொள்ளக் கூடாது.

இதைச் சூலம் என்று சொல்வார்கள். தவிர்க்க முடியாத காரணங்களால் இந்தக் கிழமைகளில் அவசியம் பயணம் செய்ய வேண்டியிருந்தால் அபிஜித் காலம் எனப் படும் நண்பகல் 12 மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பி விட வேண்டும். உச்சி வேளைக்கு எந்தத் தோஷமும் கிடையாது. தூர தேசப் பயணத்துக்கும் மிக முக்கிய மான வேலைக்காகப் பயணம் செல்லும் போதும் மட்டும் இதைப் பின்பற்றுவது அவசியம்.

● நாகராஜன், நெய்வேலி

? காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலில் உள்ள தங்கப் பல்லி, வெள்ளிப் பல்லிகளைத் தொட்டுக் கும்பிட்டால் பல தோஷம் நீங்கும் என்று கூறுகின்றனரே?

ஆமாம். முற்றிலும் உண்மை.

● காளீஸ்வரன், கோவில்பட்டி

? எனக்கு சிம்மராசி பூரம் 3-ம் பாதம். கடந்த ஐந்தாண்டுகளாக சைனஸ் நோயி னால் அவதிப்படுகிறேன். எப்போது நல்ல ஆரோக்கியம் உண்டாகும்? ஜாதகத்தில் ஏதேனும் தோஷம் இருக்கிறதா? என்ன பரிகாரம்?

வாக்கியப் பஞ்சாங்கப்படி உங்கள் ஜாதகத்தைத் துல்லியமாகக் கணித்துப் பார்த்ததில் பூரம் 2ம் பாதம் வருகிறது. 3ம் பாதம் அல்ல. ஏழரை நாட்டுச் சனி 2005 ஏப்ரலில் துவங்கியுள்ளது. 'சனி பிடித்



நதோ சனி பிடித்ததோ' என்று ஒரு ஜோதிடப் பழமொழிகூட உண்டு. 2011 டிசம்பர் மாதம் சனிப்பெயர்ச்சி ஆன பிறகு நோய் குணமாகி நல்ல ஆரோக்கியம் கிடைக்கும். ஜாதகத்தில் தோஷம் எதுவும் இல்லை. வெறும் ஜலதோஷம்தான்.

பரிகாரம் : உங்களுக்கு ராகு தசையில் கேது புக்தி 3.4.2011 வரை நடைபெறுகின்றது. தினமும் கோளறு பதிகம் படித்து வரவும். சனிக்கிழமைகளில் நவக்கிரக சன்னிதியை ஒன்பது முறை வலம்வந்து வழிபடவும்.

● ஜெயலக்ஷ்மி கரேஜ், சென்னை-18

? எங்கள் வீட்டில் பல வருடங்களாகத் தினசரி நல்லெண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றி வருகிறோம். நெய் தீபம் ஏற்ற வேண்டும் என்று சிலர் சொல்கின்றனர். இதில் எது சரி?

இரண்டுமே சரிதான். தினமும் கிழக்கு முகமாகத் திரி போட்டு நல்லெண்ணெய் தீபம் ஏற்றுங்கள். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் வடக்கு முகமாகத் திரி போட்டு நெய் தீபம் ஏற்றுங்கள். முடிந்தால் தினமுமே இவ்விரண்டு தீபங்களும் ஏற்றலாம். நல்லெண்ணெய் தீபம் கட்டாயம் ஏற்ற வேண்டும்.

● பாமா விஸ்வநாதன், மைலாப்பூர்.

? கோயிலில் நவக்கிரக சந்நிதி அருகில் ஒருவர் எள்ளு சாதம் விநியோகம் செய்து கொண்டிருந்தார். அதை வாங்கிச் சாப்பிடலாமா கூடாதா என்று தெரியவில்லை. அதனால் வாங்காமல் வந்து விட்டேன். நான் செய்தது சரியா?

தவறு. சனீஸ்வரரைப் பகவானின் பிரசாதத்தை பயபக்தியுடன் வாங்கி உட்கொண்டால் நல்லது. கோயிலில் இறைவனுக்கு நைவேத்தியம் செய்யப்பட்ட எந்தப் பிரசாதத்தையும் உதாசீனப்படுத்தக் கூடாது. அருந்துவதற்குப் பயப்படவும் வேண்டாம்.

● சுபஸ்ரீ, நெய்வேலி

? வீட்டில் முருங்கை மரம் வளர்த்தால் கெடுதல் வருமா?

நிச்சயமாக வராது. கம்பளிப்பூச்சிதான் வரும். ●



கை அடக்க செல்பேசி விலையில் மட்டும் ஏகத்துக்கு கையைக் கடித்து விடுகிறது! அதற்கு உதாரணமாகக் காட்டப்படும் டாப் த்ரீ செல் ஃபோன்கள் இதோ உங்கள் பார்வைக்கு மட்டுமே... பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுங்கள்...



GoldVish Le Million : *கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்து சத்தம் போட்டபடியே (அதாங்க, ரிங்டோன்) சாதனை புரிந்திருக்கிறார். திருவாளர் கோல்ட்விஷ் லீ மில்லியனை (செல் ஃபோன்!) அலங்காரப்படுத்தி, அமர்க்களப்படுத்துவது அதைச் சுற்றியுள்ள 1800 வைரக் கற்கள்தான். ரஷ்ய வியாபாரி ஒருவர் தமது மனைவிக்கு இதைப் பரிசளித்து இதன் பெருமையை ரஷ்யாவில் பரவ வழி வகுத்தாராம். எல்லாம் சரி, இதன் விலை : 1.3 மில்லியன் (அவ்வளவு) தாங்க.*

இது கொஞ்சம்

Amosu Diamond Nokia N95 விலை:
24, 475 மட்டுமே. அப்படி ஒன்றும் அதிகமில்லையே என அலட்டலாகக் கூறுபவர்களும் உண்டு. என்ன விளையாடறீங்களா, இதுவும் ஒரு சாதாரண நோக்கியா N95 வகையை சார்ந்ததுதானே, இதுல அப்படி என்ன கூடுதலான விசேஷம் என கூலாகக் கேட்பவர்களுக்கு, இதோ விஷேச விஷயம். இதில் பதிக்கப்பட்டிருக்கும் வைரங்கள் எல்லாமே (325 வைர கற்கள்) அபூர்வ வகை வைரக் கற்கள். அதுமட்டுமில்லீங்க, 18 கேரட் மதிப்புள்ள வெள்ளை தங்கமும் தம் பங்குக்குச் சேர்ந்து இந்த செல்ஃபோனைப் போட்டிப் போட்டுக் கொண்டு அலங்கரிக்கிறது!





Vertu Pink Diamonds Signature

ரோஸ் தங்கம் என்ற ஓர் அரிய வகை கற்களால் உருவாக்கப்பட்ட இந்த செல்ஃபோன் கண்டுபிடிக்கப்பட்ட நாளிலிருந்தே (2005), உலகில் உள்ள பெருவாரியான பணக்காரர்களிடையே உற்சாக வரவேற்பைப் பெற்று வருகிறது. இதன் விலை : 107, 500.



மொபைல் ஸ்பெஷல்

ரோஜாப்பூக்களை மட்டுமே எத்தனை நாட்கள் நமக்குப் பிரியமானவர்க்குக் கொடுப்பது. ஒரு சேஞ்ஜுக்குக் கையில் கொஞ்சம் சேஞ்ஜ் சேர்த்துக் கொண்டு இப்படிபட்ட பரிசு பொருட்களையும் கொடுக்கலாமே

காஸ்ட்லி!

என்று உயர்ந்த எண்ணம் கொண்டவர்கள் தாரளமாக இந்த செல்ஃபோன்களை வாங்கிப் பரிசளிக்கலாம். மற்றவர்கள் இதைப் படித்துப் பொறாமை படலாம்.

- என்.எஸ்.கே.



ஆலயங்களின் அருமையான அங்கம், திருக்குளம். 'நீரின்றி அமையாது உலகு' என்ற வள்ளுவ வரிகளும், 'வரப்புயர' என்ற ஔவையின் வாழ்த்தும், 'மாமழை போற்றுதும்' என்ற சிலம்பின் சீரடியும், 'நீராதாரத்தில்தான் பொருளாதாரம் அடங்கியிருக்கிறது' என்று உணர்த்துகின்றன. 'கோயிலும் குளமும்' என்பதே வழக்குமொழி. புறத்தூய்மைக்கு திருக்குளமும், அகத்தூய்மைக்கு ஆலயமும், அடையாளம்!



நீரில் எரிந்த விளக்கு!

பரிபாடல் காலத்திலிருந்தே புகழ்பெற்ற திருமாலிருஞ்சோலை என்னும் அழகர் கோயிலில், சிலம்பாறுதான் புனித தீர்த்தம். 'நூபுரகங்கை' என்று பெருமையாய்ச் சொல்வார்கள். எப்பேர்ப்பட்ட கோடையிலும், நீர் சுரக்கும் ஜீவசுனை அது. காஞ்சி புரம், அத்திகிரியில் எழுந்தருளியுள்ள வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் திருக்குளம் அனந்தசரஸ். இதற்குள்தான், அத்தி மரத்தால் ஆன வரதரின் திருமேனி பாதுகாப்பாய் வைக்கப்பட்டிருக்கிறது. நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளிப்பட்டு பக்தர்களுக்கு தரிசனம் அளிப்பார் இந்த அத்தி வரதர்.

4448 நோய்களைத் தீர்க்கும் மிருத்திகையை (மண்ணை) மருந்தாகத் தருபவர் வைத்தியநாத ஸ்வாமி. வைத்தீஸ்வரன் கோயில் என்னும் புள்ளிருக்கும் வேளூரில் உள்ள இந்தக் திருக்கோயிலின் 'சித்தாமிர்த தீர்த்தம்' மிகச் சிறப்பு வாய்ந்தது.

இந்தத் தலத்துக்கு வந்து சேர்ந்தான் நையாண்டிக்குப் பெயர்போன காளமேகம். இங்கே எழுந்தருளியுள்ள பெருமானைப் பார்த்ததும், அவனுக்குள் ஒரு கேள்வி எழுந்தது. என்ன கேள்வி தெரியுமா?

'கண்ணிலே நெருப்பு (நெற்றிக்கண்); கையிலே நெருப்பு (தாருகாவன முனிவர்கள் ஏவியது); சிரிப்பிலே நெருப்பு (திரிபுர சம்ஹாரத்தின்போது வெளிப்பட்டது); உடலும் நெருப்பு (அடிமுடி காணமுடியாத அனல் பிழம்பாய், அண்ணாமலையில் வெளிப்பட்டது). இப்படி நெருப்பு மயமாய் இருக்கும் உன்னோடு, இந்தப் பெண் (தையலாள்) எப்படிச் சேர்ந்திருக்கிறாள்?' - இதுதான் காளமேகத்தின் கேள்வி.

தீத்தான் உன் கண்ணிலே; தீத்தான் உன் கையிலே;
தீத்தானும் உந்தன் சிரிப்பிலே - தீத்தானுன்

கண்டறியாதன கண்டேன்

9



மெய்யெலாம்; புள்ளிருக்கும் வேளூரா! உன்னையித்
தையலாள் எப்படிச் சேர்த்தாள்?

'தையல்' என்பதற்கு பெண் என்றும் பொருள். அதே சமயம், வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள அம்பிகையின் பெயரும் தையல்நாயகிதான்!

பிரம்மஹத்தி தோஷம், சித்தப் பிரமை உள்ளிட்ட பிணிகளை அகற்றும் சிறப்பு வாய்ந்தது தாமரைத் தடாகம் என்னும் ஸ்வேத புஷ்கரணி. இந்தத் திருக்குளத்தில் நீராடி, அண்ணன் பெருமானை வழிபட்டால், தோஷங்கள் நிவர்த்தியாகின்றன என்பது பக்தர்கள் அனுபவம். இது அமைந்துள்ள தலம், திருவெள்ளக் குளம். 'அண்ணன் கோயில்' என்றால் பலருக்கும் தெரியும்.

இதே பலனை அளிக்கக் கூடிய பிரம்மதீர்த்தம் என்னும் திருக்குளத்தைக் கொண்டது திருமுருகன் பூண்டி. முருகநாதர் என்ற பெயருடன் சிவபிரான் அருள்பாலிக்கும் தலம் இது. இங்கே சுந்தரருடன் அவர் நடத்திய விளையாட்டு சுவாரஸ்யமானது.

ஸ்ரீநிவாச ராகவன்

தேவை ஏற்படும் போதெல்லாம் சிவபிரானிடம் 'பொன்னைக் கொடு; பொருளைக் கொடு' என்று கேட்பவர் வன்தொண்டரான சுந்தரர். தம்பிரான் தோழரான அவரை, தம் நாட்டுக்கு அழைத்துக் கௌரவித்தார் சேரமான் பெருமாள் நாயனார். திருவாரூருக்கு திரும்ப முற்பட்ட சுந்தரருக்கு விலையுயர்ந்த பரிசுகளை அளித்து வழியனுப்பினார். பரிசுப் பொருட்களோடும் பரிவாரத்தோடும் புறப்பட்டு வந்த சுந்தரர், இருட்ட ஆரம்பித்தவுடன் ஒரு சோலையில் தங்கினார். அப்போது, அவர் பரிவாரத்தை, வேடர்கள் கூட்டமாகச் சூழ்ந்தனர். சுந்தரர் கொண்டு வந்த பொருளனைத்தையும் பறித்துச் சென்றனர்.

மறுநாள் பொழுது விடிந்ததும் சுந்தரர் எழுந்தார். நீராடினார். அருகிலிருந்த ஆலயத்துக்குச் சென்றார். அங்கே அருள்பாலித்த சிவபிரானிடம் கோபமாகக் கேட்டார்: 'ஊருக்குள் நடமாட முடியவில்லை. எந்தப் பொருளையும் கொண்டு செல்ல முடியவில்லை. அடித்தும் மிரட்டியும் பறித்துச் செல்லும் வேடர்கள் எங்கும் திரிகிறார்கள். அவர்களிடமிருந்து காப்பாற்றாமல், நீர் எதற்காக இங்கே இருக்கிறீர்?'

ஒன்று, இரண்டல்ல; மொத்தம் பத்து பாடல்கள். அவ்வளவும் 'நீர் எத்துக்கிருந்தீர் எம்பிரானிரே' என்ற கேள்வியுடன். அவ்வளவு கோபம் சுந்தரருக்கு. அதன் விளைவு, பறிபோன பொருளனைத்தையும் கிடைக்கச் செய்தார் சிவபிரான். இந்தத் திருமுருகன் பூண்டியில் உள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, 12 நாள், 24 நாள், 48 நாள் என்று சங்கல்பம் செய்து முருகநாதரை வழிபட்டால், சகல தோஷங்களும் குறைகளும் நீங்கும் என்கிறது தலபுராணம்.

ஊரின் நன்மையையும் முன்னிருத்தி அமைந்தவை திருக்குளங்கள்

திருக்குளம் என்றால் தவிர்க்க முடியாதது திருநள்ளாற்றின் நளதீர்த்தம். நளன் ஏற்படுத்திய இந்தத் திருக்குளத்தில் நீராடி, தர்ப்பாரண்யேஸ்வரரையும், தேவியையும் வழிபட்டு, தனிச் சன்னிதியில் இருக்கும் சனீஸ்வரருக்கு வழிபாடு செய்வது இங்கு விசேஷம். சனிப்பெயர்ச்சி இங்கு பிரசித்தமான திருவிழா. திருஞான சம்பந்தர், மதுரையில் சமணர்களுடன் நடத்திய அனல் வாதத்தின்போது, நெருப்பில் இட்ட ஏடு 'போகமார்த்த பூண்முலையாள்' என்று தொடங்கும் நள்ளாற்றுப் பாசுரம்தான்!

நக்கீரனோடு சிவபிரான் புலமை வாதம் செய்த, திருவாலவாயின் பொற்றாமரைக் குளம், தமிழின் தலைக் குளம்! 'சங்கப்பலகை இல்லாது போனாலும், மங்காத தமிழுண்டு மகிழ்வதற்கு' என்று நினைவுறுத்துகிறது மதுரையின் பொற்றாமரைக் குளம்!

தமிழகத்தின் புகழ்வாய்ந்த திருக்குளம் என்று சொன்னால், அது கும்பகோணத்தின் மகாமகத் திருக்குளம்தான். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, இங்கே நடக்கும் கும்பமேளா மிகப் பிரபலமானது. இங்கு மட்டுமல்ல; வட இந்தியாவில் பிரயாகை (அலகாபாத்), ஹரித்வார், உஜ்ஜைனி, நாசிக் என்று நான்கு இடங்களில் இந்தக் கும்பமேளா நடக்கிறது. உலகின் மிகப் பெரிய ஜனக் கூட்டம் சேர்கின்ற, சமயம் சார்ந்த வைபவம் இது.

கும்பமேளா சமயத்தில் சகல நதி தேவதைகளும் அங்கே எழுந்தருள்கிறார்கள் என்பது புராணம். கும்பகோணம் மகாமகக் குளக்கரையில், சப்த நதி

தேவதைகளும் சிலா ரூபத்தில் தனிக் கோயில் கொண்டுள்ளனர்.



திருவாரூரில் இருந்து திருக்கோளிலி என்னும் திருக்குவளை செல்லும் வழியில் உள்ளது திருநெய்ப்பேறு (இன்றைய பெயர் எமப்பேரூர்!) இங்கே பிறந்த நமிநந்தியடிகள், சமணர்களின் ஏளனத்தைப் பொறுக்க மாட்டாமல், திருக்குளத்தின் நீரையே ஊற்றி விளக்கேற்றினார் என்கிறது பெரிய புராணம். பார்வையற்றவரான தாண்டியடிகள் நாயனார், நீளமான கயிற்றைப் பிடித்தபடி திருக்குளத்தில் இறங்கித் தூர்வாரினார் என்றும் சேக்கிழார் பெருமான் விவரிக்கிறார். கோயில்களின் சிறப்புக்காக மட்டுமல்ல; ஊரின் நன்மையையும் முன்னிறுத்தி அமைந்தவை திருக்குளங்கள்.

''நிலத் தேவைக்காக நீர்க்கால்களை அடைக்காதே. அதனால், உன் வாழ்வாதாரம் அடைபட்டுப் போய்விடும். தூர்வாரப்படாத குளங்கள், பூச்சிகளின் வாழ்விடம்; நோய்க்கு வேர். அத்தகைய தூர்வாராத குளமாக இருக்காதே. உன்னில் கலந்துள்ள அழுக்கு - வெறுப்பு, கோபம், பொறாமை, உள்ளிட்ட கசடுகளைத் தூர் எடு. அதனால், குளத்து நீர் பலருக்கும் பயன்படுவதுபோல, நீயும் பலருக்கும் நலம் செய்பவனாக இருப்பாய். குளத்துக்கு உண்டான குளிர்ச்சி உன் மனத்திலும் பேச்சிலும் பார்வையிலும் எப்போதும் இருக்கட்டும். உனக்கும் புனிதம் கிட்டும்'' என்று என்று திருக்குளங்கள் சொல்வது போலத் தோன்றுகிறது. இதுமட்டுமல்ல; திருக்குளத்தில் ஓர் ஆச்சர்யம் உண்டு. சச்சதுரமாக, ஸ்வஸ்திக் வடிவாக, நீள் சதுரமாக, எண்கோணமாகவும்கூட அமைந்திருக்கின்றன திருக்குளங்கள். இதில் ஆச்சர்யம் என்ன என்று தோன்றுகிறதா? 'வடிவம் எப்படி இருந்தால் என்ன? அதனுள் இருப்பதென்னவோ ஒரே தண்ணீர்தான்! உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் அதைப் போலத்தான். வடிவங்கள் வெவ்வேறு: ஆத்மா ஒன்றே!

அட! அருமையான அத்வைத ஞானத்தைப் பேசுகின்றன இந்தத் திருக்குளங்கள்!


(அடுத்தவாரம் மூலஸ்தானம்)

வாசகர்கள் விமர்சிக்கறாங்க

கலைஞர் தொலைக்காட்சியின் 'சந்தித்த வேளை' நிகழ்ச்சியில் பல்துறை வல்லுனர்களிடம் நிகழ்ச்சி அமைப்பாளர் ரமேஷ் பிரபா கேட்கிற கேள்விகள் ஒவ்வொன்றும் பயனுள்ளவை! நிகழ்ச்சி, காண்பவர்களுக்கு நல்ல சிந்தனைத் தெளிவைத் தருகிறது. சுப வீரபாண்டியன் வழங்கும் 'ஒன்றே சொல்! நன்றே சொல்!' நிகழ்ச்சியில் உள்ளூர் விஷயம் முதல் உலக விஷயம் வரை பல அற்புதமான தகவல்கள் அறிய கிடைக்கின்றன. இவர் செய்திகளைத் தருகின்ற முறையும் இனிக்கிறது. நாகர்கோவிலைச் சேர்ந்த ஒருவர் முப்பது ஆண்டுகள் 'தூக்குப் போடும் தொழிலாளியாக' இருந்து நூற்றுபதினேழு பேரைத் தூக்கில் போட்டுள்ளார். இதனால் அவருக்கு மன உலைச்சல் ஏற்பட்டதைக் கூறி நெகிழ வைத்தார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் - சிந்தனைக்கு விருந்து! செவிக்கு இனிப்பு!

- என்.சண்முகம், திருவண்ணாமலை



டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி எதுவாயினும்... 'சேனல் சாய்ஸ்' என்ற

சன் டி.வி.யின் நாதஸ்வரம் தொடரை நாங்கள் விரும்பிப் பார்க்கிறோம். தொடர் விறுவிறுப்பாகவும் குடும்பப்பாங்காகவும் இருப்பதோடு பிரச்னைகளை எப்படித் தீர்க்கப் போகிறார்கள் என்றும் யோசிக்க வைக்கிறது. மௌலியின் சாந்தமான நடிப்பும் அவருடைய பொறுமையும் மனத்துக்கு இதம்! முக்கோண காதலான மஹா - கோபியை விரும்புகிறார், பாண்டி - மஹாவை விரும்புகிறார். நடுவில் கோபியை ஈ.பி. எஞ்சினியர் மலரும் விரும்புகிறார். இந்தப் பிரச்னைகளை இயக்குனர் திருமுருகன் எப்படித் தீர்க்கப் போகிறார் என்று யோசிக்க வைக்கிறது. இதற்கிடையில் அண்ணன் தங்கை பாசம் தனி அட்ராக்ஷன். சன் தொலைக்காட்சி நிர்வாகம், தொடர்களுக்கிடையே அடிக்கடி விளம்பரங்களைப் போடுவதைக் குறைக்கலாம். தொலைக்காட்சித் தொடர்களைப் பார்க்கிறோமா அல்லது விளம்பரத் தொடர்களைப் பார்க்கிறோமா என்ற சந்தேகம் அதிகமாகவே வருகிறது.

- நளினி ராமநாதன், சென்னை - 93



'சேனல் சாய்ஸ்'

வசந்த் டி.வி.யின் பஞ்சாமிர்தம் நிகழ்ச்சியில் பல திரைப்படங்களி லிருந்து, நகைச்சுவைக் காட்சி களைத் தொகுத்து வழங்குகின்றனர். அதிலும் மிகவும் பழைய படங்களி லிருந்து காட்சிகளைத் தொகுத்து வழங்குவது தனிச்சிறப்பு. ஆனால் ஒருகுறை. காட்டும் காட்சித் தொகுப்பின் திரைப்படப் பெயரைப் போடுவதில்லை! இது எப்படி இருக் கிறது என்றால், சுவையான பழத்தைச் சாப்பிடக் கொடுத்துவிட்டு அதன் பெயரைத் தெரியாது எனக் கூறுவது போல் உள்ளது!

- ராஜேஸ்வரி ராதாகிருஷ்ணன், பெங்களூரு

பேரைப் போடுங்க பாஸ்!

குறிப்பிட்டு எழுதுங்க. **kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.**

ஸ்போர்ட்ஸ்

பிராட்மேனுக்குப் பிறகு பரபரப்பான கடைசி டெஸ்ட் ஆட்டத்தை ஆடி, உலகமெங்கும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களின் கவனத்தைத் தம் பக்கம் திருப்பியிருக்கிறார் முத்தையா முரளிதரன். டெஸ்ட் விக்கெட்டுகளில் 800 என்கிற மந்திர எண்ணைத் தொட்டு, டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார் இந்த இலங்கைத் தமிழர்.

முரளிதரனின் கிரிக்கெட் வாழ்க்கை, ஒரு பரபரப்பான ஹாலிவுட் சினிமா திரைக்கதைக்கு நிகரானது. இலங்கையின் கண்டியில் வாழ்ந்து வந்த சின்னசாமி முத்தையா மற்றும் லஷ்மிக்குப் பிறந்த முரளிதரன், இதுவரை இலங்கை கிரிக்கெட்டில் விளையாடிய ஒரே தமிழர். முரளிதரனின் தாத்தா தமிழ்நாட்டின் கொங்குப் பகுதியைச் சேர்ந்தவர். தேயிலை தோட்டங்களில் வேலை செய்ய 1920ல் இலங்கை சென்ற முரளிதரனின் குடும்பம் அங்கேயே வாழப் பழகிவிட்டது. தமிழ் யூனியன் கிரிக்கெட் க்ளப்பில் ஆடிப் பெயர் பெற்ற முரளிதரன், முதல் தடவையாக (1992) ஆஸ்திரேலியாவுடன் களமிறக்கப்பட்டபோதுதான் இவரைக் கண்டு நடுங்க ஆரம்பித்தார்கள்

போராட்டம்தான் கிரிக்கெட்!



பேட்ஸ்மேன்கள்.

கண்ணாடியில்கூட முரளிதரனால் பந்தைச் சுழல வைக்க முடியும் என்பது முரளிதரனுக்குக் கிரிக்கெட் விமரிசகர்கள் வழங்கும் பாராட்டு. பொதுவாக, ஆஃப் ஸ்பின்னர் என்றால் விரல்களைப் பயன்படுத்தித்தான் பந்தைச் சுழல வைப்பார்கள். ஆனால், முரளிதரன்தான் மணிக்கட்டைக் கொண்டு ஆஃப் ஸ்பின் செய்த ஒரே பந்துவீச்சாளர். ஆனால், முரளிதரனுக்குப் பலமாக இருந்த பந்துவீச்சு முறைகளை முறைகேடானது என்று ஆஸ்திரேலிய நடுவர்கள் தீர்ப்பு சொன்னபோது ஒடுங்கிப் போனார்.

1995ல், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் நடுவர் டேரல் ஹேர், முரளிதரன் பந்தை எறிவதாக மைதானத்திலேயே தீர்ப்பு எழுதினார். அடுத்தடுத்த ஆட்டங்களிலும் முரளிதரனின் பந்துவீச்சு கேள்விக்குறியாக்கப்பட்டது. இதனால் முரளிதரனின் எதிர்காலம் பெரிய திருப்பத்தைச் சந்திக்க நேர்ந்தது.

ஆனால் நடுவர்களின் இந்த முடிவை அப்போது உயிரோடு இருந்த பிராட்மேன் கடுமையாக எதிர்த்தார்; விமரிசனம் செய்தார். ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமரான ஜான் ஹோவர்டும் தன் பங்குக்கு, ஆமாம், அவர் பந்தை எறியவே செய்கிறார் என்றார். கொதிப்படைந்த முரளிதரன் உடனே ஆஸி. தொடரிலிருந்து விலகிக்கொண்டார். இதேபோல தூஸ்ரா என்கிற புதிய விதமான பந்தை வீசியபோதும் சர்ச்சை எழுந்தது. சர்வதேச கிரிக்கெட் வாரியம், தூஸ்ரா பந்தைப் பயன்படுத்தக்கூடாது என்று முரளிதரனுக்குக் கட்டுப்பாடு விதித்தது. ஜிம்பாப்வே வீரரான டியான் இப்ராஹிமும் முரளிதரன் பந்தை எறிகிறார் என்கிற தொனியில் பேச, முரளிதரன் கிரிக்கெட் உலகின் சர்ச்சைக்குரிய மனிதரானார்.



இந்த விஷயத்தில் இலங்கையின் பிரதமர் ராஜபக்ஷே, முரளிதரனுக்குப் பெரிய பக்கபலமாக இருந்தார். 'முரளிதரன் எங்கள் சொத்து. அவருக்கு நேரும் கஷ்டங்களை எப்பாடுபட்டாவது தீர்ப்பேன்' என்று கூறி முரளிக்கு ஆறுதல் கொடுத்தார். இத்தனை கஷ்டங்களையும் எதிர்கொண்டு திடமாக நின்றார் முரளி. 'என் வாழ்க்கை முழுக்க யாராவது ஒருவர் என்னைத் தடுத்துக் கொண்டுதான் இருக்கிறார். மற்றவர்களால் செய்ய முடியாததை நான் செய்வதால் எழுகிற பிரச்னைகள் இவை. நான் போராடுவேன். போராடும் வழிகள் எனக்குத் தெரியும்' என்றார். சொன்னதைச் சாதித்துக் காட்டி இன்று 800 டெஸ்ட் விக்கெட்டுகள் எடுத்திருக்கிறார் முரளிதரன். 'நான் பயப்படுகிற ஒரே பந்துவீச்சாளர் முரளிதரன்தான்' என்ற ஷேவாக்கின் பேட்டியை அனைத்து பேட்ஸ்மேன்களின் குரலாகவே எடுத்துக்கொள்ளலாம்.

ச.ந.கண்ணன்



*ஆர்.பிரசன்னா வெங்கடேஷ்

ஆர்.பிரசன்னா வெங்கடேஷ் - அடிப்படையில் எம்.பி.ஏ. பட்டதாரி. இவர், கழுத்தில் டை கட்டிக் கொண்டு வேலைக்குப் போவதற்குப் பதில் கேமராவை மாட்டிக் கொண்டு கிளம்பியதில் பாடகர் ஜேசுதாஸின் பங்கும் கணிசமானது. ''எனக்குச் சொந்த ஊர் தஞ்சாவூர். திருவையாற்றில் தியாகராஜர் ஆராதனையின்போது கே.ஜே. ஜேசுதாஸுக்குத் தெரியாமல் அவரை ஃபோட்டோ எடுத்து அனுப்பி வெச்சேன். ஒரு ரிப்ளையும் இல்லை. திடீர்னு ஒரு நாள் அவர்கிட்டேர்ந்து ஃபோன். 'எனக்கு போட்டோ ரொம்பப் பிடிச்சிருந்தது. தஞ்சாவூர்ல இருந்து என்ன பண்ணப் போறீங்க. சென்னை கிளம்பி



டிஜிட்டல் சர்ப்ரைஸ்!

வாங்க'ன்னு சொன்னா. அது வரைக்கும் தயங்கிட்டு இருந்த எங்க பேரண்ட்ஸ்கூட ஒரு வழியா என் கேமராவை வாழ்த்தி அனுப்பினாங்க. இப்போ இளையராஜா, ஸ்ரேயா, சூர்யா, த்ரிஷா... என்று கணிசமாக நட்சத் திரங்களை என் கேமராவால் சுட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்கிற பிரசன்னா தற்போது மகீந்ரா ஹோம் ஸ்டே, சரவணா ஸ்டோர்ஸ், சுகுணா சிக்கன் போன்ற நிறுவனங்களின் ஆஸ்தான ஸ்டில் ஃபோட்டோகிராஃபர்.

- மகிமைராஜன்











'சத்திய சோதனை'யில் காந்திஜி குறிப்பிட்டிருக்கும் சில நிகழ்ச்சிகளைத் தொடுத்து க்ஷமா என்ற குறும்படத்தை எடுத்திருக்கிறார் இயக்குநர் வெங்கடேசன்.

பன்னிரெண்டு நிமிடங்கள் ஓடக் கூடிய இப்படம், பதிமூன்று வயது சிறுவன் ஒருவனது வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளைக் கூறுகிறது.



* வெங்கடேசன்



க்ஷமா என்றால் மன்னிப்பு!

அந்தச் சிறுவன்தான் மகாத்மா காந்தி என்கிறபோது படம் முடிந்துவிடுகிறது.

காந்தியின் அஹிம்சை, சத்தியாக்கிரகம் கொள்கைகளுக்குத் தூண்டுதல் வேர் அவரது தந்தையின் மூலம்தான் கிடைத்தது என்பது பலருக்கும் எட்டாத செய்தி. அந்தப் பொறி தட்டும் நிகழ்ச்சியை மையமாக்கியே க்ஷமா உருவாகியிருக்கிறது.

இந்தியில் உருவாகியுள்ள இக்குறும்படம் காந்தியன் பனோராமாவில் திரையிடப்பட்டு ஜூரி பரிசை வென்றுள்ளது.

அண்மையில் தென்னாப்பிரிக்காவில் ரோட்டரி அமைப்பு, இந்தி ஊடகத் தொழில்துறை ஏற்பாட்டின்கீழ் டர்பன் வைல், ஜோகன்ஸ் பர்க் நகரங்களில் ஆங்கில சப் டைட்டிலுடன் க்ஷமா திரையிடப்பட்டிருக்கிறது.

படப்பிடிப்பு 3.5 நாட்களில் முடிந்துள்ளது. அதற்கான முன், பின் தயாரிப்புத் திட்டங்கள் ஆய்வுகள், அலைச்சல்கள், மெனக்கெடல்களுக்கு பல நாட்கள் பிடித்திருக்கின்றன.

குஜராத்தில் நடக்கும் கதையை முழுக்க முழுக்க சென்னையிலேயே படப்பிடிப்பு நடத்தி முடித்துள்ளார் வெங்கடேசன். நடித்தவர்களில் காந்தியாக நடித்த ஹர்ஷா, காந்தியின் அண்ணனாக நடித்த ஈஸ்வர் ஸ்ரீகுமார், அப்பாவாக நடித்துள்ள சுதிர் அஹூஜா மற்றும் துணை நடிகர்கள் அனைவரும் குஜராத் மற்றும் வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள். 'செய் தொழில் நேர்த்தி காட்டவே இத் தேர்வு' என்கிறார் இயக்குநர்.

2006ல் நியூயார்க் டைம்ஸுக்காக 'மதுரை ஜல்லிக்கட்டு' ஆவணப் படத்தையும், 'சென்னை ஃபுட் பாத்' என்றொரு முழு நீள ஆவணப் படத்தை நியூயார்க் டைம்ஸுக்கும் எடுத்துக் கொடுத்திருக்கிறார்.

காதல் மன்னன் ஜெமினி கணேசன் வரலாற்றை 'தி கிங் ஆஃப் ரொமான்ஸ்' என்கிற பெயரில் 2009ல் இயக்கி தமிழ் திரையுலகில் பலமான கவனம் பெற்றார்.

இப்போது க்ஷமா. க்ஷமா என்றால் மன்னிப்பு என்று பொருள்.

- சிவா



அப்படியே ஆகட்டும்!

நம் கஷ்டத்தை ஈஸ்வரனிடம் சொல்கிறபோதே அவனுக்கு அது தெரியாது என்று நாம் நினைப்பதாக ஆகிறது. அதாவது ஈஸ்வரனுடைய எல்லாம் அறிந்த ஸர்வக்ஞத்துவத்துக்குக் குறை உண்டாக்குகிறோம். 'இந்தக் கஷ்டத்தைப் போக்கு; அல்லது கஷ்டத்தைப் பொருட்படுத்துகிற மனப்பான்மையை மாற்று' என்கிறபோது நாம் கேட்டுத்தான் அவன் ஒன்றைச் செய்கிறான் என்றும் ஆகிறது. அதாவது தானாகப் பெருகும் அவனது காருண்யத்துக்குக் குறை உண்டாக்கிவிடுகிறோம். இப்படி ஞான சமுத்திரமாக, கிருபா சமுத்திரமாக இருக்கிற ஈஸ்வரனுடைய ஞானம், கிருபை இரண்டுக்கும் தோஷம் கற்பிக்கிற பிரார்த்தனை உண்மையான பக்தி இல்லை. ஆனால், இப்படிப்பட்ட பிரார்த்தனையால் நம்முடைய மனச்சுமை தாற்காலிகமாகவாவது இலேசாகி, கொஞ்சம் சாந்தி பிறக்கிறது. நாமாகவே எல்லாம் சாதித்து விட முடியும் என்ற அகங்காரத்தைவிட்டு ஈஸ்வரனிடம் யாசிக்கிற அளவுக்கு எளிமை பெறுகிறோமே, அதுவும் நல்லதுதான். அவனும், நாம் அவனுடைய ஞானத்துக்கும் கருணைக்கும் குறை உண்டாக்கியதைக்கூடப் பொருட்படுத்தாமல், நம் கர்மாவையும் மீறிப் பிரார்த்தனையை நிறைவேற்றினாலும் நிறைவேற்றலாம். ஆனாலும் ஒரு கஷ்டம் போனாலும் இன்னொரு கஷ்டம் என்று இலேசாக வாழ்க்கையில் வந்து கொண்டேதான் இருக்கும். ஆகையால் லௌகிகமான கஷ்ட நிவிருத்திக்காகப் பிரார்த்தனை பண்ணுவதற்கு முடிவே இராது.

'நீ எப்படி விட்டாயோ அப்படி ஆகட்டும்' என்று சரணாகதி செய்வதுதான் பக்தி. தனக்கு என்று எதுவுமே இல்லாவிட்டால் மனசின் அழுக்குகள் நீங்கி, அது கண்ணாடி மாதிரி சுத்தமாக இருக்கும். அப்போது நிறைந்த ஆனந்தமாக இருக்கலாம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அன்று மகளிர்தினம். அன்று காலை படுக்கையை விட்டு எழுந்ததும் சுசீலாவுக்கு ஒரு கவிதை தோன்றியது. அதை உடனே எழுதினாள். படித்துப் பார்த்தாள். சில வரிகளை முன்னும் பின்னுமாக மாற்றினாள். கவிதை நன்றாக வந்திருப்பது போலிருந்தது. என்ன எழுதினாலும் சுசீலாவுக்கு, கிருஷ்ணபாரதியின் ஞாபகம்தான் வரும். அவனிடம் அதைக் காட்ட வேண்டும். ஃபோனிலேயே படித்துக் காட்டினால் என்ன என்று நினைத்தாள். சமையல்கார சரஸ்வதி மாமி காஃபி கொண்டு வந்து டீபாய் மீது வைத்தாள்.

''சுசீ!... காஃபி வெச்சிருக்கேன் அம்மா...''

''வெச்சுட்டுப் போங்க மாமி...''

கிருஷ்ணபாரதி நம்பருக்குப் போட்டாள். கிருஷ்ணபாரதி அவனுடைய அறையில்தான் இருந்தான். மனோகரி, கார்த்திக்காவுக்கு ஏதோ ஹோம் ஒர்க் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தாள். வருண் கட்டிலில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான். கிருஷ்ணபாரதிக்கு காஃபி சாப்பிடலாம் போலிருந்தது. மணி ஆறரை. மனோகரியிடம் கேட்க என்னவோ போலிருந்தது. மொபைல் அடித்ததும் அதைக் கையில் எடுத்தான். சுசீலாவிடமிருந்து என்றதும் மொபைலை எடுத்துக்கொண்டு வராந்தாவுக்குப் போனான். மனோகரி அவனைச் சந்தேகத்துடன் பார்த்தாள். மெதுவான குரலில் ''என்ன சுசீலா?'' என்றான்.



உள்ளும் புறமும்

வண்ணநிலவன்



''தூங்கி முழிச்சதும் ஓர் அழகான கவிதை ஒண்ணு மனசிலே தோணிச்சு. அதைப் படிக்கக் காட்டறேன்...'' என்றாள்.

''காலங்கார்த்தாலேயே கவிதையா...?''

''இன்று மகளிர் தினம்... ஞாபகம் இருக்கா?...''

''பெண்கள் தினத்தைப் பெண்கள்தான் ஞாபகம் வெச்சிருக் கணும். நான் எதுக்கு ஞாபகம் வெச் சிருக்கணும்?''

''நீங்க ஒரு ஜர்னலிஸ்ட்... உங்களுக்கு இதெல்லாம் ஞாபகத்திலே இருக்க வேண்டாமா?

''ஜர்னலிஸ்ட்ங்கிறதுக் காகக் கண்ட தினத்தையும் ஞாபகம் வெச்சிருக்கணுமா?''

''நீங்க முதல்லே உங்க மனைவியை விஷ் பண்ணினீங் களா?''

''ஆமா, அது ஒண்ணுதான் கொறைச்சல்...''

''சரியான மேல்சாவனிஸ்ட்.''

''மகளிர் தினத்துக்கு மனைவியை விஷ் பண்ணலைன்னா மேல்சாவனி ஸ்டா?... நீ சொல்ற தினம் அது இது எல்லாம் ஃபாரின் கல்சர். அங்கேதான் ஃபாதர்ஸ் டே, மதர்ஸ் டே அது இதுன்னு கொண்டாடுவாங்க. நமக்குத் தீபாவளி, பொங்கல்தான் விசேஷம்.''



''உங்களுக்கு இந்தத் தீபாவளி பொங்கலை விட்டா வேற ஒண்ணுமே தெரியாதா? அது எல்லாம் ஃப்யூடல் கல்சர்...''

''சரி, இவ்வளவு பேசறியே... உனக்கு அம்பேத்கார் டே என்னைக்குன்னு தெரியுமா?''

''அம்பேத்கார் டேயா?...'' என்று இழுத்தாள் சுசிலா.

''தெரியாது இல்லியா? அது மாதிரி தான்... எல்லாரும்... குருநானக் தினம்ங் கிறாங்க... நேரு பிறந்த தினம்ங்கிறாங்க... இப்படி எத்தனையோ தினத்தை யாரோ சிலர் கொண்டாடறாங்க. இதையெல்லாம் ஞாபகம் வெச்சுக்கிடணும், கொண்டா டணும்ங்கிறது குழந்தைத் தனமானது...''

சுசிலாவுக்கு அவன் சொல்வது யதார்த்த மானது என்பது புரிந்தது. என்றாலும்

...படையாக ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. பேச்சை மாற்றினாள்.

''இந்த மேல் சாவனிஸ்ட்களே இப்படித்தான்'' என்று அலுத்துக்கொண்டாள்.

''சரி... கவிதை ஏதோ படிக்கிறேன்னியே... அதைப் படி...''

''நோ... பாரதி... இப்போ மூடு இல்லே... அப்புறமா காண்பிக்கிறேன்...'' என்றாள்.

''சித்தம் போக்கு சிவன் போக்கு...'' என்றான் கிருஷ்ணபாரதி.

''வருண் எப்படி இருக்கிறான்...?''

''பரவாயில்லே... கட்டு இன்னும் அவிழ்க்கலை... ஆனால், பள்ளிக்கூடம் எல்லாம் போக ஆரம்பிச்சிட்டான்...''

''கெட்டிக்காரன்... கேட்டதாச் சொல்லுங்கோ... வெச்சிடட்டுமா?... பை...'' என்றாள் சுசீலா.



''ஜர்னலிஸ்ட்ங்கிறதுக்காக கண்ட தினத்தையெல்லாம் ஞாபகம். வச்சிருக்கணுமா?''

சுசிலாவும், மனோகரியும் பல விஷயங்களிலும் எதிரெதியான துருவங்கள். இருவருமே கல்லூரி வரை படித்திருந்தாலும் இருவரும் வளர்ந்த சூழ்நிலை வித்தியாசமானவை. சுசீலா சென்னையிலேயே பிறந்து வளர்ந்த பெண். அவளுடன் பிறந்தவர்கள் யாருமில்லை. தனியாகவே வளர்ந்தவள். அதனால் பிடிவாதமும், வேகமும் அதிகம். எட்டு வயதிலேயே அம்மா இறந்து விட்டதால் அப்பாவால் வளர்க்கப்பட்டவள்.

ரங்கனாதன் சம்பளக் கணக்கு அலுவலகத்தில் வேலை பர்த்துக் கொண்டே மகளையும் வளர்த்துப் படிக்க வைத்தார். அவருடைய தங்கைதான் அவ்வப்போது ஸ்ரீரங்கத்திலிருந்து வந்து பத்து நாள், ஒரு மாதம் போல இருந்துவிட்டுப் போவாள். சமையல் எல்லாம் சமையல் மாமிகள் தான். ரிட்டையர்டாகப் போகிற சமயத்தில் நங்கநல்லூரில் ஒரு ஃப்ளாட்டையும் வாங்கிப் போட்டார். அப்போது சுசீலா கல்லூரிக்கு வந்துவிட்டாள்.

சுசீலாவிடம் இயல்பாகவே துணிச்சல் இருந்தது. ஆனால், கொஞ்சம் அலட்டல் உண்டு. கடுகு தாளிப்பது போல் விறுவிறுவென்று பேசுவாள். கல்லூரி நாட்களில் தான் அவளுடைய ஸ்நேகிதி சங்கீதா மூலம் கவிதை, பெண்ணுரிமை எல்லாம் அவளைப் பிடித்தது. கல்லூரிப் பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்வாள். சிறு பத்திரிகைகளில் அப்போதே அவளுடைய கவிதைகள் வெளிவர ஆரம்பித்திருந்தன. இவை எல்லாம் அவளது தன்னம்பிக்கையையும், கூடவே கொஞ்சம் கர்வத்தையும் வளர்த்து விட்டிருந்தன.

எழுத்துலகில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு போக்கு ஏற்பட்டு விடுகிறது. சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசியம், தேச விடுதலை போன்றவை உரத்துப் பேசவும், எழுதவும் பட்டன. சுதந்திரம் பெற்ற பிறகு சோஷலிஸம், ஜனநாயகம் என்ற குரல்கள் ஒலித்தன. இப்போது பெண்ணுரிமை, தலித்... என்ற கோஷம் கேட்கிறது. சுசீலாவும் காலத்தின் கோலத்தைத்தான் வரித்துக் கொண்டாள். பெண்ணுரிமை பேசுவது தான் இப்போது ஃபேஷன் என்பதை அவள் நன்றாகவே புரிந்து வைத்திருந்தாள்.

திருநெல்வேலி கிராமமும் அல்ல. பம்பாய், சென்னையைப் போல் பெருநகரமும் அல்ல. பழசாகவும் இருக்க முடியாமல், புதுசாகவும் மாற முடியாமல்

தவித்துக்கொண்டிருக்கிற ஓர் ஊர். மனோகரியின் அப்பா பள்ளிக்கூட ஆசிரியர். டவுனில் பூர்வீக வீடு இருந்தது. எப்போதும் எல்லா வீடுகளிலும் ஏதாவது சடங்கு நடந்துகொண்டே இருக்கும். பெயர் சூட்டம் விழா, காது குத்து, சடங்கு, கல்யாணம், சாவு, பதினாறாவது நாள் கருமாதி விசேஷம்... என்று ஜனங்களின் வாழ்வு சடங்குகளால் நிரம்பியிருந்தது.

சிறு வயதிலிருந்தே ஆண்பிள்ளைகளும், பெண் குழந்தைகளும் வித்தியாசப் படுத்தியே வளர்க்கப்பட்டனர். மனோகரி, ஐந்தாவது வரைதான் கோ எஜுகேஷனில் படித்தாள். பிறகு அவள் படித்தது எல்லாம் பெண்களுக்கான உயர் நிலைப்பள்ளி, கல்லூரியில் தான். பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்ற கண்டிஷன் அவளது கல்லூரி நாட்களிலும் செல்லுபடியாயிற்று. ஆனால், அவளுடைய தம்பி மனோகர் தானாகவே சுதந்திரத்தை எடுத்துக் கொண்டிருந்தான். மேலும் அப்பா சொன்னாலும் அம்மா சொன்னாலும் கேட்பதில்லை. அதேபோல மனோகரிக்குக் கிட்டாத சுதந்திரம் ரஞ்ஜனிக்குக் கிடைத்திருந்தது.

மேலும், மனோகரி தனது பழக்க வழக்கங்களை எல்லாம் அம்மாவைப் போலவே அமைத்துக் கொண்டாள். மீனாட்சியம்மாள், ஆண்களின் முன்னால் அதிக நேரம் நின்று பேசவே மாட்டாள். உறவினர்கள் வந்தாலும் இரண்டு வார்த்தை பேசிவிட்டு உள்ளே நகர்ந்து விடுவாள். கூட்டமாக இருக்கிற பஸ்ஸில் ஏறவே மாட்டாள். மனோகரியும் இப்படித்தான். பஸ்ஸில் உட்கார இடம் கிடைத்தால்தான் ஏறுவாள். அதுவும் ஜன்னலோரம் போய் உட்கார்ந்து கொள்வாள். இடித்துக் கொண்டு நிற்கிற ஆண்கள் மத்தியில் பயணம் செய்வதை அறவே தவிர்த்து விடுவாள். அம்மாவுடன் நெல்லையப்பர் கோவிலுக்கும், புட்டாரத்தி அம்மன் கோவிலுக்கும் அடிக்கடி போவாள். திருவிழாக் காலங்களில் தினசரி கோயிலுக்குப் போவாள். ரஞ்ஜனிக்குக் கதைப் புஸ்தகங்கள் என்றால் உயிர். அம்மாவும், அக்காவும் கோவிலுக்குக் கிளம்பினால் அவள் ஏதாவது நாவலை எடுத்துக்கொண்டு வாசிக்க உட்கார்ந்து விடுவாள்.



"நீங்க முதல்லே உங்க மனைவியை விஷ பண்ணிணீங்களா? சரியான மேல் சாவனிஸ்ட்."

மீனாட்சியம்மாள், எந்த விசேஷ வீட்டுக்குப் போனாலும் தானே ஏதாவது வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள். மனோகரியிடமும் இதே பழக்கம் உண்டு. சென்னைக்குத் திருமணமாகி வந்த பிறகும், ஆஃபீஸில் பல ஆண்களோடு வேலை பார்க்க ஆரம்பித்த பிறகும் கூட மனோகரியிடம் அவளுடைய அடிப்படையான குணங்களில் எந்த மாற்றமும் இல்லை. சம்பந்தம் எப்போதும் சதாசர்வ காலமும் படித்துக் கொண்டே இருப்பார். அவருடைய குணம் ரஞ்ஜனியிடம்தான் இருக்கிறது. சம்பந்தம் எப்போது பார்த்தாலும் படித்துக்கொண்டே இருப்பது மீனாட்சியம்மாளுக்குப் பிடிக்காது. மனோகரிக்கும் இப்படித்தான். கிருஷ்ணபாரதி படித்துக் கொண்டே இருப்பது பிடிக்காது. ஆனால், கிருஷ்ணபாரதிக்குப் படிப்பது, எழுதுவது தான் தொழிலே. அவனால் என்ன செய்ய முடியும்?

(தொடரும்)

என் 'செல்'லமே!

ஒருமுறை சீமந்த விழாவுக்குச் செல்வதற்காக ஆரணியிலிருந்து வேலூர் செல்ல பேருந்து நிலையத்தில் காத்திருந்தோம். முகூர்த்த நாள் என்பதால் பயங்கரக் கூட்டம். வேலூர் பஸ் வருவதைப் பார்த்து ஒரு கூட்டமே முண்டியடித்து ஓடியது. என் கணவரும் இடம்பிடிக்க ஓடினார். இடம்பிடித்து ஏறி உட்கார்ந்ததும் பார்த்தால் செல் ஃபோனைக் காணவில்லை. பெரும் பொக்கிஷத்தை இழந்துவிட்டது போல் முகம் வாடி விட்டது எங்களுக்கு!

பேருந்தில் யாரேனும் வைத்திருந்தாலும் கண்டுபிடித்து விடலாம் என எண்ணி உடனே என்னுடைய செல்லில் இருந்து அவர் நம்பருக்கு ஃபோன் போட்டார். ரிங் போய்க் கொண்டேயிருந்தது. யாரும் எடுக்கவில்லை. பேருந்தினுள் ஒரே இரைச்சல். பேருந்துக்கு வெளியே யாரேனும் வைத்துள்ளனரா என ரிங் போட்டபடியே பேருந்தை விட்டு இறங்கிக் கவனித்தார். அப்போதும் சத்தம் கேட்கவில்லை.

நாங்கள் தேடுவது அறிந்து சக பயணிகளும் பரபரப்பானார்கள். டிரைவர் வந்து டிரைவிங் சீட்டில் அமர்ந்து விட்டார். போனது போனதுதான் என எண்ணி கணவரும் பேருந்தில் ஏறிக் கொண்டார்.

இங்கேதான் எங்கோ இருக்கிறது என்பதாய் உள்ளுணர்வு எனக்குள் தவிப்பாய் மாற 'வேண்டுமானால் வண்டியை விட்டு இறங்கி இன்னும் சற்று நேரம் பார்த்துவிட்டுச்



குரங்குக்குப் பிடித்த ஸ்கிரீன் ஸேவர்!

கோடை விடுமுறையில் குற்றாலத்துக்குச் சுற்றுலா சென்றோம். எங்களுடன் வந்தவர்கள் சிலர், தங்கள் மாற்றுத் துணிகள், வாட்ச் இவற்றை அருவிக் கரையில் வைத்து விட்டு, பாதுகாப்புக்கு ஒருவரையும் உட்காரச் சொல்லிவிட்டுக் குளிக்கச் சென்றனர். நானும் என் செல் ஃபோனை அவரருகில் விரித்திருந்த துணியின்

வாசகர்களே! உங்க செல்லஃபோன் அனுபவத்தை எழுதுங்க.. KACON என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு உங்கள் அனுபவம், பெயர்

செல் போயி செல் வந்துச்சே டும்...டும்...டும்...



செல்லலாமே' எனக் கூறிக் கொண்டிருந்தேன்.

ஆனால், அவரோ, கண்ணை மூடி சில விநாடிகள் அப்படியே உட்கார்ந்து விட்டார். பேருந்து மெல்ல ஆடி அசைய புறப்பட யத்தனித்தது. திடீரென 'இரு வர்றேன்' என்றபடி எழுந்து ஓடினார்.

வண்டி கிளம்பி விட்டதால் இருப்பதா... இறங்குவதா? எனத் தெரியாமல் விழித்தேன். பேருந்து வேகம் பிடிக்க என் ஹார்ட் பீட் எகிறியது. ஃபுட்போர்டில் தொங்கியபடி வண்டியைப் பிடித்தவர் 'கிடைச்சிடுச்சு' என செல்ஃபோனைக் கைகளில் உயரே தூக்கிக் காட்டினார். எங்களுடைய மகிழ்ச்சியையும் மீறி சக பயணிகள்தான் அதிகம் சந்தோஷித்தனர்.

பஸ் பிடிக்க வேண்டி எதிர்ப்புறம் இருந்த கால்வாயை எகிறிக் குதித்துக் கடக்கையில் பக்கவாட்டில் இருந்த குப்பைமேட்டில் அவரின் செல்ஃபோன் விழுந்து விட்டிருக்கிறது. குப்பையின் மேல் கிடக்கவே யாரும் கவனிக்கவே இல்லை.

'நீங்க ஏதோ நல்லது செஞ்சிருக்கீங்க சார், அதான் உங்க பொருள் திரும்ப பத்திரமா கிடைச்சிடுச்சி' என நல்ல வார்த்தை சொல்லி வாழ்த்தினார் ஒரு பயணி.

- பவித்ரா நந்தகுமார், ஆரணி

மீது வைத்து விட்டுக் குளிக்கப் போனேன். திடீரென எங்கிருந்தோ வந்த குரங்கு, கரையிலிருந்த மற்ற பொருள்களை விட்டு விட்டு என் செல்ஃபோனை மட்டும் எடுத்துக் கொண்டு உயரமான ஒரு மதில் சுவரில் ஏறித் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தது. 'புத்தம் புதிய நவீன செல்ஃபோன்ல ஸ்கிரீன் சேவரில் உன் முகத்தை வெச்சிட்டதாலே குரங்குக்கு ஈர்ப்பு வந்துடுச்சு போல' என்று ஒருபுறம் எல்லோரும் கேலி பேச, எனக்கு மட்டும் எப்படிக் குரங்கிடமிருந்து செல்லை வாங்குவது என்று கவலையாய் இருந்தது. முடிந்தவரை குரங்கு வேறெங்கும் போகாதவண்ணம் பார்த்துக்கொண்டேன். பின் அருகிலிருந்த ஒருவரின் செல்ஃபோனை வாங்கி குரங்கு கையிலிருந்த என் செல்லுக்குத் தொடர்பு கொண்டேன். வண்ணவண்ணமாய் மின்னியபடி ரிங்டோன் அலறல் கேட்டதும், செல்ஃபோனைக் கீழே போட்டுவிட்டு ஓடியது குரங்கு. நல்லவேளை உயரத்திலிருந்து விழுந்தாலும், மணல் திட்டில் விழுந்ததால் எந்தச் சேதமுமில்லாமல் என் செல்ல செல் கிடைத்த திருப்தி எனக்கு.

- கிருத்திகா, திருச்சி.

kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில்
ஊர் ஆகியவற்றோடு 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

தொழிலில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் விலகி, வியாபாரம் முன்னேற்றத் திசையில் நகரும். பொருளாதாரச் சிக்கல் நீங்கி உறவுகள் சீர்படும். கடன் தொல்லை முற்றிலும் மறையும். பிள்ளைகளின் கல்வி வளம் பிரகாசிக்கும். வெளிநாடு சென்று வர வாய்ப்புகள் தேடி வரும். பத்திரிகைகளில் உங்கள் பெயர் இடம் பெற்று செல்வாக்குக் கூடும்.

ரிஷபம்

நீண்ட காலம் இருந்து வந்த தடைகள் நீங்கி திருமணம் கைகூடும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை நடந்து கணிசமாகப் பங்கு உங்களை வந்தடையும். கூட்டாளிகள் விலகிப் போனாலும் உங்களுக்குப் பாதிப்பு இல்லை. ஆயினும் கொடுக்கல் வாங்கலில் கொஞ்சம் கவனம் தேவை. புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நல்லது.

மிதுனம்

தந்தைவழி சொத்துகள் வந்து சேரும். வழக்குகள் உங்களுக்குச் சாதகமாகும். இல்லற வாழ்வில் கொஞ்சம் விட்டுக் கொடுப்பது நல்லது. சாதகமான வெளிநாட்டுச் செய்திகள் குடும்பத்தாரைக் குஷிப்படுத்தும். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். சுபகாரியப் பேச்சுவார்த்தை வெற்றியைத் தரும். ஆரோக்கியத்துக்கு ஒரு குறையுமில்லை.

திடீர்ப் பயணம் புண்ணிய ஸ்தலமாக அமையும். பிள்ளைகளின் கல்வி வளம் பிரகாசிக்கும். புதிய தொழில் துவங்க சரியான நேரமிது. வழக்குகள் முடிவுக்கு வரும். பயமும் பதற்றமும் விலகி, உறவினர்கள் பாதுகாப்புக் கவசமாக நிற்பார்கள். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். குருவாயூர் சென்றுவந்தால் நினைத்த 'அந்த' காரியம் ஈடேறும்.

சிம்மம்

எதிர்பாராத நேரத்தில் திடீர் பண வரவு உண்டாகும். வேலைப்பளு அதிகரித்து கொஞ்சம் ஆரோக்கியம் குறையும். குழந்தைகள் இடம் பெயர வேண்டியிருக்கும். மறைமுக எதிரிகளின் தொல்லை நீங்க குரு பகவானுக்குத் தீபம் ஏற்றி வருவது நற்பலனை அளிக்கும். நண்பர்களின் உறவு புதுப்பிக்கப்பட்டு மகிழ்ச்சி பொங்கும்.

கன்னி

வியாபாரம் நல்ல ஆதாயம் தரும். பழைய கடன் பாக்கி பைசல் ஆகும். புதிய வீடு வாங்கும் யோகம் கூடி வரும். வெளியூர் செல்ல நேரிடும். சுபச்செலவுகள் வரும். தாயின் உடல்நிலையில் கூடுதல் கவனம் தேவை. கைப்பொருள் மீது கவனம் தேவை. எதிர்ப்புக்கள் விலக சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாடு அவசியம்.

நடக்குமென்பார்: நடக்கும்!

துலாம்

புண்ணியத் ஸ்தலம் செல்ல நேரிடும். குலதெய்வ வழிபாடு நிறைவேறும். சுபகாரியம் கைகூடும். படிப்பும் தொழிலும் வெற்றி இலக்கை நோக்கி முன்னேறும். புதிய சொத்து வந்தடையும். நண்பர்கள் மூலம் ஆதாயம் ஏற்படும். தற்காலிகமாக எதிரிகள் தொல்லை இராது. மனசஞ்சலம் தீர இவ்வாரம் முழுதும் குருபகவானுக்குத் தீபம் ஏற்றி வழிபடவும்.

மகரம்

பணத்துக்குப் பஞ்சம் இருக்காது. முயற்சித்த காரியம் வெற்றியைத் தொடும். வழக்குச் சாதகமாய் அமையும். மகான்களின் சந்திப்பும் ஆசியும் சுலபமாய் வாய்க்கும். தந்தை வழி சொத்து உங்களை வந்தடையும். வெளிநாடு செல்ல சாதகமான சூழல் நிலவும். வீடு / மனை வாங்க ஏற்ற நேரம் இது. இந்த வாரம் பரிகாரம் ஏதும் தேவையில்லை.

விருச்சகம்

கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போடாதீர்கள். வாக்குவாதம் வேண்டாம். இந்த விஷயங்களைத் தவிர்த்தாலே போதும். இந்த வாரம் மகிழ்ச்சியாக இருக்கும். நல்லவரின் உதவி உங்களைத் தேடி வரும். ராகு, கேது வழிபாடு இந்த ராசிக்காரர்களுக்கு நன்மையை அளிக்கும்.

கும்பம்

சுபச்செலவு ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். கூட்டாளியை விட்டு பிரிய நேரிடும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். வீடு மாற்றல் ஏற்படலாம். வேலைப்பளு குறையும். மறைமுக எதிரிகளின் தொல்லையை வெகு சுலபமாகத் தவிடு பொடியாக்குவீர்கள். சனி பகவானை வணங்கி வாருங்கள். சந்தோஷம் நிழலாய் பின் தொடரும்.

தனுசு

இல்லற வாழ்வு இனிதாய் அமையும். வீடு மாற்றம் ஏற்படும். எதிரிகள் தொல்லை இருக்காது. தலைமையிடம் நடக்கும் பேச்சு வார்த்தைப் பலன் அளிக்கும். இழுபறி வழக்குகள் முடிவுக்கு வரும். பிள்ளைகளின் கல்வி வளம் பிரகாசிக்கும். சனிக்கிழமைதோறும் சனி பகவானுக்குத் தீபம் ஏற்றிவர சங்கடங்கள் தீரும்.

மீனம்

செலவுகள் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து உற்சாகம் எழுப்பும். புதிய பொருள் வரவு இருக்கும். தூர தேசப் பயணம் சாத்தியமாகும். மனசஞ்சலம் தீரும். கோர்ட் வழக்கு வெற்றி பெறும். குழந்தை பாக்கியம் கிட்டும். வேலையில் பதவி உயர்வு கிட்டும். தடைபட்டு வந்த பூர்வீகச் சொத்து வந்து சேரும். ஆஞ்சநேயர் வழிபாடு ஆனந்தமளிக்கும்.

01.08.2010 முதல் 07.08.2010 வரை

புன்னகை

புத்தகத்தின் முதல்
பக்கத்தில் இருக்கும்
உன் பெயரை
மெல்ல வருடுகையில்
விரல்களில் உணர்கிறேன்
உன் புன்னகையை.

-கல்யாணி

அரற்றும் வாழ்வு

நெடுந்தொலைவில்
ஒற்றைக் கமுகென
வறண்டு வளர்ந்திருந்தது
உன் பிரியம்

குடுவைக்குள் கடிதமென
அடைக்கப்பட்டு
ஆழ்கடலின் அடியில்
அலைந்திருந்தது
என் பிரியம்

துரித பயணத்தை
எதிர்த்திருக்கும்
காற்றின் வெளியெங்கும்
காகங்கள் பறந்து பறந்து
தேடிக் கொண்டிருக்கலாம்
அப்பிரியங்களை

இருந்தாலும்
கோவில் புறாவென
தமக்குத்தாமே
அரற்றிக்கொண்டிருந்தன
நம் வாழ்க்கை

-லாவண்யா சுந்தரராஜன்



கைப்பிடிக் கனவு

மடித்து வைத்துத் தூங்கிய
கைகளின் அழுத்தம்
தோளில் குழந்தையைச் சுமந்த
கனவாக வெளிப்பட,
புரண்டு படுத்தவள்
அறைத்தோழியைக்
கொஞ்சிச் சிரிக்கிறாள்.

-முகுந்த்நாகராஜன்

வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு

கவிதை கஃபே

தொழில்நுட்பம்

தொழில்நுட்பப் பூங்காக்களின்
கண்ணாடிக் கட்டடச் சுவர்களை
கயிற்றில் தொங்கிச் சுத்தம் செய்பவன்,
ஓவர்டைமில்
முகம்திருத்தி அனுப்பி வைக்கிறான்
வீடுதிரும்பும் சூரியனை.

-கார்த்திகா முகுந்த்

காற்று அசைக்காத மொட்டு

வேலியாய்க் கிடத்தப்பட்ட
காய்ந்த கருவேல கிளைகளில்,
தொங்கிக் கொண்டிருக்கின்றன
காற்று அசைக்காத
மழை மொட்டுகள்!

-ஜா:பிராங்க்ளின்குமார்



பூக்களின் வரிசை

குழந்தை தனக்குத் தெரிந்த
பூக்களின் பெயர்களைச்
சொல்லிக்கொண்டே வந்தது

நினைவில்
வரிசை தடுமாறியபோது
பூக்களோடு சேர்த்துக் கொண்டது
தம் பெயரையும்

சொல்லி முடித்த நிம்மதியில்
புன்னகையுடன் பார்த்தது

குழந்தையின் பெயரில்
சேர்ந்திருந்தது
எல்லா பூக்களின் வாசமும்

-ராஜாசந்திரசேகர்

குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.



''எவ்வளவு சொல்லியும் நம்ம பையன் கேட்க மாட்டேங்கறான். அந்த டீ.வி. சீரியல் நடிகையைத்தான் கல்யாணம் பண்ணுவேன்னு அடம்பிடிக்கிறான்.''

''சரி போய் அழச் சொல்லு!''

- எஸ்.முகம்மது யூசுப்


''நீ தொடர்ந்து திருட்டுத் தொழில்ல ஈடுபட என்ன காரணம்?''

''நாலு-அஞ்சு போலீஸ் குடும்பம் என்னால பிழைக்குதேங்கிற ஒரே காரணம்தான் எசமான்!''

- சீர்காழி வி.ரேவதி



கடவாப்பல்லு ஆடுது; சிங்கப்பல்லு கை தட்டுது!



''தலைவர்க்கு இன்னும் சினிமா மோகம் தீரலைன்னு எதை, வச்சுச் சொல்றே?''

''கிராமத்துப் பெண் குழந்தைக்குப் பெயர் வைக்கச் சொன்னால் 'மிளகாயி'ன்னு, வச்சுட்டாரே.''

- அ.ராஜப்பன், கருமத்தம்பட்டி

''மன்னா... எதிரிப்படை நமது கோட்டையைச் சுற்றி நிற்கிறது!''

''பலே... எதிரி என்றும் பாராமல் நமக்குப் பாதுகாப்பு தருகிறானே!''

- கோவை நா.கி.பிரசாத்





''பல் டாக்டருக்கு எப்பவுமே தமாசு தான்.''

''எப்படிச் சொல்றே?''

''கடவா பல் ஆடுதுன்னு சொன்ன துக்கு, சிங்கப் பல் என்ன கைதட்டு தான்னு கேட்கிறார்!''

- பி.பாலாஜி கணேஷ்

''படத்துக்கு எதுக்கு 'துடிப்பு'ன்னு டைட்டில் வச்சீங்க?''

''டைட்டில்லயாவது உயிரோட்டம் இருக்கட்டுமேன்னுதாங்க!''

- ஜி.வினோத்





''தமிழக கிளி ஜோசியர்கள் சங்கம் எதுக்குப் போராட்டம் நடத்தறாங்க?''

''ஆக்டோபஸை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்துடக்கூடாதுன்னுதான்.''

- மங்கையர்க்கரசி

உங்க ஊரு, நம்ம ஊரு

அ.இ.அ.தி.மு.க.வில் கோகுல இந்திரா ஒரு அதிரடியான பேச்சாளர். சிவகங்கை மாவட்டக் கட்சிப் பொறுப் பாளரான கோகுல இந்திரா, குறிப்பாக தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட் டங்களில் உள்ள ரத்தத்தின் ரத்தங்களிடம், இந்தப் பகுதியில் நிறைய கூட்டங்கள் ஏற்பாடு செய்யுங்கள். அடிக்கடி இங்கே வர விரும்புகிறேன்' என்று சொல்கிறாராம். 'இவர் பொறுப்பாளராக உள்ள ஊரில் கட்சி வளர்க்காமல் இங்கே வந்து நம்மை ஏன் குடைகிறார்' என்று மண்டை காய்கிறார்கள் உள்ளூர் அ.தி.மு.க. பிரமுகர்கள்.



சிதம்பரத்துக்குத் தடைபோட்ட தங்கபாலு



சமீபத்தில் கள்ளக் குறிச்சியில் உள்துறை அமைச்சர் ப.சிதம் பரம் காங்கிரஸ் கட்சி சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் பேசுவதாக இருந்தது. ஆனால், அந்தப் பகுதியில் உள்ள வாசன் ஆதர வாளர்கள் கொடுத்த அழுத்தத்தில், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு அந்தக் கூட்டத்துக்குத் தடைபோட்டு விட்டதாக சிதம்பரம் தரப்பு பிரமுகர்கள் சொல்கிறார்கள். 'காது குத்து, கல்யாணம் போன்றவற்றுக்கு மட்டுமே தலைகாட் டும் காங்கிரஸ் தலைவர்களை வைத்து எப்படிக் கட்சியை வளர்ப்பது?' என்று வேதனையுடன் கேட்கிறார் ஒரு சிதம் பரம் ஆதரவாளர் ஒருவர்.

மலை முழுங்கி தளபதிகள்

மதுரையில் உள்ள தளபதிக்கு தளபதி அவர். பேரையூர் பகுதியில் அகதிப் பெண்களுக்கான கூட்டுறவு அமைப்புக் குச் சுயஉதவி திட்ட அடிப்படையில் கல் உடைக்கும் குவாரி ஒன்று குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. தளபதி தனது 'சக்தி' பின்னணியில் உள்ள தைரியத்தில் குவாரியைத் தன் கைவசப்படுத்தி விட் டாராம். அதேபோல்திருப்பரங்குன்றத்தில் உள்ள வணிக வளாகத்தின் உரிமை யாளரை மிரட்டி உரிமையை மாற்றிக் கொடுக்க வற்புறுத்தவே அந்த கோடீஸ்வரர் 'துண்டைக் காணோம்' என்று மதுரையை விட்டே ஓடிவிட்டாராம். தெற்கில் ஆட்சியே வேறு!



வீட்டு வசதித் துறையைக் கைவசம் வைத்திருக்கும் ஐ.பெரியசாமிக்கும், அவரது துறைச் செயலருக்கும் நடக்கும் மோதல் தொடர்கிறது. கோவையில் வெள்ளைக் கிணறு என்ற இடத்தில் உள்ள வீட்டு வசதித் துறைக்குச் சொந்தமான நிலங்களை, தொழிலதிபர்களுக்குக் கைமாற்றி விட முயல்வதாக அமைச்சர் மீது குற்றம் சுமத்துகிறாராம் செயலர். இது தொடர்பாக ஒரு கோப்பைத் தயார் செய்து முதல்வருக்கு அனுப்பியிருக்கிறாராம் செயலர். 'இந்தத் துறையே வேண்டாம்' என்று விரக்தியில்(?) இடிந்துபோயிருக்கிறாராம் அமைச்சர். இதைத்தானே எதிர்பார்க்கிறார் செயலர்.



இடிந்துபோயிருக்கும் ஐ.பெரியசாமி?



ராமமூர்த்தியா? ராமதாஸா?

வன்னியர் அரசியலில் டாக்டர் ராமதாஸுக்கு எதிராகக் களமிறங்கியிருக்கும் பாட்டாளி மக்கள் முன்னேற்றக் கட்சியின் (PMMK) டாக்டர் சி.என்.ராமமூர்த்தி இப்போது போயஸ் கார்டனுக்கு மிகவும் நெருக்கமாகியிருக்கிறார். 1993ல் ஜெ முதல்வராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 69 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து உறுதியாக்கியதற்காக வன்னிய மக்கள் சார்பாக மாபெரும் பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்து வருகிறார். இந்த நிலையில் கோவையில் ஜெ.வுக்குக் கூடிய கூட்டத்தைப் பார்த்து, டாக்டர் அன்புமணி மீண்டும் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைக்க ரகசியத் தூது விட்டுக் கொண்டிருக்கிறாராம்.

சவுக்கடி சங்கர்

தமிழக ஆளும் அரசியல்வாதிகளை இப்போது கலக்குவது savukku.net தான். ஊழல் கண்காணிப்புத் துறையில் பணியாற்றி இப்போது இடை நீக்கத்தில் இருக்கும் சங்கர் நடத்தும் வெப் சைட் இது. சமீபத்தில், 'சாலையில் தகராறு செய்தார்' என்ற அல்ப காரணத்தைச் சொல்லி இவரை மூன்று நாட்கள் 'உள்ளே' வைத்து விட்டார்கள். ஜாமீனில் வந்திருக்கும் சங்கரைக் குண்டர் சட்டத்தில் உள்ளே போட ஏற்பாடு நடக்கிறதாம். ஆனால், இந்த வெப்சைட் நடத்துவது வழக்கறிஞர் புகழேந்தி. தொழில்நுட்ப உதவி மட்டுமே சங்கர். தமிழகத்து புலனாய்வுத் துறை, கூகுளிலிருந்து அழித்தொழிக்க முயற்சி செய்யும் இந்த வெப் சைட்டை அமெரிக்காவில் பதிவுசெய்திருக்கிறார்களாம்.

– சஞ்சயன்



'ஆர்வம்' படத்திலிருந்து


''காதல் மெய்; காதலன் பொய்... இதுதான் 'ஆர்வம்' படத்தின் கான்செப்ட்' என்கிறார் இயக்குநர் ஆதித்யன். ''மதுரைக்கு அருகேயுள்ள ஒரு பொட்டல் கிராமத்தில் நடந்த உண்மைச் சம்பவத்தில் என் திரைக்கதையை எழுப்பியிருக்கிறேன்'' என்கிற ஆதித்யன், இந்தப் படத்தின் மிகப்பெரிய ஹைலைட் என்று இளம் இசையமைப்பாளர் ரோணி ராஃபேலைக் கைகாட்டுகிறார். பிரபல ஆடியோ நிறுவனமான இன்ரிகோ, பாடல்களின் விற்பனை உரிமையை வாங்கியிருக்கிறது.



''ஜெயமுண்டு பயமில்லை'- படத்தோட பேரே ஆக்‌ஷனுக்கான அத்தனை சாத்தியக்கூறுகளைச் சொன்னாலும் படத்தில் 'வில்லன்' என்று யாருமில்லை. படத்தின் சூழலே (திரைக்கதையே) ஹீரோவுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வதுபோல கதை பின்னப்பட்டிருக்கிறது! இதற்கு உதாரணம் தான் க்ராஃபிக்ஸில் உருவாக்கியிருக்கும் சுனாமி சீக்குவன்ஸ்தான்'' என்கிறார் இயக்குர் செந்தமிழ்.




'ஜெயமுண்டு பயமில்லை' படத்திலிருந்து



…ம் பறக்கும் உல்லாஸ்!

வானத்தில் மிதக்கிறார் சினேகா உல்லால். இருக்காதா பின்ன? 'வானம்' படத்தில் சிம்புவின் ஜோடியென்றால் சும்மாவா? ஆரம்பத்தில் அனுஷ்கா நடிப்பதாகத்தான் சிலம்பரசன் ஸாரி எஸ்.டி.ஆர். பேட்டிக் கொடுத்திருந்தார். என்ன ஆனதோ தெரியவில்லை. ஒரே ஒரு பாட்டுக்கு மட்டும் இப்போது பர்ஃபாமன்ஸ் என்றளவோடு நிறுத்திக் கொண்டிருக்கிறாராம். ஐஸ்வர்யா ராயோடு நட்பு முறிவு என்ற நிலை வந்த பிறகு இந்தியில் சல்மான்கானால் கண்டெடுக்கப்பட்டவர்தான் இந்த சினேகா உல்லால். காரணம் ஐஸ்வர்யாராயின் ஜெராக்ஸ் பிரதிபோல் இருப்பதுதான்.



'அவர்களும் இவர்களும்' படத்திலிருந்து

…நினைக்கும் நாயகனுக்கு எதிராக நடக்கும் தடைகள்தான் 'அவர்களும் இவர்களும்' படத்தின் கதை. படம் இயக்குநரின் அனுபவமாம். (இயக்குநர் வீரபாண்டியன்). வான்மதி, காதல் கோட்டை, கோகுலத்தில் சீதை... போன்ற படங்களில் அகத்தியனின் உதவியாளராய் இருந்த வீரபாண்டியன் இந்தப் படத்தில் அகத்தியனை நடிகராக அறிமுகப்படுத்துகிறார்.

பெண்களை உயர்வாகச் சித்தரித்தற்காக 2007-ஆம் ஆண்டின் சிறந்த படமாகத் தேர்வாகி தமிழக அரசின் சிறப்புப் பரிசுப் பெற்ற படம் 'மிருகம்'. அதைத் தயாரித்த கார்த்திக் ஜெய் மூவிஸ் நிறுவனத்தின் அடுத்தப்படம் 'நெல்லு'. தஞ்சையில் வாழும் ஒரு விவசாயியின் வீரமும் - காதலும்தான் கதை. என்றாலும் படப்பிடிப்பு அனைத்தும் கோபிசெட்டிபாளையத்தில். காரணம் கேட்டால், பசுமை என்கிறார் இயக்குநர் சிவசங்கர்!



'நெல்லு' படத்திலிருந்து

வீட்டில் வயதான பெற்றோர்கள் இருந்தால் அவர்கள் வைரக் கற்களுக்கு ஒப்பானவர்கள் என்று ஜப்பானியர்கள் சொல்வது வழக்கம். நான் முற்பிறவியில் ஜப்பானில் பிறந்து இருப்பேனோ என்னவோ? இந்தப் பிறவியில் இந்தியாவில் பிறந்திருந்தாலும் என் பெற்றோரை இரண்டு வைரக் கற்களாகவே பாவித்து வந்தேன்.

அந்த வைரக்கற்களில் ஒன்றை (அம்மா) 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் தேதி இரவு ஒன்பது மணிக்கு கடவுள் என்னிடம் இருந்து தட்டிப் பறித்துக் கொண்டார். அம்மாவின் திடீர் மரணம் அப்பாவைப் புரட்டிப் போட்டாலும் சில நாட்களுக்குள்ளாகவே அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டார். அம்மா இறக்கும்போது அப்பாவுக்கு 81 வயது.

அவசியம் என்றால் தவிர, அப்பா என்னிடம் அதிகம் பேச மாட்டார். ஊரிலிருந்து பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள் வந்து விட்டால், தானும் ஒரு குழந்தையாய் மாறி அவர்களுக்குச் சமமாய் விளையாட ஆரம்பித்து விடுவார்.

தினசரி மாலை நாலு கிலோ மீட்டர் தூரம் நடந்ததால், எந்த நோயும் அவரைத் தொட பயந்து எட்டி நின்று பார்த்து விட்டுப் போய் விட்டது. காலையில் ஆறு மணிக்குக் கண் விழித்தால் பால் வாங்குவது, செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது, காரைத் துடைப்பது, வீட்டைச் சுத்தம் செய்வது, என் பேண்ட் சர்ட்களை அயர்ன் செய்வது, படித்து முடித்த நாளிதழ்களையும் வார இதழ்களையும் ஒழுங்காக அடுக்கி வைத்து பழைய பேப்பர்காரனுக்குப் போடுவது, எனக்கு வேண்டிய கடிதக் கவர்களைச் செய்து கொடுப்பது... இப்படி ஒரு பட்டியல் போட்டுக் கொண்டு வேலை செய்ததால் அவருடைய 87 வயது எனக்கு 27 வயதாகத் தோற்றம் கொடுத்தது.

உப்பில்லாத பண்டத்தைக் குப்பையில் போடச் சொல்லவில்லை. தொப்பையில் போடச் சொன்னார்கள்.

அப்பாவுக்குப் பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதிகம். 1980-ல் சொந்தமாய்க்



நான் இழந்த வைரக்கற்கள்!

ராஜேஷ்குமார்

கைத்தறி சேலைகள் பிஸினஸ் நடத்தி பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டபோது, ஒட்டுமொத்த குடும்பமும் இடிந்து போயிற்று (அந்த நஷ்டத்தின் இப்போதைய மதிப்பு 2 கோடி). அப்பா மட்டும் இடிந்து போகாமல், 'எந்தக் காரணத்துக்காகவோ இறைவன் நமக்கு அபராதம் விதித்திருக்கிறான். ஒரு கோர்ட்டின் ஜட்ஜ்மெண்ட்டைப் போல் இதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்' என்று எங்களையும் தேற்றினார்.

நான் பி.எஸ்ஸி., படித்துவிட்டு ஒரு வருடம் முழுவதும் வேலையில்லாமல் வீட்டில் சும்மா இருந்தபோது பொழுது போவதற்காகக் கதைகள் எழுதினேன். மற்றவர்கள் கேலி செய்தார்கள்.



'இவனுக்கு மனசுல ஜெயகாந்தன்னு நினைப்பு. ஒரு மளிகைக் கடைக்குப் போய் கணக்கு எழுதினாக்கூட இருபது முப்பது கிடைக்கும்' என்று கமெண்ட் செய்தபோது என்னுடைய அப்பா என் தோளில் கைவைத்து 'உனக்கு எது பிடிக்குதோ அதைச் செய்' என்று சொன்னார். இல்லையெனில் 1500 நாவல்கள் சாத்தியம் ஆகியிருக்காது.

அவரிடம் இருந்து நான் கற்றுக்கொண்டது நிறைய. அதில் முக்கியமானது சகிப்புத்தன்மை. ஒருநாள் பகல் உணவு சாப்பிட இருவரும் ஒன்றாய் உட்கார்ந்தோம். சாம்பார் சாதத்தைப் பிசைந்து சாப்பிடப் போகிற நேரத்தில் எனக்கு ஒரு டெலிஃபோன் அழைப்பு வந்தது. ஒரு ஐந்து நிமிஷம் பேசிவிட்டு சாம்பார் சாதத்தைச் சாப்பிட ஆரம்பித்தேன். உப்பு குறைவாக இருந்ததால் என்னால் சாப்பிட முடியவில்லை. அப்பா கேட்டார், ''என்ன உப்பு கம்மியாய் இருக்கா?''

''ஆமா! நீங்க எப்படிச் சாப்பிட்டீங்க?''

''உப்பு போட்டுக்கலை... அப்படியேதான் சாப்பிட்டேன்!''

''எப்படிச் சாப்பிட முடிந்தது?''

''ஏன் சாப்பிட்டா என்ன?''

''என்னால முடியாது! உப்பில்லாத பண்டத்தைக் குப்பையில போடுன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க..''

அப்பா கையமர்த்திவிட்டுக் கேட்டார்: ''இப்போ நீ என்ன பழமொழி சொன்னே?''

''உப்பில்லாத பண்டத்தைக் குப்பையில் போடு.''

நான் அயர்ந்துபோக அவர் சொன்னார். ''வயசு நாற்பது ஆயிட்டாலே உப்பைக் குறைச்சு நாம் சாப்பிடணும்னு பெரியவங்க சொல்ல நினைச்சுத்தான் உப்பில்லாத பண்டத்தைத் தொப்பையில் போடுன்னு சொல்லிட்டுப் போயிருக்காங்க. நாமதான் நம்ம வசதிக்குப் பழமொழிகளை மாத்திக்கறவங்க

......? **தொப்பையில்** என்கிற வார்த்தையைக் **குப்பை**யிலேன்னு மாத்திக்கிட்டோம். ஒருநாளைக்கு உப்பு குறைச்சலாய்ச் சாப்பிட்டா என்ன ஆயிடும்...? பின்னேயும் உடம்புக்கு நல்லது தானே?''

அப்பா இப்படிச் சொன்ன நாளிலிருந்து நானும் அதைக் கடைப்பிடிக்க ஆரம்பித்து விட்டேன்.

கடந்த ஆறு மாத காலத்தில் அப்பா என்னிடம் நிறையவே பேசினார். அதில் அடிக்கடி அவர் சொன்னது:



அந்தக் கடிதத்தை அப்பாவின் நினைவு வரும்போதெல்லாம் எடுத்துப் பார்த்துக் கொள்கிறேன்.

''உன்னுடைய அம்மா, யாருக்கும் எந்த ஒரு பிரச்னையையும் கொடுக்காமல் நோயில் விழாமல் ஹாஸ்பிடலுக்குப் போகாமல் பத்தே நிமிஷத்தில் இறந்து போனதுபோல் என் முடிவும் இருக்க வேண்டும்.''

இந்த வார்த்தைகளை எந்த நேரத்தில் அவர் சொன்னாரோ தெரியவில்லை. கடந்த 8.7.2010 அன்று இரவு 10 மணியளவில் அவர் விருப்பப்பட்ட மரணம் அவருக்குக் கிடைத்துவிட்டது.

9.45 வரை என்னிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்துவிட்டு 10 மணிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு பிறகு வந்த சில நிமிடங்களில் தன் உயிர்த் துடிப்பை நிறுத்திக் கொண்டார்.

உயிர் பிரியும் கடைசி விநாடிகளில் என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். பக்கத்தில் போனேன். என் இரண்டு கைகளையும் அவருடைய இருதயத்தின் மேல் வைத்துக்கொள்ளச் சொன்னார்.

வைத்துக் கொண்டேன். அவருடைய உயிர் சிறிது சிறிதாய்ப் பிரிவதை உணர்ந்தேன்.

என்னிடம் இருந்த இன்னொரு வைரக் கல்லையும் இறைவன் பறித்துக்கொண்டான்.

இது எனக்குப் பெரிய இழப்புதான். மனம் கனத்துப் போய் கிடந்தது. அப்பா இறந்து போன ஒரு வாரம் கழித்து கும்பகோணம், திருநாகேஸ்வரம் உப்பிலியப்பன் கோயிலிலிருந்து பட்டர் மதுசூதனன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

1. உங்கள் தந்தையார் ஆயிரம் பிறை கண்ட மாமனிதர்.

2. நான்கு வாரிசுகளைப் பார்த்து கனகாபிஷேகம் செய்து கொண்டவர். இப்படிப்பட்ட பாக்கியம் கிடைப்பது அரிது. உங்கள் தந்தைக்கு வைகுந்தப் பதவி உண்டு.

3. நீங்களும் உங்களுடைய மனைவியும் அவரைக் கவனித்துக் கொண்டவிதம் உங்கள் வாரிசுகளை நன்கு வாழ வைக்கும்.

இறைவனின் சந்நிதானத்திலிருந்து வந்திருந்த அந்தக் கடிதம் இறைவனே என்னிடம் பேசியது போலிருந்தது.

'இதைவிட பாக்கியம் வேறு ஏதாவது உண்டா?'


அந்தக் கடிதத்தை அப்பாவின் நினைவு வரும்போதெல்லாம் எடுத்துப் பார்த்துக் கொள்கிறேன். ●

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

VBC Jewellery
HOUSE OF VUMMIDI

இணைந்து வழங்கும்



'வைர மங்கை'

-சிறப்பு சந்தா திட்டம்!*

கல்கி நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான, தரத்திலும் நம்பர் ஒன் மகளிர் மாத இதழ் மங்கையர் மலர் ஆகஸ்ட் இதழில், 'வைர மங்கை' - சிறப்பு சந்தா திட்டம் (பக்கம் 187) பற்றிய அறிவிப்பு வெளியானது. இத்திட்டத்தின்படி எந்த ஒரு நபரும் மங்கையர் மலருக்கு சந்தா கட்டி, ஐந்து முத்து மங்கைகளை அறிமுகப்படுத்தலாம். அப்படி அறிமுகப்படுத்துபவர் பவள மங்கை என்ற பட்டம் பெறுவார். பவள மங்கைக்கும் (ரூ.250/- மதிப்புள்ள) முத்து மங்கைகளுக்கும் (ரூ.100/- மதிப்புள்ள) பரிசுக் கூப்பன்கள் அந்த மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் முப்பது முத்து மங்கைகளை அறிமுகப் படுத்துவதன் மூலம், பவள மங்கையிலிருந்து பதவி உயர்வு பெற்று மரகத மங்கை என்ற மகுடம் சூட்டப்படும்.

இவ்வாறு முப்பது சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தும் முதல் இருபது அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படம் அடுத்து வரும் மங்கையர் மலர் இதழில் வெளியாகும். கூடவே 'வைர மங்கை' பம்பர் பரிசுக் குலுக்கலில் கலந்து கொள்ளவும் அவர்கள் தகுதி பெறுவார்கள்.

'கல்கி' நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான நமது மங்கையர் மலர் இதழின் அன்புவட்டம் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்துக்கு, வாசகியரின் ஏகோபித்த வரவேற்பைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். கல்கி வாசகர்களையும் இத்திட்டத்தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நீங்களும் வைர மங்கை ஆகணுமா? அதற்கான கூப்பன் அடுத்த பக்கத்தில்...

மேலும் விவரங்களுக்கு (ஆர்)

94443 83465 / 99400 73736

*விதிமுறைகளுக்கு உட்பட்டது

இத்திட்டத்தில் மும்முரமாக இறங்கி முப்பது முத்து மங்கைகளை அறிமுகப் படுத்திய முதல் மூன்று மரகத மங்கைகள்...

ஜூலை மாத மரகத மங்கைகள்!



* சுசீலா அரவிந்தன், திருச்சி



* சுசீலா முத்துசாமி, சேலம்



* கோகுலவாணி, திருப்பூர்

... வழங்கும் 'வைர மங்கை' சிறப்பு சந்தா திட்டம்

அன்பு அனுஷா நடராஜனுக்கு, பவள மங்கையான நான் (தற்போதைய மங்கையர் மலர் வாசகி), மங்கையர் மலரை, 5 முத்து மங்கைகளுக்கு அறிமுகப்படுத்துகிறேன். தாங்கள் கொடுத்துள்ள இந்த படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, 5 ஓராண்டு சந்தாதாரர்களின் தொகையாக, ரூ.1250/- மங்கையர் மலர் என்ற பெயரில் டி.டி/M.O மூலம் இணைத்துள்ளேன். என்னுடைய 5 முத்து மங்கை தோழிகளுக்கும், மங்கையர் மலர் இதழை அடுத்த மாதத்திலிருந்து அனுப்பி வைக்கவும். எனக்கும் என் தோழிகளுக்குமான பரிசுக் கூப்பன்களையும் அனுப்பி வைக்கவும். மேலும் பல முத்து மங்கைகளை அறிமுகப்படுத்த என்னால் இயன்றவரை முயலுகிறேன்.

பவள மங்கை

எனது பெயர் :...

முகவரி:...

....

....

சந்தா எண்: (தாங்கள் சந்தாதாரராக இருந்தால்)

....

☏போன்: ....

ஈமெயில்...

நான் அறிமுகப்படுத்தும் முத்து மங்கைகள்:

1. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:...

ஈமெயில்...

2. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:...

ஈமெயில்...

3. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:...

ஈமெயில்...

4. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:...

ஈமெயில்...

5. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:...

ஈமெயில்...

உறையின் மீது 'வைர மங்கை' என்று குறிப்பிட்டு அனுப்பவும்

அனுப்ப வேண்டிய முகவரி

மங்கையர் மலர் சந்தா பிரிவு, மங்கையர் மலர்,
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

இப்படிக்கு

தேதி:...

சங்கிலி அறுந்து விழட்டும்!



அமரர் கல்கி

'மனோகரா' படம் அதைத் தயாரித்து வெளி யிட்டவர்களுக்கும் திரைப்பட உலகத் தைச் சேர்ந்தவர்களுக்கும் வெற்றி அளித்திருப்பதாகச் சொன்னால் மட்டும் போதாது. முக்கியமாக, 'மனோகரா' பாரதப் பெண் குலத்தின் சிறப்பியல்பான கற்பு நெறிக்கு வெற்றி; பதிபக்திக்கு வெற்றி; 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் மூதுரைக்கு வெற்றி; நேர்மைக்கு வெற்றி; நல்ல ஒழுக்கத் துக்கு வெற்றி; பொறு மைக்கு வெற்றி; சகிப்புத் தன்மைக்கு வெற்றி; தாய்மைக்கு வெற்றி; சத்தியத்துக்கும் தர்மத் துக்கும் வெற்றி.

சூதும் வாதும் நெறி யற்ற நடத்தையும் வஞ் சகமும் வேஷமும் சில காலம் வெற்றியடைவது போல் காணப்படலாம்; திரும்பத் திரும்ப அவையே வெற்றி பெறு வது போல் தோன்றலாம்; ஆனால் இறுதியில் அத்தீய சக்திகள் மடிந்து தூய ஒழுக்கமும் நெறி தவறாத நேர்மை யுமே வெற்றி பெறுதல் உறுதி என்பதை 'மனோகரா' படம் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது.

சிலகாலமாக சீர்திருத்தவாதிகள் மாதர் சம உரிமையைப் பற்றித் தீவிரப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

'கற்பு நெறி என்பது பெண்களுக்கு மட்டுந்தானா? ஆண்களுக்கு இல் லையா? இரு பாலாருக்கும் பொது நெறி யாக இருக்க வேண்டாமா?' என்று பாரதியார் கேட்டு வைத்தார்.

ஆண்களும் ஒழுக்கத்

என்பதற்காகவே இம்மாதிரி பாரதியார் கூறினார்.

பாரதியாருக்குப் பின்னால் வந்த சமூக சீர்திருத்தவாதிகள் அவரைக் காட்டிலும் மிக மிக முன்னாலே சென்றார்கள்.

'ஆண்கள் நெறி தவறினால், பெண் களும் ஏன் நெறி தவறக் கூடாது?' என்று கேட்டார்கள்.

'கற்பு என்பது பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்காகச் செய்த சூழ்ச்சி!' என்று சொன்னார்கள்.

இம்மாதிரியான ஒழுக்கக்கேட்டுக்கு ஆதரவு அளிக்கும் பிரசாரம் நம் நாட்டு மக்களின் உள்ளத்திலே சிறிதும் இடம் பெறவில்லை என்பதை ''மனோகரா'' படத்தின் வெற்றி நிரூபிக்கிறது.

'சங்கிலி அறுந்து விழட்டும்!' என்ற பத்மாவதியின் வாக்குப் பலிக்கும்போது மக்கள் அடையும் குதூகலமும் செய்யும் ஆரவாரமும் அந்த உண்மையைத் தெள் ளத் தெளிவாக்குகிறது.

- கல்கி களஞ்சியம் நூலிலிருந்து







ஹாலிவுட் கனவு நட்சத்திரம் ஏஞ்சலினா ஜோலி நடித்த சால்ட் (தமிழில்) படத்தை ப்ரிமியர் ஷோவில் பார்க்க வந்த நம்மூர் நட்சத்திரங்கள்...


'சால்ட்' படம் பார்க்க வந்துட்டு இந்த மாதிரி கடலை போடுறாரே... அப்போ இதுக்குப் பேர்தான் 'உப்புக்கடலை'யா?





இவருக்கு 'ஷுகர்'ன்னு ஒரு படம் கிடைச்சாக் கூட தேவலாம்!


'வான'த்தை ஓப்பன் பண்ணுனா ஃப்ளாஷ்பேக். ஃப்ளாஷ்பேக்கை ஓப்பன் பண்ணுனா சோனியா அகர்வால்... சே. செம ஸீன்மா...

காற்று வசையிடமிருந்து நீர்க்குமிழியைப் பத்திரப்படுத்துவது போல பிடித்திருந்தாள் காகிதக் கற்றையை. 'கோவை தாலுகா, வசந்தராபுரம், நேரு நகரில் உள்ள மனை எண் இரண்டு' - அடுத்து வரும் வரிகள், எளிதில் விளங்காத அரசாங்க வார்த்தைகளாக நீண்டபோதிலும் வாசித்து மகிழ்ந்தாள். அவள் பெயருக்குப் பதிவுசெய்யப்பட்ட பத்திரம். தாள்கள் கையில் கிடைத்த நாளில் பிரபஞ்ச ஆசிகள்

வீடு



முழுதாகத் தன்மேல் தூவப்பட்டதாகத் தோன்றியது.

இதோ இன்றைக்கும் முன்னிரவில் துப்புரவாக நித்திரையில்லை. ஜென்மாந்திர ஏக்கம் தீரும் நேரம் வந்துவிட்டது. வாஸ்து செய்ய உகந்த நாள் என நாள்காட்டியும், கோணியம்மன் கோயில் குருக்களும் குறித்துக்கொடுத்த நேரம் நெருங்குகிறது. இன்று ஷியாமளியின் புது வீட்டுக்குப் பூமி பூஜை.

அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கோலப்பொடி, கீரை விற்பவர்களின் கூவல் எழவில்லை. 'அம்மா பால்' குரலொலியும் சைக்கிள் மணிச் சத்தத்தையும் காணோம். வெளிச்சத்தை முந்தி எழுந்து, 'சளக் பளக்' என வாசல் தெளிக்கும் பாப்பாத்திக்கா கூட இன்றைக்கென்று நேரம் வரை தூங்கி வழிவதாகப்பட்டது. 'விடியா மூஞ்சிகள்' என முணுமுணுப்போடு சூரியன் உதிக்கும் முன்னமே வெற்று நிலத்தையே சுற்றி வந்தாள்.

ஊருக்கெல்லாம் வாழ்க்கை ஒரு வட்டம். அவளுக்கோ அது சதுரம். அறுபதுக்கு அறுபது சதுர அடி அதன் அளவு. உலகப் பரப்பில் அந்த இடம் சிறு புள்ளி. அவளுக்கு அதுவே உலகம். அந்த மனைதான் இப்போது வீடாகப் போகிறது. அந்தப் பரவசத்தில்தான் இருட்டைச் சபித்துக் காத்திருக்கிறாள்.

ஒருவழியாக மேஸ்திரியும் ஒத்தாசை ஆட்களும் வந்து சேர, சாஸ்திரம் சொல்லும் ஆழம் வரை குபேர மூலையில் குழி தோண்டி நீர் ஊற்றப்பட்டது. தேங்காய், பழம், கற்பூரமென வழக்கப் பொருட்களோடு நவதான்ய மூட்டைகள், குல தெய்வ கோயில் தீர்த்தமென சிறப்புச் சேர்மானங்களையும் சேர்த்து பூஜை முடித்து அத்தனையும் கொட்டப்பட்டது குழியில்.

ஷியாமளி, தன்னிடமிருந்த சற்றே பெரிய துணி மூட்டையைப் பிரித்து உள்ளே கைவிட்டு அள்ளிப் பார்த்தாள். இளங்கதிர் பட்டு தகதகத்தன. மெருகு மங்காத புதுக் காசுகள் கிடைத்தால் அதைச் செலவாக்காமல் சாமி உண்டியலில் போட்டு வைப்பது அவள் வழக்கம். அப்படிச் சேர்த்த காணிக்கையைத்தான் பூமிக்



ஜி.கோமளா



கென மொத்தமாய்க் கொண்டு வந்திருந்தாள். ''என் வம்சம் காசு பணத்துக்குத் தட்டுப்பாடில்லாம வாழணும்'' என்ற மனக் குரலோடு துணியைக் குழியில் கவிழ்த்தாள். அவ்வளவுதான். சம்பிரதாயமென அவள் நினைத்திருக்க, அப்போதுதான் நினைவு வந்தவராக, ஐயர் அடுத்துச் சொன்னதைக் கேட்டு அவள் உற்சாகம் வடிந்து, மனசு பொசுக்கென்றானது.

''சாங்கியத்துக்கு இவ்வளவுதானா..? தோதுப்பட்டவங்க வெள்ளி, தங்கக் காசெல்லாமும் போடு வாங்க. பூஜையப்ப பூமில வெதைக்கறது பின்னால வீட்டுல முளைக்கும்ங்கறது ஐதிகம்.''

இதை முன்னாலேயே சொல்ல வேண்டாமா? இப்போ தங்கக்காசுக்கு எங்க போறது? தவித்தாள் ஷியாமளி. இல்லாட்டிப் போதுகு போவென தங்கம் தவிர்க்கவும் மனம் ஒப்பவில்லை. 'பொன் புதைபடாத வீட்டில் பொருட்செல்வத்துக்குத் தட்டுப்பாடு வந்துவிடுமோ?' தொலைநோக்குப் பார்வையில் விசனப்பட்டாள். மனத்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ.7.500 இரண்டாம் பரிசு பெறும் சிறுகதை

ஊறியபழுக்களிடையே தாலி நினைவு வந்தது.

அவள் தாலிக் கயிற்றின் இருபுறமும் இணையான அளவில் கருகமணி, பவழத்தோடு லட்சுமி உருவம் பொறித்த இரண்டு தங்கக் காசுகளும் உண்டு. ஒவ்வொன்றும் ஒரு சவரன் பெறும். அதில் ஒன்றைப் பூமிக்கு இடம் மாற்றத் தீர்மானித்தாள். தினசரி தேய்த்த மஞ்சளும், தண்ணீரும், வியர்வையுமாக ஊறி, உலர்ந்து, இறுக்கிக் கிடந்தன முடிச்சுகள். அவிழ்ப்பது சாமான்யமில்லை. சிரமத்திலும் வேற்றாள் அறியாமல் பிரித்து, காசை தனித்தெடுத்தாள். உள்ள லட்சுமிகள் எட்டென்றாலும் மகாலட்சுமியை தன் தாலியில் சேர்த்த அம்மா



வுக்கு ஒரு நன்றியும், 'என் சந்ததி எந்தச் செல்வத்துக்கும் குறையில்லாம வாழ நீதான் தாயே துணையா நிக்கணும்' என அம்மனுக்கொரு கோரிக்கையுமாகக் குபேர குழிக்குள் தங்கத்தைப் புதைத்தாள். பேச்சில் உற்சாகம் மீண்டிருந்தது.

ஆரம்பித்தது வேலை. கல்லும் மண்ணுமாக வேண்டிய பொருட்கள் ஒப்பீட்டளவில் உயர்ந்த ரகமாக வருவிக்கப்பட, பொறியாளர், மேஸ்திரியோடு அரை டஜன் சித்தாளுகளும் ஆளுக்கொரு கைப்பிடித்துக் கொண்டுவந்தனர் அந்த வெற்றிடத்துக்கு ஒரு கட்டிடத்தை.

மொத்தம் ஐந்து அறை. வரவேற்பறை போலவே பிற அறைகளும் விரிவாக இருக்க வேண்டும். காற்றும் வெளிச்சமும் தன் வீடு போல வந்து போக வழி வேண்டும். குழந்தைகள் குதித்து விளையாடினாலும் இடித்துக்கொள்ளும் குறுக்கீடுகள் இருக்கக்கூடாது. வீட்டுக்கு முன்பக்கம் பூச்செடிகள். வருவோரை மணம் பரப்பி வரவேற்க. பின்பக்கம் காய், கீரை செடி கொடிகள். வயிற்றை நிறைக்க. வாசலருகே பெரிதாக ஒரு திண்ணை... என வீடு குறித்தான அவளின் கனவுக் கோட்டையில் ஒவ்வொரு துகளும் கல்தூண். அந்தக் கருப்பு வெள்ளை கற்பனைக்கு வண்ணம் பூசிட கணவன் முன்வர, அவள் கட்டளைப்படி கட்டமைக்கப்பட்டது.

ஷியாமளி வரையில், வீடெனப்படுவது யாதெனில் இந்த மண்ணில் வாழத் தகுதிப்

''யாரும் பேசாத அளவுக்கு, எங்கள் தலைவர் அதிக மேடைப் பிரசங்கம் செய்திருப்பதால், அவருக்கு 'அதிகபிரசங்கி' என்ற பட்டப் பெயரை அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.''

- வெ.சீதாராமன்

படுத்தும் சான்றிதழ்; காவல் தெய்வம்; தலைமுறைகள் தாண்டிய கனவு. அந்த ஆசையின் ஆணிவேரைத் தேடிப் போனால் அது அண்டை மாநிலத்தைத் தொட்டு நிற்கும்.

ஷியாமளியின் கொள்ளு தாத்தா, எள்ளுப்பாட்டிகளுக்கு தமிழ்நாட்டுக்கு அடுத்த மாநிலம்தான் பூர்வீகம். சந்தன மரத் தோட்டத்தினிடையே மச்சு வீடு கட்டி வாழ்ந்த பரம்பரைதான். ஆனாலுமென்ன, திடீர்ப் பஞ்சமொன்று அவர்கள் வம்சத்தினைப் புலம்பெயரச் செய்ய, வந்தேறிய இடம்தான் தமிழகம். பஞ்சம் விலகியது. ஆனாலும் பெயரெடுக்கும்படி நில,புலன்களையோ சொத்துக்களையோ சேர்க்கும் திறனில்லை. பிறந்த மண்ணின் பந்தம் விட்டுப் போய் வெகுகாலமானது. வந்த

இடத்திலும் சொந்தமெனக் கொண்டாட கல் வீடொன்றோ கையகல நிலமோ சம் பாதிக்கவில்லை. இன்னமும் நீங்கள் யார்? உங்கள் முகவரி என்ன? எனக் கேள்விகள் எழுகையிலெல்லாம் நிலையற்றதும், மாற் றாருக்கு உடமையானதுமான ஒரு முகவரி யைக் கைகாட்டும் அவலம். அந்தத் திரிசங்கு வாழ்க்கை மீதான வேதனையின் வெளிப்பாடுதான் அவளின் வீடு கனவு.

சுப்பிரமணி அவளிடம், ''உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். என்ன சொல்றே?'' என்று தெருவில் வழி மறித்துக் கேட்டபோது, அவளின் எதிர்க் கேள்வி, ''உங்களைக் கல்யாணம் பண் ணிக்கணும்னா எனக்கொரு வீடு கட்டித் தாணும். தருவீங்களா?'' என அவள் கேட் டாள். அவன் சத்தியத்தைத் தர அவள் தாலிக்குச் சம்மதித்தாள்.

''உன்னை 'கலைஞர் காப்பீட்டுத் திட் டத்துல' சேர்க்க முடியாதுன்னு சொல்லிட் டாங்களா... ஏன்?''

''வருட வருமானம் 72 ஆயிரத்துக்குள்ள இருக்கணுமாம் சாமி!''

-கே.தண்டபாணி



பத்து பைசாவும் கடன் வாங்காமல் கைக்காசைக் கொண்டே மனைவிக்கு மதிப் பாக, ஒரு வீடு கட்டித் தரவேண்டுமென்ற வைராக்கியம் சுப்பிரமணிக்கு. சொந்த இரும்புக்கடை, நண்பர்களோடு இணைந்த சீட்டுக் கம்பெனி என்று அவன் இரட்டைக் குதிரையில் சவாரி செய்து வியர்வை வழிய சேர்த்த பணம் இடமாகி, இதோ இன்று இருப்பிடமாகிறது. கணவன் காதலையும் உழைப்பையும் கலந்து கொடுத்த பரிசு.

நாற்புறசுவர் என தோற்ற அளவில் இப்போது ஒரு வீடாகியிருந்தது. மேலே ஒரு கூரையிட்டால் வசிப்பிடமாகிவிடும். கான்கிரீட் கூரை போடுவதென்பது கட்ட டப் பணிகளில் முக்கிய நிகழ்வு. உடல் படைத்த பிரம்மா அதற்கு உயிர் கொடுப் பதைப் போல. எனவேதான் அது போட்டப் படுவதற்கு முகூர்த்த நாள் பார்க்கப்படும். பக்கச் சுவர் போல இப்போ பாதி, அப்புறம் மீதி என வேலையைப் பிரித்து வைக்க முடியாது. ஆட்களின் எண்ணிக்கை வழக் கத்தைவிட இரட்டிப்பாய் இருக்க வேண் டும். கலவை மெஷின் சிமெண்ட் கலவை யைச் சுழற்றித் துப்பும் வேகத்துக்கு ஆட்கள் சாந்துச் சட்டியைக் கைமாற்றும் வேகம் ஈடு கொடுக்க வேண்டும். எல்லா 'வேண்டும்' களும் சரியாக அமைய, நினைத்ததிலும் விரைவாகக் கூரை வேயப்பட்டுவிட்டது. அன்றைக்கு மதிய உணவுக்குப் பணம் கொடுக்க வேண்டியது கட்டட உரிமை யாளரின் பொறுப்பு.

''ஆளுக்கு ஐம்பது ரூவா கொடுத் துடுங்க'' என்றார் மேஸ்திரி.

கழுத்துவரை சாப்பிடச் சொல்லிக் கட்டாயப்படுத்திப் பரிமாறினான் சுப்பிர மணி. கைகழுவி வந்தவர்களிடம் மேஸ்திரி சொன்ன பணத்தைக் கொடுத்தாள் ஷியாமளி.

ஆச்சு. முக்கால் வேலை முடிந்த அந்த வீட்டுக்கு இனி சின்ன விடுமுறை. இரவுக் குள் கான்கிரீட் இறுகிவிடும். அப்புறம் மூன்று வாரம் கூரைக்கு ஏறி தண்ணீர் ஊற்றினால் போதும். நீரை உறிஞ்சி உறிஞ்சி வெடிப்பு, விரிசல் விழாமல் கட்டடம் உறுதியாகும். நிகழ்ந்தவரை

ஷியாமளிக்கும் சுப்பிரமணிக்கும் நிறைந்தது மனது.

அது மழைக் காலமல்ல. ஆனால், அன்றிரவு மழை பெய்தது. ஒலியும் ஒளியுமாகப் பெரும் மழை. கட்டடத்துக்குத் தண்ணீர் ஊற்ற ஆள் வைக்கலாமா இல்லை தாமே செய்யலாமா? எனப் புரண்டு படுத்து யோசித்துக் கொண்டிருந்த ஷியாமளியை, மழை கலவரப்படுத்தியது. இந்தப் பேய் மழையை அந்தப் பிஞ்சு கட்டடம் தாங்குமா? விடியும் போது கதவு தட்டப்பட்டது. மேஸ்திரிதான்.

"என்னம்மணி சொல்லி வெச்சாப்ல மழை இன்னைக்குன்னு பார்த்து இப்படிப் பேஞ்சு போடுச்சே. வீட்டைப் பார்த்துட்டுத்தான் வர்றேன். மழைக்கு முன்னாலேயே கலவை நல்லா காஞ்சு இறுகிருச்சு. மழை தண்ணி சும்மாக் குளமாத் தேங்கிக் கெடக்கு. மூணு வாரத்துக்கும் அதுவே போதும்." ஆள்கூலி, வேலை எல்லாமே மிச்சம். மனித வாழ்த்தும், வருணனின் கருணையும் அவளைப் பெருமைப்படுத்தின.

விடுப்பு முடிந்தது. ஜன்னல் பதிப்பு, சுவர் பூச்சு என மிச்ச வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. வீட்டைப் போலவே ஷியாமளிக்கு ஜன்னல் வேலைப்பாடு பற்றியும் ஒரு கிளைக் கனவு உண்டு. அது தனித்துவத்தோடும் ஒரு செய்தியைச் சொல்வதாகவும் திரும்பிப் பார்க்கத் தூண்டுவதாகவும் இருக்க வேண்டும் என்பது கனவின் பின்னணி. மிகுந்த மெனக்கெடல்களின் இறுதியாக அப்படியொன்றைத் தேர்வு செய்தாள்.

தளதளவென கலக்கப்படும் சாந்து எடுத்து வீசப்பட்டு, வழிந்தோடாமல் செங்கல்லைப் பிடித்துக்கொண்டு சுவராய்ச் சமைந்துவிடுவதைப் பார்த்துக்கொண்டிருந்த ஷியாமளி, சுவரை நெருங்கி, இடுப்பில் இருந்த மகளின் கைபிடித்து ஈரச் சுவற்றின் மீது ஆங்காங்கே அழுத்தமாகப் பதித்தாள். அவளின் செய்கை கண்டு பதறிப் போய் ஓடி வந்தார் மேஸ்திரி.

"அம்மணி என்ற பண்ற? ஈர செவுருல யாராச்சும் அச்சு வெப்பாங்களா? வெளையாட்டுப் புள்ளையா இருக்கியே" என்றபடியே அச்சிலை அழித்துச் சமன்படுத்த கரண்டி எடுத்துவர, அவரைத் தடுத்தாள் ஷியாமளி.

"ண்ணா... ண்ணா... அழுச்சுராதீங்கண்ணா. எம் புள்ள கை அச்சு இந்த வீட்டைச் சுத்திலும் இருக்கணும். நாளைக்கு, எம்புள்ளை, பேரப் புள்ளைங்க கிட்டயெல்லாம் இதைக் காட்டி பேசணுங்ணா. எம் புள்ள வெச்ச அச்சை வெச்சுத்தான் என் தலைமுறையே இந்த வீட்டோட வயசைத் தெரிஞ்சுக்கணும்..." அவளின் கட்டடக் காதல் அவருக்கு விநோதமாயிருந்தது.

தேக்கு மரத்தில் கதவு நிலை பதியமிட்டு, வெளுத்த நிறத்தில் வழுக்காத தரையைப் பதித்து, அலமாரி, அட்டாளி கட்டி முடித்து, பூசல் மெழுகலென இன்ன பிற வசதிகளும் செய்து முடித்துப் பார்க்கையில், அந்த வீடு அளவு சிறுத்ததொரு அரண்மனையாய் இருந்தது!

ஆட்கள் வேட்டி சேலை வாங்கிக் கொண்டு அடுத்த வீடு சென்று விட்டனர். கிரஹப்பிரவேசத்துக்கு நாள் குறிப்பதில் மும்முரமாக இருந்தான் சுப்பிரமணி.

கட்டிய வீட்டைச் சுற்றி வந்தாள் ஷியாமளி. அழகும், தூய்மையும், குளுமையும், மணமுமான, யாரது ஒலியுமில்லாத வீடு புதுவிதமாக இருந்தது. ஒவ்வொரு அறையாகச் சென்றாள். சத்தமாகச் சிரித்தாள். "இங்க எப்போ குடி வரப் போற ஷியாமளி?" உரக்கப் பேசினாள். குதூகலித்தாள்.

கட்டிய வீட்டைச் சுற்றிவந்த ஷியாமளி சத்தமாகச் சிரித்தாள்; உற்சாகமாகக் கத்தினாள்; குதூகலித்தாள்!

அப்போதுதான் அந்த ஒலி எழுந்தது. பூமிப்பந்து எகிறிக் குதித்ததுபோல ஓர் ஓசை. திடுக்கிட்டு, சுதாரிப்பதற்குள் நாலாத் திசைகளிலும் அடுத்தடுத்து ஐந் நூறு முறை அந்தச் சத்தம் கேட்டது. நடுக்கத்தோடு வெளியே வந்து பார்த்தாள். தூரத்தில் ஊர் சனம் திக்குத் திசை புரியாமல் ஓடிக்கொண்டிருந்தது. எங்கும் மனித ஓலம். மரணக் கூச்சல். சத்தத்தின் பின் னணி தெரியவந்தபோது மொத்த இந்தியா வுக்கும் தலைப்புச் செய்தியாகியிருந்தது தமிழ்நாடு.

''கோவையில் தொடர் குண்டுவெடிப்பு. உயிரிழந்தோரின் எண்ணிக்கை நூற்றுக்க ணக்கில்.''

ஷியாமளிக்கு வீடு மீது கவலை வந்தது. வெடியின் அதிர்வால் சுவர், ஜன்னல்களில் விரிசல் இருக்குமோ? அங்குலம் அங்குல மாகத் துழாவிப் பார்த்தாள். எந்தச் சேதமும் இல்லை.

சில நாட்களாகவே சுப்பிரமணி சரி யில்லை. முகத்தில் இருள் அடர்வாகப் பரவிக் கிடந்தது. தாங்கமுடியாத அதிர்ச் சிக்கு மட்டுமே முகத்தில் அப்படியொரு கருமை யைத் தரும் வலிமை உண்டு. ஷியாமளி கலக்கத்தோடு காரணம் கேட்டாள். வெகுவாக யோசித்த பிறகே வாய் திறந்தான் சுப்பிரமணி.



''ஏலச் சீட்டுல என் பங்குக்கு நான் சேர்த்து விட்ட ஆளுங்க அத்தனை பெரும இஸ்லா மியருங்க. குடும்பம் வேற ஊர்ல இருந்தா லும் இதே ஊர்ல ரொம்ப வருஷமா மெக் கடை, பேக்கரினு சொந்தமாகத் தொழில் பண்றவங்க. பணம் கொடுக்கல் வாங்கல்ல ரொம்பச் சரியா நடந்துக்குவாங்க. அதனால தான் அந்த ஆளுங்களப் பார்த்துச் சேர்த் துக்கிட்டேன். எல்லாருமே சீட்டுப் பணத்தை எடுத்துட்டாங்க. குண்டுவெடிப் புக்குக் காரணம் இஸ்லாமியர்கள்ங்கறதால ஊர்ல இருக்கற ஒவ்வொரு முஸ்லிமையும் போலீஸ் துருவித் துருவி விசாரிச்சுச் சக் கையா புழுஞ்செடுக்குது. அதுக்குப் பயந் துக்கிட்டு, நெறைய பேர் சொல்லாம கொள் ளாம ஊரைக் காலிப் பண்ணிட்டு ஓடிட் டாங்க. நம்மகிட்ட சீட்டெடுத்தவங்கள்ல ஒருத்தர் கூட இப்ப ஊர்ல இல்லை. யாரோட அட்ரஸும் யாருகிட்டேயும் இல்லை. யாரை எங்க போய் தேடறதுன்னு தெரியலை. இன்னும் ரெண்டு வருஷ சீட்டுத் தொகை பாக்கியிருக்கு. அவுங்க கட்ட வேண்டிய பணத்துக்கு நாந்தான் பொறுப்பு. என்ன பண்றது? எப்படிப் புரட் டறது? ஒண்ணுமே புரியலம்மா.''

''எவ்வளவு கட்ட வேண்டியிருக்கும்?''

''லட்சக்கணக்குல.''

தளர்ந்து உட்கார்ந்தாள் ஷியாமளி.

சப்தங்கள் செத்துப்போன நடுநிசியில் ஷியாமளி கேட்டாள்.

''வீடு கட்ட வரங்கொடுத்த சாமி ஏம் பாவா வாசலை மட்டும் அடைச்சு வெச் சுருச்சு?'' திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேயிருந்தாள்.

சுப்பிரமணி பயந்து விட்டான். ''என் னம்மா என்னமோ மாதிரி பேசற?''

''சீக்கிரமா பணத்தைக் கொடுத்துரலாம் பாவா.''

''எப்படி?''

''வீட்டை வித்துரலாம்.''

'குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்டவர் கள்' என்று ஊடகங்கள் ஒவ்வொன்றும் ஆளுக்கொரு பட்டியலை வெளியிட்டுக் கொண்டேயிருந்தன. எந்தப் பட்டியலிலும் இவர்களை மட்டும் யாரும் சேர்க்கவே இல்லை. ●

மூலதன மந்திரம்

எனக்கு 40 வயது ஆகிறது. என் மூத்த மகனுக்கு 10 வயதும் இரண்டாவது மகனுக்கு 3 வயது ஆகிறது. அவர்களுடைய எதிர்காலத்துக்குச் சேமித்து வைக்க நல்ல சேமிப்புத் திட்டங்களைச் சொல்லுங்கள்.

- ஜெகநாதன், திருவையாறு

உங்களுடைய கேள்விக்குப் பதில் பல விஷயங்களை உள்ளடக்கியதாய் இருக்கும். உங்களுடைய குடும்பத்தின் வருட வருமானம், சேமிக்கும் திறன், உங்களுடைய வருமானவரி ஸ்லேப், ஏற்கனவே உள்ள சொத்துக்கள்... என பல விஷயங்களைக் கொடுத்தால் மட்டுமே துல்லியமான அறிவுரைகளைச் சொல்ல இயலும். இருந்தாலும் உங்கள் வயதுக்கேற்ப முதலீடு செய்வதென்றால் வங்கி டெப்பாசிட் (10%), தங்கம் (15%), பங்கு முதலீடுகள் (45%), ரியல் எஸ்டேட் (30%) என மொத்த முதலீட்டைப் பிரித்து கொடுக்கப்பட்டுள்ள சதவிகித வாரியாக முதலீடு செய்யலாம்.

எனக்கு வந்த பூர்வீக வீட்டை விற்றுவிட்டேன். அதில் இருந்து வந்த தொகையான 30 லட்சத்தை மீண்டும் வீட்டிலேயே முதலீடு செய்வது நல்லது. இல்லையெனில், வருமான வரி கட்ட வேண்டும் என்று சொல்கிறார்களே. என்ன செய்யவேண்டும்?

- சுந்தரபெருமான், விழுப்புரம்



நாற்பது வயசுக்கு நல்ல

டி.பாலசுந்தரம்



வீட்டை விற்று வந்த பணத்தை மறுபடியும் ஒரு வீட்டிலேயே முதலீடு செய்வதன் மூலம் கேப்பிட்டல் கெயின்ஸ் (மூலதன வளர்ச்சி வரி) டேக்ஸிலிருந்து விலக்குப் பெறலாம். இரண்டு வருடத்துக்குள் பணத்தை வீட்டில் மறுமுதலீடு செய்துவிடவேண்டும். இந்த இரண்டு வருட காலத்துக்கு வீடு விற்று வந்த பணத்தைத் தனியாக ஒரு வங்கி சேமிப்புக் கணக்கில் போட்டு வைக்கவேண்டும். அந்தக் கணக்கில் வேறு வரவு செலவு எதுவும் செய்யக்கூடாது. உடனடியாக நல்ல வீடு கிடைக்கவில்லை/அல்லது வீடு வாங்கும் எண்ணமில்லை என்றால் பணத்தைத் தாமதிக்காமல் உடனே கேப்பிட்டல் கெயின்ஸ் பாண்டுகளில் (Bond) போட்டுவைக்கலாம். கேப்பிட்டல் கெயின்ஸ் பாண்டுகளில் முதலீடு செய்தால் அந்தத் தொகைக்கு கேப்பிட்டல் கெயின்ஸ் டேக்ஸ் கட்டவேண்டியிருக்காது.. எதற்கும் உங்கள் ஆடிட்டரைக் கலந்து கொண்டு முடிவெடுப்பது நல்லது.



ரூபாய்க்கு புதிய குறியீடு கொண்டு வந்திருக்கிறார்களே. இதனால் என்ன லாபம்?

- ஜார்ஜ், நங்கநல்லூர்

உலகத்தில் உள்ள கரன்ஸிகளில் தனக்கென்று தனிக்குறியீட்டைக் கொண்டிருக்கும் கரன்ஸிகள் நான்கு. அமெரிக்காவின் டாலர், பிரிட்டிஷின் பவுண்ட், ஜப்பானின் யென், ஐரோப்பிய யூனியனின் யூரோ. இப்போது ஒரு தனிப்பட்ட சிறப்புக் குறியீடு கொடுக்கப்பட்டதால் இந்திய ரூபாய் இந்த எலைட் கரன்ஸிகளின் க்ளப்பில் சேர்ந்திருக்கிறது. இதன் மூலம் இந்திய ரூபாய் உலக அளவில் ஒரு தனிப்பட்ட பிரபல்யத்தை அடைவதுடன் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியையும், உலகப் பொருளாதாரத்தில் இந்தியா பெற்றுவருகின்ற முக்கியத்துவத்தையும் பறைசாற்றுவதாக அமையும். ●

சேமிப்புத் திட்டம் இருக்கா?

உங்கள் கேள்விகளை 'மூலதன மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்பலாம். kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில் KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.



நான் தேடும் செவ்வந்திப் பூவிது!

விவேக் (நடிகர்):
'டோண்டி வொர்ரி பி ஹாப்பி' என ஐந்தாம்படையில் டயலாக் பேசுவேன். இந்தத் தத்துவத்தை ஒரு பாடலாக அறுபதுகளில் புகழ்பெற்ற பாப் பாடகர் பாப் மெக்ஃஃவைரன் (Pob Micfrain) என்ற பாடகர் பாடியிருப்பார். இதுதான் என் காலர் ட்யூன். சினிமாவோட சேர்த்து ஃபோன்லேயும் மெசேஜ் சொல்வோம்ங்கற நல்ல எண்ணம் தான். 'நான் தேடும் செவ்வந்தி பூவிது' - இது ரிங்டோன். காரணம், நான் இசைஞானியின் பரம விசிறி.

'அலைகள் எனக்குப் பிடிக்கும். காரணம் அவை வீழ்வதால் அல்ல. மீண்டும் எழுவதால்', 'நீ பிறக்கும்போது ஏழையாகப் பிறந்தால் அது உன் தவறல்ல. இறக்கும்போதும் ஏழையாக இறந்தால் உன் தவறு' - இதுபோன்று நண்பர்கள் அனுப்பிய வாசகங்கள் நான் சேமித்து வைத்துள்ள குறுஞ் செய்திகள்.

மனோஜ் பரமஹம்சா (ஒளிப்பதிவாளர்):
என்னுடைய செல்ஃஃபோன் ஏறக்குறைய ஒரு குட்டி கம்ப்யூட்டர்! இது கேமரா, கம்ப்யூட்டரும் இணைந்த மூன்றாவது தலைமுறை செல்ஃஃபோன். 'டயம் லாக் ஃஃபோட்டோகிராபி' எனும் கேமிராவின் தொழில்நுட்பத்தையும் உள்ளடக்கியது. இதை ஃஃக்ளாப் போர்டாகவும் பயன்படுத்தலாம்.




சம்போ

மைக்கேல் ஜாக்சனுக்கு மரியாதை!



தேவி ஸ்ரீபிரசாத் (இசையமைப்பாளர்): உலகப் புகழ்பெற்ற பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சனின் 'Jam' எனத் தொடங்கும் பாடல்தான் என் மொபைலின் காலர் ட்யூன். இந்தப் பாட்லை எனது மொபைலில் பதிவுசெய்த நாளில்தான் மைக்கேல் ஜாக்சன் இறந்தார். சென்டிமெண்டாக இந்த விஷயம் என்னைப் பாதிக்க என் செல்லில் ஒலிக்கிறது Jam அவருக்கு மரியாதை செய்யும்விதமாக.

இயக்குநர் ராம்கோபால் வர்மா, நான் டி.வி.யில் நடத்திய ஷோவைப் பார்த்துவிட்டு நீ ஸ்டார்களையெல்லாம் விட பெரிய ராக் ஸ்டார் என்று பாராட்டி மெசேஜ் அனுப்பினார். இதை அழிக்காமல் பத்திரமாக வைத்துள்ளேன். ஸ்கிரீன் ஸேவராக இருப்பது என்னுடைய படம்தான். எங்கேயாவது செல்லை மறந்து வைத்துவிட்டால் நல்ல உள்ளங்கள் என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பார்கள் அல்லவா?



இது மௌனமான நேரம்!

ஷூட்டிங்க்காக அமெரிக்கா சென்றபோது வாங்கியது. சைலண்ட்தான் என்னுடைய ரிங்டோன். பெரும்பான்மையான நேரங்களில் மொபைலை சைலண்ட்டில்தான் வைத்திருக்கிறேன். தற்சமயம் 'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்தின் வெற்றி விழாதான் ஸ்க்ரீன்ஸேவர். 'நடுநிசிநாய்கள்' வெற்றிக்குப் பிறகு அதன் வெற்றி விழா ஸ்க்ரீன் ஸேவராக இடம்பெறும்.

சிவசம்போ!

பரணி(நடிகர்) : நான் நடித்து விரைவில் வெளிவர இருக்கும் 'விலை' படத்தின் 'விலையே உன் விலை என்ன?' என்ற பாடல்தான் என் காலர் ட்யூன். எனக்குப் பெரிய அங்கீகாரத்தை தந்த 'சம்போ சிவசம்போ' பாடலை ரிங்டோனாக மாற்றி விட்டேன்.

நான் இந்தளவு வளர்ந்ததுக்கு முருகப்பெருமானின் அருளாசிதான் காரணம். ஸோ, என் ஸ்க்ரீன் ஸேவர் பாலமுருகன்.

''கண் சிமிட்டாமல் உன்னைப் பார்க்க நினைத்தேன். இப்போது கண் சிமிட்டும் நேரமாவது உன்னைப் பார்க்க நினைக்கிறேன்'' என்ற என் நண்பன் அனுப்பிய குறுஞ்செய்தி எனக்குப் பிடித்தது. இந்த வரிகள் காதலுக்கு மட்டுமில்லாமல், என்னைப் போல் ஊர் விட்டு ஊர் வந்து, சொந்தங்களைக் காண ஏங்குபவர்களுக்கும் பொருந்தும்.



என்ன இருக்கு செல்ஃபோன்ல?



ராக்கம்மா கையத்தட்டு!

வினு (நிகழ்ச்சி தொகுப்பாளினி):

''மத்தவங்க பாட்டுக் கேட்கறதுக்கு நாம ஏன் காசு செலவு பண்ணணும்னு எண்ணத்தால காலர் ட்யூன் எதுவும் வெச்சுக்கறதில்லை. இன்னொரு விஷயம் நம்ம மரியாதைக்குரிய மனிதர்கள் ஃபோன் பண்ணும்போது மோசமான பாட்டு காலர் ட்யூனா இருந்தா அப்புறம் நம்ம இமேஜ் டேமேஜ் ஆயிடும். ஸோ, இந்த ரிஸ்க்கை நான் எடுக்கலை.

என்னுடைய ரிங்டோன் 'ராக்கம்மா கையத் தட்டு' பாட்டுல ஆரம்பத்துல வர்ற வேகமான மியூஸிக். இதைக் கேட்டாலே சுறுசுறுப்பா இருக்கும். ஸ்க்ரீன் சேவர் தினமும் மாத்திக்கிட்டே இருப்பேன்.

– ராகவ்குமார்



கிருஷ்ண அண்ணனோட வெகுளித்தனம், கள்ளம் கபடமில்லாத தன்மை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதனாலயே நான் அந்த மாதிரி கேரக்டரில் நிறைய நடிச்சேன். ரசிகனுக்கும் என்னை அப்படிப் பார்க்கப் பிடிக்கும். அட, ரசிகனுக்கு மட்டுமல்ல; புருஷன் உட்பட எல்லோருக்கும் கொஞ்சம் மக்கா - வெகுளியா இருந்தா ரொம்பப் பிடிக்கும்! புத்திசாலித்தன்மா கொஞ்சம் பேச ஆரம்பிச்சா... 'எக்ஸ்க்யூஸ் மீ ஒன் மினிட்'-ன்னு எழுந்து போயிடுவாங்க. அதுவும் சினிமாவுல இருக்கிற பெண்களுக்குப் பொது அறிவு இல்லேன்னு பேசிப் பேசியே பொது அறிவு இருக்கக் கூடாதுங்கிறதைப் பொதுவிதியா மாத்தி, சட்டமே வந்துருச்சு! அவார்ட் கிடைக்கிறதோ இல்லையோ அறிவாளின்னு காமிச்சிக்கிறதுக்காகப் படம் எடுக்குற ஒரு மலையாள பட இயக்குநர் ஒருமுறை என்னைப் பார்த்துக் கேட்டார், ''ஹாய் ஊர்வசி, நீ நியூஸ் பேப்பர் எல்லாம் படிக்கிறதுண்டா?''



பொத்துக்கிட்டு வந்துருச்சுக் கோவம். அவனைப் பார்த்து ''டேய்... இலக்கிய ஜாம்பவான் சுந்தர ராமசாமி என்னோட உட்கார்ந்து சினிமாவுல எழுத்துக்கு எவ்வளவு பங்கு இருக்குன்னுப் பேசினது உனக்குத் தெரியுமா? பாலசந்திரன் சுள்ளிக்காடு கவித்துவமான வாழ்க்கையின் சுவாரஸ்யம் பற்றிக் கதை கதையாய் என்கிட்டே பேசினது, தெரியுமா? இந்திரா பார்த்தசாரதியின் 'கிருஷ்ணா கிருஷ்ணா'வில், ஆத்மாவினுடைய அம்சம் எதுன்னு என் நண்பன் யுகமாயினி சித்த



‘அச்சு’ அசலாக வாழ்க்கை!



னோட எவ்வளவு வாக்குவாதம் செய்திருப்பேன்னு நீ அறிஞ்சது உண்டா? என்னைப் பற்றி எதுவுமே தெரியாம, நியூஸ் பேப்பரைப் படிப்பியான்னு கேக்கறே! நியூஸ் பேப்பர் என்ன என் வாழ்க்கையை வழி நடத்துற இலக்கியமா? 'இவன் அவனைக் கொன்றான்', 'அவன் அவளை பாலியல் பலாத்காரம் செஞ்சான்', 'வாலிபர் நசுங்கிச் சாவு'... இந்த மாதிரி நெகட்டிவ் எனர்ஜி எனக்குள்ள வந்து சேரக்கூடாதுன்னுதான் இந்த மாதிரிப் பேப்பரைப் படிக்கிறதில்லை. எனக்குள்ள இருக்கும் மந்தபுடிய எனர்ஜியை வெளியே கொட்டத்தான் எழுத்தும் இலக்கியமும். நான் நெகட்டிவ் எனர்ஜியைக் கொறைச்சுக்கிட்டு வர்றதாலத்தான் உன்னை இப்போ உருப்படியா விடுறேன். நீ டைரக்ஷன் பண்ற லட்சணத்துக்கு உன்னைக் கடிச்சுக் குதறாம விட்டு இருக்கேன்''-ன்னு எல்லார் முன்னாடியும் கத்தி அவனை உண்டு இல்லேன்னு ஆக்க நெனைச்சேன்... ஆனா, அப்படிக் கத்தியிருந்தா அது நெகட்டிவ் எனர்ஜியா போயிருக்கும்னு பேசாம இருந்துட்டேன்!

மூந்நூறு பேர் உட்காரும் தியேட்டரில், முப்பது பேர் சைலண்டா படம் பார்த்துட்டு வெளியே போனா அதுதான் ஆர்ட் படம், நல்ல படம்னு சொல்ற கும்பலுக்கும் தயாரிப்பாளர் தலையை மொட்டையடிச்சுத் துண்டு போட வைக்கிற அதிமேதாவிக் கும்பலுக்கும் யதார்த்தத்தைக் கலைத்துவமா மாத்துற விஷயம் தெரியாது. வாழ்க்கையோட அவங்க படம் ஒட்டாம இருக்கும். மக்கள் ரசித்து வெற்றி பெற்ற ஒரு ஆர்ட் படம் எது தெரியுமா? 'அச்சுவிண்ட அம்மா.' மலையாள படம். அதுல நடிச்ச எனக்கு தேசிய விருது கிடைச்சது. அந்தப் படத்தைப் பார்த்துட்டு ஒரு பொண்ணு எனக்குக் கடிதம் போட்டிருந்தா... அவ பேரு சூர்யா. அவளைப் பார்க்கப் போயிருந்தேன். கம்பம் அருகே 'இடுக்கி' அவ ஊர். அவளுக்குப் பதிமூணு வயசு. இன்னும் வயசுக்குக்

கூட வரல. ஆனா மூணு வயசுக் குழந்தைக்கு அம்மாவா இருக்கா. இந்தப் பொண்ணோட எதிர்வீட்டு அம்மாவுக்கு நாலு கொழந்தைங்க. 'அஞ்சாவதா பையன் பொறக்கலன்னா நீ வாழா வெட்டி'தான்னு அவளோட உருப்படாத புருஷன் சொல்லிச்சாம். அந்த அம்மா பயந்துபோயி அஞ்சாவதாப் பொறந்த பெண் குழந்தையை ஈரத் துணியில சுத்தி ஒரு மூலையில வெச்சு இருக்கா, சாகடிக்கிறதுக்கு. எதிர்வீட்டுல இருந்த சூர்யாவுக்கு அப்போ பத்து வயசு. ஆண்டிக்கு பாப்பா பிறந்துருச்சுன்னு பார்க்கப் போயிருக்கா... இவளுக்கு விஷயம் புரிஞ்சு போச்சு. குழந்தையைத் தூக்கிக்கிட்டு வீட்டுக்கு ஓடி வந்துட்டா. 'ஐயோ இதைத் தரமாட்டேன். நானே வளர்க்கப் போறேன். ஆண்ட்டி இதைச் சாகடிக்கப் போறாங்கன்னு' அழுது அடம்பிடிச்சிருக்கா. சூர்யாவுக்கு அப்பா கிடையாது. அம்மாவும் பாட்டியும்தான். அவங்க போய் குழந்தையோட அம்மாகிட்டே கெஞ்சி சம்மதிக்க வெச்சிட்டாங்க. அந்த அம்மாவும் குழந்தை செத்துப் பொறந்துருச்சுன்னு சொல்லி சமாளிச்சா. சூர்யாவோட அம்மாவும் பாட்டியும் கூலி வேலைக்குப் போயிடுவாங்க. அந்தக் குழந்தைக்கு சூர்யாதான் அம்மா.

சுத்தியிருக்கிறவங்க அந்தக் குழந்தைகிட்டே, சூர்யாவை 'அக்கா'ன்னு கூப்பிடு'ன்னு சொல்லிக் கொடுத்தப்ப, 'இல்ல; இது என் குழந்தை. அம்மான்னுதான் கூப்பிடணும்னு!' கட் அண்ட் ரைட்டா சொல்லிட்டா சூர்யா!



● தேசிய விருது பெற்றபோது...

இந்த யதார்த்தமான பதிமூணு வயசு பெண்ணிடம் இருந்த தாயன்புதான் நான் நடிச்ச 'அச்சுவிண்ட அம்மா' என்ற படத்தோட கதை. படத்தின் முடிவு வேற... வளர்க்கிற அந்தப் பெண்ணுக்குக் காதலும் காதலனும் கிடைத்துவிட, வளர்ப்புப் பெண் தன்னை அநாதையா உணர்வாள். பிறகு அவள் இன்னொரு குழந்தையை எடுத்து வளர்ப்பாள். நிஜத்தில் இப்படியொரு பெண், உண்மையான தாயன்போடு இருக்கிறதைக் கேள்விப்பட்டு அந்தப் பெண்ணுக்கு உதவியைச் செஞ்சுட்டு வந்தேன். 'அச்சு' படம் அசலாக வாழ்க்கை தானே!

ஆனா நான் மறந்துபோன விஷயம் ஒண்ணு உண்டு. ஒரு நிகழ்ச்சி எதிர்பாராத விதத்தில் கேன்சல் ஆயிடுச்சு. என்னோட டிரைவர் எங்கே வண்டியைப் போட்டுட்டுத் தூங்கிட்டார்னு தெரியல. என் வண்டி நம்பரும் எனக்குத் தெரியாது. அதனால மைக்கில் வண்டி நம்பரைச் சொல்லிக் கூப்பிடவும் முடியலை. அப்பத்தான் ஒரு உண்மை தெரிஞ்சுது...

(தொடரும்)

ஊர்வசி போட்டி சில்க்கி சாரி!



மாதம் 3 புடவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவை பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

ஆகஸ்ட் மாத கூப்பன்களை இணைத்து அனுப்ப கடைசித் தேதி : 06.09.10

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

....................பின்கோடு:....................

தொலைபேசி : ....

இ-மெயில் : ....

ஆகஸ்ட் – 8

ஊர்வசியோடு பேசிய தமிழ் எழுத்தாளர் யார்?

விடையை டிக் செய்யவும்

- ☐ பாலசந்திரன் சுள்ளிக்காடு
- ☐ இந்திரா பார்த்தசாரதி
- ☐ சூர்யா
- ☐ சுந்தர ராமசாமி

வீ வாண்ட் டூயல் சிம்...



"மொபைல்ஃபோன் வெச்சிருக்கறவங்களை விரல்விட்டு எண்ணிய காலம் போய் இன்னிக்கு செல்ஃபோன் இல்லாதவங்களை விரல்விட்டு எண்ணும் காலம் வந்தாச்சு. செல்ஃபோன் இல்லைன்னா வாழ்க்கை ஒரு நிமிஷம் ஸ்தம்பிச்சுப் போயிடறது யதார்த்தமாயிடுச்சு" என்கிறார் 'தி மொபைல் ஸ்டோரின்' ட்யூட்டி மேனேஜர் சுரேஷ்.

"செல்ஃபோன் வாங்கும்போது என்னென்ன விஷயங்களைக் கவனிக்கணும்" எனக் கேட்டால், "முதல்ல பட்ஜெட்டைச் சரியா முடிவு பண்ணிக்கணும். ஆயிரம் ரூபாய் தொடங்கி 35,000 ரூபாய் வரைக்கும் இன்னிக்கு மார்க்கெட்ல செல்ஃபோன் கிடைக்குது.

அதே மாதிரி என்னென்ன வசதிகள் வேணுங்கிறதிலேயும் சரியா முடிவெடுக்கணும். பொதுமக்கள் அதிகம் கேட்பது, கேமரா, எஃப்.எம்., எம்.பி.3 ப்ளேயர் உள்ள செல்ஃபோன்களைத்தான். இவை எல்லா அம்சங்களும் பொருந்திய செல்ஃபோன்கள் இரண்டாயிரம் ரூபாயிலிருந்தே கிடைக்கிறது.

சில மாதங்கள் மேலே சொன்ன அம்சங்கள் கொண்ட செல்ஃபோனை உபயோகித்துவிட்டு, டச் ஸ்க்ரீன் செல்ஃபோன்களுக்குத் தாவி விடுகிறார்கள். அவை ஆறாயிரம் ரூபாயிலிருந்தே கிடைக்கின்றன. அடுத்த சாய்ஸ், ஐ ஃபோன் போலவே இருக்கும் (xperia mkni, xperia, N97 mini, LG GM 730, LG Chocolate, BL 40) மற்ற ஐட்டங்கள்தான்" என்கிறார்.

"பொதுவாக செல்ஃபோனில் ஏற்படக்கூடிய கோளாறு ஹாங்கிங்தான். நோக்கியாவில் இது நிறையவே ஏற்படுகிறது. அதற்குக் காரணம் அதில் பயன்படுத்தப்படும் Symbian OS என்ற தொழில்நுட்பம்.


பல செல்ஃபோன்களில் ரிங்கிங் சத்தம் என்பது ரொம்பக் குறைவாக இருக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டு பரவலாக மக்கள் மத்தியில் இருக்கிறது. இதற்காகவே கொரிய தயாரிப்புகளான, Karbonn, Micromax போன்றவைகளுக்கு மாறி வருகிறார்கள்.

பாட்டரி பாக் அப் என்பது எல்.ஜி. சாம்சங் போன்ற செல்ஃபோன்களில் ஒன்று முதல் ஒன்றரை நாட்கள் வரை என்றால், நோக்கியாவில் இரண்டு நாட்கள் வரை அது நீடிக்கிறது. எனவே, நோக்கியாவையும் மக்கள் அதிகம் விரும்புகிறார்கள்" என்கிற சுரேஷ்,

"தினம் ஒரு புதுப் புது அம்சங்கள்

கொண்ட செல்ஃபோன்கள் மார்க்கெட்டில் வந்துகொண்டேயிருக்கின்றன. தற்போது மக்கள் அதிகம் விரும்பும் அம்சம், டுயல் சிம்கார்டு வசதியுள்ள செல்தான். அது எல்.ஜி. மற்றும் சாம்சங் பிராண்டுகளில் ரூபாய் 3,700 மற்றும் 4,700 ரூபாய்களுக்குக் கிடைக்கிறது. இதே கொரிய தயாரிப்புகளில் அது 1,500 ரூபாய்க்கேகூட கிடைத்துவிடுகிறது. ஆனால், கோளாறுகள் அதிகம் ஏற்படும்! நோக்கியாவில் இந்த அம்சம் இல்லாதது செல்ஃபோன் ப்ரியர்களுக்கு ஒரு சின்ன ஏமாற்றம்தான்.

3ஜி மொபைல்களுக்கும் மக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது. அந்த 3ஜி சிம் என்பது பி.எஸ்.என்.எல்.லில் மட்டுமே வருகிறது. ஏர்டெல்லில் வந்தால் நன்றாக இருக்கும் என மக்கள் கருதுகிறார்கள்'' என்கிறார் சுரேஷ்.



அண்டட் டுயேட் சீன்...



பாதுகாக்கும் டிப்ஸ்?

- ''ப்ளூ டூத் உதவியோடு ஃபைல்களை ஒரு செல்லிலிருந்து இன்னொரு செல்லுக்கு ட்ரான்ஸ்ஃபர் செய்வது பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படிச் செய்வதால், வைரஸ் உள்ளே புக வாய்ப்பு இருக்கிறது. இது கூடவே கூடாது.
- செல்ஃபோனை கண்டிப்பாக ஆஃப் செய்துவிட்டுத்தான் சார்ஜ் செய்ய வேண்டும். ஏனெனில், சார்ஜ் செய்து கொண்டிருக்கும் போது திடீரென ஹை வோல்டேஜ் ஏற்பட்டு செல ஃபோனுக்குப் பாதிப்பு ஏற்படலாம்.
- தண்ணீரோ, வியர்வையோ நிச்சயம் செல்ஃபோனில் படவே கூடாது.
- Symbian OS, Windows போன்ற தொழில்நுட்பம் கொண்ட செல்ஃபோனில் மெனுவிலிருந்து எப்படி உள்ளே போகிறீர்களோ, அதே வழியைப் பின்பற்றித்தான் வெளியே திரும்ப வரவேண்டும்.
- ஒரே கனெக்டரில் நான்கு, ஐந்து செல்ஃபோன்களை ஒருசேர சார்ஜ் செய்யக்கூடாது.

- நளினி சம்பத்குமார்

தனியே தன்னந்

தேவவிரதன்

வீட்டுக்கு ஒரு பிள்ளையோ, பெண்ணோ அமெரிக்கப் பிரஜையாகி விட்ட இக்காலத்தில் வயதான பெற்றோர்களுக்குத் தனிமையும் முதுமையும் தவிர்க்கமுடியாத பிரச்னைகளாகிவிட்டன. இந்தியத் தனிமையையும், அமெரிக்கத் தனிமையையும் வெவ்வேறு கோணங்களில் இரு நாடகங்கள் அலசுகின்றன.

க்ரியா (USA) கிரியேஷன்ஸின் 'தனிமை' பிரம்மகான சபாவின் நல்வி ஆடி நாடக விழாவின் முதல் நாடகமாக அரங்கேறியது.

தமிழ்ப் படிக்கும் வாசகர்களுக்கு அறிமுகமான எழுத்தாளர் ஆனந்த் ராகவ் எழுதிய, 'தனிமை'யை மேடைக்கு ஏற்ப அமைத்து அரங்கேற்றி நடித்தும் இருப்பவர் தீபா ராமானுஜம். அமெரிக்கவாசி! அமெரிக்கா, ஆஸ்திரேலியா என்று பறந்துவிட்ட பிள்ளைகளின் நினைவில், மனைவியை இழந்து தனிமரமாக, சமையல்காரன் துணையோடும், வியாதிகளின் வேதனையுடனும் வாழும் ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியின் 'தனிமை' அவரை எப்படி வாட்டுகின்றது என்ற சமகாலத்துக் கதை. ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தில், தனது இளம் மனைவியுடன் பேசத் தனிமை கிடைக்காமல் தவித்து, வேலையைக் காரணம் காட்டி தனிக்குடும்ப நகர வாழ்க்கைக்குப் பிய்த்துக்கொண்டு கிளம்பிய நாட்களை அசைபோட்டு ஆதங்கப்படும் மணி என்பவரைச் சுற்றிப் பின்னப்பட்ட நிகழ்வுகள்.



* 'தனிமை' நாடகத்தில்...

சித்தி, சித்தப்பா, ஏகப்பட்ட வாண்டுகள் என்று சதா சத்தமும், இரைச்சலுமான குடும்பத்தை அழகாகவே வார்த்தைகளாலும், காட்சிகளாலும் மேடை மேல் காட்டியிருக்கின்றனர். இளம் மனைவி, இனிமையாகப் பாடும் 'காற்றினிலே வரும் கீதம்' போனஸ். 'சிகரெட் சீன்' சிரிக்க வைக்கிறது. சில 'அடல்ஸ் ஜோக்ஸ்' பூடகமாக வந்தாலும் புன்னகைக்காமல் இருக்க முடியவில்லை.

அத்தனை பேரும் இயல்பாக 'அய்யங்கார்' பாஷை பேசி நடித்திருக்கின்றனர். வீட்டுத் தலைவியாக, மணியின் அம்மாவாக இயக்குநர் தீபா ராமானுஜம் சக்கைபோடு போடுகிறார்.

மணி, தனிமையிலிருந்தும், தன் விரக்தத்திலிருந்தும் எப்படி விடுபடு கிறார் என்பதுதான் நாடகத்தின் முடிச்சு. வியாதிப் புலம்பல்ஸ் மணி நண்பர் கொடுத்த ஐடியாவைக் கேட்டதும், 'டக்'கென்று எழுந்து நின்று, சுறுசுறுப் பாவது சற்று நாடகத்தனம். கதை முடிந்த பிறகும், சில காட்சிகள் இழுக் கப்பட்டதுபோல் தோன்றுகிறது. இருந்தாலும், மூளையைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொண்டால், உடலும் சுறுசு றுப்பாக இருக்கும் என்ற நல்ல கருத்தைச் சொல்வதற்காகத் 'தனிமை' பாராட்டப்பட வேண்டும்.

தனியே..!

ஸ்டேஜ் கிரியேஷன்ஸ் 'நீங்க யார் பக்கம்?' நாடகமும் அமெரிக்கப் பிள்ளை - இந்தியப் பெற்றோர் கதையே. தந்தை சிவராமன் (காத்தாடி ராம மூர்த்தி) 'பிள்ளை குஷாலாக அமெரிக்காவில் இருக் கட்டும்; எனக்கு மைலாப்பூர் போதும். நான் வரமாட் டேன்' என்று அடம்பிடிக்கும் ஆசாமி. அவரிடம், 'நீ போகத் தான் போகிறாய்' என்று சவால்விடும் நண்பரிடமும் அவரை எப்படியாவது அமெரிக்காவுக்கு அனுப்பியே தீர வேண் டும் என்று திட்டம் போடும் நண்பர் களிடமும் ஜெயிக்கிறாரா தோற்கிறாரா..? என்பதை நாடகம் பார்த்துத் தெரிந்துக் கொள்ளுங்கள்.



நீங்க யார் பக்கம்...

காத்தாடி இருப்பதால் நாடகத்தில் நகைச்சுவை சரவெடியாக வந்து கொண்டேயிருக்கிறது. காட்சிகள் மாறும் வேகத்தில் அரதப்பழசான அபத்த பின் னணிகள்கூட மறைந்து போகின்றன.

அழுத்தம் குறைவுதான் என்றாலும், அர்த்தம் இல்லாமல் இல்லை. 'எக்ஸ்ட்ரா' நகைச்சுவைக் காட்சிகளை ஓரம் கட்டியிருக்கலாம். 'அமெரிக்கா போனால் ஏ.ஸி.ஜெயில்', 'நான் வீட் டுக்கு வாட்ச்மேன். நீ சமையல்காரி'. 'வெளியே எல்லா அப்பா அம்மாக்களும் அமெரிக்கப் பெருமை பாடினாலும், உள்ளுக்குள்ளே புழுங்கிக் கொண்டுதான் இருப்பார்கள்' என்ற வசனங்களின்போது அரங்கம் கைத்தட்டலிலும் சிரிப்பிலும் அதிர்கிறது. அமெரிக்கத் தனிமையின் கஷ்டத்தைக் கேட்டு, துவக்க விழாவில் கிருஷ்ணசுவாமி குறிப்பாக முன்வரிசை யில் இருந்த காத்தாடி ராமமூர்த்தியைச் சுட்டிக்காட்டி 'ஸீரியஸ் தீம் பண்ணுங் கள்' என்றார். 'ஸீரியஸ் தீமையும் சிரிக்கச் சிரிக்கப் பண்ண முடியும்' என்று இதில் கதை-வசனம்-இயக்கம் எஸ்.எஸ்.தாணு வின் உதவியுடன் காத்தாடி நிரூபித்து விட்டார், வெல்டன்!

அலைகள் போல...

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, தர்ஷிணியின் கைபேசி அலறியது. திருதிருவென முழித்தாள். மணி பார்த்தாள். ஒன்பது. நிச்சயம் அருணாகத்தான் இருக்கும். பாதி சாப்பாட்டில் எழுந்து போனால், அம்மா முதல் எல்லோரிடமும் பதில் சொல்ல வேண்டும். அருணைச் சுலபத்தில் வெட்டி விடவும் முடியாது.

''தர்ஷ், உன் செல் அடிக்குது போலிருக்கே,'' என்றார் தாத்தா.

''இது மட்டும் நல்லா காதுல விழும்'' என்று முனகியவாறு எழுந்து உள்ளே போனாள்.

''என்னடா?'' என்றாள் எடுத்தவுடன் அவனிடம் சற்று அதட்டலாக.

''என்னடி எடுத்தவுடனே இப்படி அதட்டறே? எப்பப் பேசுவோம்னு தவிச்சுப் போய்...''

''போதும். அஞ்சு மணி வரை காலேஜ்ல கடலை போட்டுத்தானே வந்திருக்கோம்...''

''அதுக்காக, திரும்பப் பேசக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா?''

''அதில்லடா. இப்பத்தான் சாப்பிட உட்கார்ந்தோம்.''

''ஓ! சரி, அப்ப பத்து நிமிஷம் கழிச்சுப் பேசறேன்.''

''வேண்டாம். மாமா, குடும்பத்தோட வந்திருக்கார். சும்மா உள்ளே வந்து மெல்லிய குரல்ல பேசினா வீட்ல சந்தேகம் கிளம்பிடும். உனக்கு நாளைக்கு கேம்பஸ் இன்டர்வ்யூல நல்ல கம்பெனி ஏதோ வருதுன்னு சொன்ன இல்ல, அதுக்கு ரெடியாகு. உருப்பட வேண்டாமா?''

''ஆனா, அதுக்கு நீ ஒரு பிராமிஸ் தரணும்.''

''பிராமிஸ்தானே? வேற ஒரு 'ஸ்' கேட்காம இருந்தாச் சரி. சொல்லு.''

''நாளை ஈவ்னிங் ஐநாக்ஸ்ல ரெண்டு டிக்கெட் கிடைச்சிருக்கு. போகறோம்.''

''யேய், என்ன விளையாடறியா? சான்ஸே இல்லை.''

''இங்க பாரு, ஏதாவது காரணம் சொல்லிட்டு நீ வந்தே ஆகணும். இல்ல, இப்ப நான் அங்கே வந்துடுவேன்.''

''ஐயையோ. அப்படி எதுவும் செஞ்சுடாதே.''

''அப்ப, நாளைக்கு வர்றேன்னு சொல்லு.''

''நாளைக்கு என்ன திருநாளா? சனிக்கிழமை நூன்ஷோ மாதிரி போகக் கூடாதா?''

''நாளைக்கு கேம்பஸ் இன்டர்வ்யூல ஐயாவுக்கு வேலை உறுதியாயிடும். அதை உன்னோடு செலப்ரேட் செய்ய வேண்டாமா?''

''....''

''என்ன பதிலையே காணோம்?''

அதற்குள் சாப்பாட்டு அறையிலிருந்து, ''தர்ஷ்...'' என்று அம்மா அழைக்கவே, ''இதோ வர்றேன்'' என்று குரல் கொடுத்துவிட்டு அவசரமாய் அருணிடம், ''சரி, வரப் பார்க்கறேன்.''

''இல்லை. கண்டிப்பா வரே.''

''ஐயோ, இப்போ ஃபோனைக் கட் பண்ணு.''

''யார் ஃபோன்ல?''



''ஃப்ரெண்ட்ம்மா'' என்றவள் மறுநாள் சினிமா போக என்ன பொய் சொல்வது என்று யோசிக்கத் துவங்கினாள்.

சினிமா முடிந்து இரவு வீடு வரும்போது கிட்டத்தட்ட மணி பத்தரை ஆகிவிட்டது. தலையைத் துப்பட்டாவால் மூடிக்கொண்டு வந்தவள், தெரு முனையில் இறங்கிக் கொண்டாள்.

''நான் போய்க்கறேன், அருண். நீ கிளம்பு.''

''ம், நீ போய் கேட்டைத் திற. அதுவரை நின்னுப் பார்த்துவிட்டுப் போறேன்.''

''யாராவது பார்த்தா பிரச்னை. போடா'' விரட்டினாள்.

அவன் மனமில்லாமல் வட்டமடித்து கிளம்பிப் போனான்.

அன்று நடந்த நேர்முகத் தேர்வில் அவனுக்கு ஒரு பிரபல நிறுவனத்தில் வேலை கிடைத்துவிட்டது. இன்னும் நாலு மாதத்தில் கடைசி வருடப் பரீட்சையை முடித்தவுடன் இருபத்தைந்தாயிரம் சம்பளத்தில் உடனே வேலையில் சேர்ந்து விடுவான். அவனை விட அவள் ஒரு வருடம் ஜூனியர். அடுத்த வருடம்தான் படிப்பு முடியும். ஒரு வருடம் அவனோடு இப்படியே ஓட்டப் போகிறாளா? வீட்டில் எப்படி எப்போது தங்கள் காதலைத் தெரிவிப்பது? மாலை அவன் பேசியது மனத்தை அலை

ராஜசியாமளா பிரகாஷ்

அழுதது.

"தர்ஷி, சீக்கிரமாவே சொல்லிடு. என் பக்கம் ஒரு வயசான பாட்டி ஒண்ணு இருக்கு. அது கண் மூடறதுக்குள்ள, என் கல்யாணத்தை முடிக்கடணும்னு அம்மா முனைப்பா இருக்காங்க."

"எப்படிடா சொல்ல? எனக்குப் படிப்பே முடியலை. நாம வேற வேற ஜாதி. உங்க வீட்ல சம்மதிப்பாங்களா?"

"கஷ்டம்தான்."

"என்னடா இப்படிப் பேசறே?"

"உண்மையைத்தானே பேசறேன்."

"அப்போ நம்ம காதல்?" கேட்கும் போதே கண்களில் நீர் கோர்த்து உதடு துடித்தது.

"மை காட், அசடு. உன்னைக் கைவிடப் போறேன்னா சொல்றேன்? நான் உன்னைத்தான் மணப்பேன்."

"நிச்சயமா?"

"நிச்சயமாடா."

"ப்ராமிஸ்?"

"ப்ராமிஸ்."

"அப்ப எதுக்கு இப்படிப் பேசறே?"

"காதலிக்கும்போது கண்ணுக்குத் தெரியாத பல பிரச்னைகள் கல்யாணம்னு வரும்போது பூதாகாரமா நம்ம முன்னாடி எழும். அதைச் சமாளிக்க நாம தயாராக வேண்டிய நேரம் நெருங்குது. பயந்தா முடியாது, தர்ஷி."

இன்றுதான் முதல் முறையாய் அவன் இப்படி சீரியஸாய்ப் பேசியிருக்கிறான். ஜாதி விட்டுச் ஜாதி கல்யாணம். வீட்டில் சம்மதிப்பார்களா? மனத்தில் கவலையோடு அவள் வீட்டில் கால் வைத்தபோது மாமா பேசுவது கேட்டது.

"இங்க பாரு. நம்ம விஸ்வத்துக்கு யு.எஸ்.ல வேலை கிடைச்சதில் எல்லோருக்கும் சந்தோஷம்தான். ஆனால், எப்ப ஒரு வெள்ளைக்காரியை இழுத்து வந்து மருமகளா நிறுத்தப் போறானோன்னு உன் அண்ணி பயந்துகிட்டே இருக்கா. அவன் கிட்ட பேசிப்பேன். இன்னும் ஆறு மாசத்தில் ஒரு மாச லீவில் இங்கே வர்றான். உன் மகளுக்கும் அவனுக்கும் கல்யாணத்தை முடிச்சுட்டா, நாங்க நிம்மதியாயிடுவோம். ஒரு வருஷம் இங்கே இருந்து படிப்பை முடிச்சுட்டு, தர்ஷிணி யு.எஸ். போயிடட்டும், என்ன?"



"இவளைப் பார்த்தவுடன் சட்டென ஒரு மௌனம் சூழ்ந்தது. இவன் எதையும் காட்டிக்கொள்ளாமல், உள்ளே போனாள். மனம் திக்திக் என்று அடித்துக் கொண்டது. அருண் சொன்னது போல் தன் திருமண விஷயமாய் சீக்கிரமாய் முடிவெடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

தர்ஷினி போராட வேண்டும். அவள் தயார். அலைகள் போல மீண்டும் மீண்டும் போரட.

அலைகள் வந்து வந்து மோதின. நினைத்தது கிடைக்கவில்லை போல் இருக்கிறது. போய் விட்டு உடனே திரும்ப வந்து முயன்றது.

"கடல் அலை திரும்பத் திரும்ப எதுக்கு முயற்சி பண்ணுது?" என்ற அருண், "நம்மை மாதிரி பெத்தோர்கிட்ட தங்கள் காதலைச் சொல்ல தவிக்குதோ? இல்ல வேற காரணமா?"

"ரொம்ப முக்கியம். என் மாமா முடிவைப் பத்திச் சொன்னேன். ஒண்ணுமே பேசாம, கடல் அலையை ரசிக்கக்கிட்டு

இருக்கே'' என்று தர்ஷிணி முகத்தைச் சுழித்தாள்.

''இங்க பாரு, நான் நேத்து பூரா யோசிச்சுட்டேன். ஜாதிப் பிரச்னை. ரெண்டு குடும்பத்திலும் சம்மதிக்கப் போறதில்லை.''

''ஏய், குண்டைத் தூக்கிப் போடாதடா.''

''உண்மையைத்தான் சொல்றேன்.''

''அப்போ...?''

''பேசாம உன் மாமன் பையனைக் கல்யாணம் செஞ்சுக்க.''

அவன் சீரியஸாய் முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல, பளிச் பளிச்சென அவளை அடித்தாள்.

''ஏய், ஏய், ஏய்,'' அவன் அலறினான்.

அவள் கண்களில் நீர் திரண்டு விட்டது. சட்டென விளையாட்டுத்தனத்தை நிறுத்திவிட்டு, அவளைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டான்.

''இங்க பாரு, தர்ஷீ, உன்னை விட்டுட்டு நானோ, என்னைப் பிரிஞ்சு நீயோ இருக்க முடியாது. எனக்கு வேலை கிடைச்சுடட்டும், நாம வீட்டை விட்டுப் போய்க் கல்யாணம் செஞ்சுண்டுடலாம், சரியா?''

''என்ன, ஓடிப் போயா?''

அவள் சப்தமாய்க் கிட்டத்தட்ட அலறிய அலறலில், ஓரிருவர் திரும்பிப் பார்த்தார்கள்.

''ஏன் இப்படிக் கத்தறே?''

அவள் மௌனமானாள்.

இரு தினங்கள் மூளையைக் கசக்கிக் கொண்டு அவளும் தீவிரமாய் யோசித்தாள். வேறு வழி அவளுக்குத் தெரியவில்லை. அருணை கடந்த மூன்று வருடங்களாய்த் தெரியும். நல்லவன். படிப்பாளி. படிப்பு முடியும் முன்பே வேலை தேடிக் கொண்டு விட்ட கெட்டிக்காரன். தன்னை உயிராய் நேசிப்பவன். அவனை நம்பி வீட்டை விட்டுப் போனால்தான் என்ன? தன் வாழ்வைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தனக்குக் கிடையாதா? விரும்பியவனைத் தானே போய்த் திருமணம் செய்து கொள்ளப் போகிறாள். அவ்வளவுதானே?



''நமது கப்பல் படையை ஏன் மன்னர் கலைத்துவிட்டார்...'

''தண்ணீரில் ஓடி வர முடியாது என்றுதான்...!''

- டி.சேகர்

மறுநாள் இந்த நல்ல முடிவை அருணிடம் சொல்லிவிட வேண்டும். முடிவெடுத்ததில் மனம் சற்று இலகுவானது. இப்படி அவள் சிந்தனையுடன் மாடியில் உலாவும் போது, அவள் அம்மாவும், மாமியும் மேலே வந்தார்கள்.

''மாமிக்குக் கடையில் போய் இந்த வளையலைக் கொடுத்துட்டு வேற வளையல் வாங்கணுமாம். அதனால, நகைக் கடை வரை போய் வரலாம்னு இருக்கோம். நீயும் வர்றியா?''

யோசித்து யோசித்து தலை வலிப்பது போலிருந்தது. காற்றாட போய் வரலாம் என்று எழுந்து அவர்களோடு கடைக்குப் போனாள்.

கடையில் அம்மாவும், மாமியும் நகையை மாற்றுவதில் தீவிரமாய் இருக்க,

அவள அப்படியே லைட்-வெயிட் நகைகள் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். பக்கத்தில் குரல் பரிச்சமாய்ப்பட, திரும்பிப் பார்த்தாள்.

அவள் தோழி நிஷாவும் அவளுடைய அக்காவும்தான்.

''அட, நிஷா'' என்றாள் அவள் முதுகைத் தட்டியபடி.

''ஹேய், நீ எங்க இங்க?''

''அம்மா,மாமி கூட வந்தேன். நீ?''

''அக்கா குழந்தைக்கு நகை பார்க்க வந்தோம்.''

திரும்பிய அக்கா, ''அட தர்ஷீவா?'' என்றாள்.



''அவனுக்காக மாடா உழைச்சேன். ஆனா அவன் என்னைத் திட்டறான்!''

''என்னன்னு?''

'' 'புண்ணாக்கு'ன்னு!''

- ப.கோபிபச்சமுத்து

''ஆமாம், அக்கா! எப்படி இருக்கீங்க? ஆமாம்... ஆரம் குழந்தைக்கா?'' என்றாள் ஆச்சர்யம் அடங்காதவளாய்.

''ஆமாம் தர்ஷீ, இவ பிறந்தவுடனே சீட்டு போட்டேன். ரெண்டு வருஷத்துல கணிசமா சேர்ந்துடுச்சு. பவுன் விக்கற விலையில், இப்படி வாங்கிச் சேர்த்தால்தானே, இவ கல்யாணத்துக்கு ஏதோ ஓரளவாவது சேரும்! ஆமாம், உன்னைத்தான் கேட்கணும். ஒரு நல்ல ப்ளே ஸ்கூல் சொல்லேன். இவளைப் போடணும். ஃபவுண்டேஷன் நல்லா இருந்தாத்தானே நாளைக்குப் பெரிய படிப்பெல்லாம் படிக்க முடியும். பெரிய இடமா இவளைக் கட்டிக் கொடுக்கணும்...'' அவள் கண்களில் கனவுகள் மலர்ந்தன.

''ஐயோ! அக்கா, போதும். உன் மகள் பிரதாபத்தை ஆரம்பிச்சுட்டியா?'' நிஷா அலுத்துக்கொண்டாள்.

''இப்ப தெரியாதுடி. நீ அம்மா ஆகும்போது, பிள்ளைக்காகத் துடிக்க ஆரம்பிப்ப பாரு, அப்ப வெச்சுக்கறேன்,'' என்ற அக்கா, ''இந்த ஆரம் எடை என்னப்பா?'' என்று கடையாள் பக்கம் திரும்பினாள். தர்ஷீவுக்குச் சுளீரென நெஞ்சில் அறைந்தன அக்காவின் வார்த்தைகள்.

தன் அம்மாவும் இதுபோல்தானே பெற்ற நிமிடம் முதல் தனக்காகத் துடிக்கத் தொடங்கியிருப்பாள். அவளிடம், 'உன் மகள் ஒருவனை நேசிக்கிறாள். அவனுக்குக் கல்யாணம்' என்று விஷயம் கூட தெரிவிக்காமல் போய்த் திருமணம் செய்துகொள்வது எந்தவிதத்தில் நியாயம்?

மறுநாள்.

''என்ன, நாலு மாசம் கழிச்சு நம்ம கல்யாணம். ரிஜிஸ்டர் ஆஃபீஸ்ல போய் பதிஞ்சுடலாமா? சம்மதமா?''

''கல்யாணத்துக்குச் சம்மதம். ஆனா...''

''ஏன் இழுக்கற?'' கவலையாய்க் கேட்டான் அருண்.

''பெத்தவங்ககிட்ட போராடி சம்மதம் வாங்கிக் கல்யாணம் செஞ்சுக்கப் போறோம்!''

''என்ன சொல்றே?''

இவனுக்குப் புரிய வைக்க கொஞ்சம் நேரமாகும். பெற்றோர் சம்மதம் பெற இன்னும் காலம் எடுக்கலாம். எல்லாவற்றுக்கும் பொறுமையாய் அவள் போராட வேண்டும். அவள் தயார்... அலைகள் போல மீண்டும் மீண்டும் போராட!



நூறு ரூபாய்க்கு விற்கப்பட்ட 'இருபதாம் நம்பர் நூல்' இன்று ரூ189. கடந்த நூறு ஆண்டுகளில் இப்படி விலை ஏறியதில்லை.


நொந்து நூலாகும் நெசவு!

"மூணு தலைமுறையா நெசவுத் தொழிலைச் செய்யறோம். பயங்கரக் கஷ்டம். கடந்த இரண்டு வாரமா தறி ஓடவில்லை. இந்த மாதிரி நூல்விலை ஏறிக்கொண்டே போனால் வீட்டு வேலைக்குத்தான் போகவேண்டியிருக்கும்'' என வருத்தப்படும் தனலட்சுமிக்கு சேலை நெய்வதில் பத்து ஆண்டுகள் அனுபவம்.

"என் வாழ்நாளோடு இந்தத் தறி வாழ்க்கையும் முடியட்டும்'' என்று வெறுப்புடன் பேசுபவர் அருப்புகோட்டை காந்திமதி. இவர் பரம்பரை நெசவாளர்கள். தம் இரண்டு மகள்களையும் அருகில் இருக்கும் அரசு மருத்துவமனையில் பணிப்பெண் வேலைக்கு அனுப்பிவிட்டார்.

எக்ஸ்க்ளூசிவ் ரிப்போர்ட்

தமிழகத்தில் நீலகிரி மாவட்டதைத் தவிர அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் நெசவுத் தொழில் நடந்து வருகிறது. அங்கேயும் இதே நிலைதான். காஞ்சிப் பட்டு, கன்னியாக்குமரி வேட்டி, திருநெல்வேலி ஈரிழைத் துண்டு, குற்றால சீலன் துண்டு, ஈரோடு லுங்கிகள், கரூர் பெட் ஷீட், பவானி ஜமுக்காளம், சேலம் சேலைகள்... இப்படி சில மாவட்டங்களின் அடையாளமாகவே இருந்த கைத்தறித் தொழில், கடந்த பத்து ஆண்டுகளில் பல இன்னல்களைச் சந்தித்து அழியும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறது.



“என் வாழ்க்கையோடு இந்தத் ‘தறி வாழ்க்கை’ முடியட்டும்

குறைந்துவரும் தறிகளின் எண்ணிக்கையே இதற்குச் சாட்சி. தமிழ்நாட்டில் 1987இல் 4.27 இலட்சங்களாகயிருந்த கைத்தறிகள் இன்று வெறும் 2.83 இலட்சங்கள் மட்டுமே. ஏன் இந்த நிலை?

மிக முக்கிய காரணம், நூல்களின் மிகக் கடுமையான விலையேற்றம்தான். கடந்த ஆண்டு ரூ.100 க்கு விற்கபட்ட '20ஆம் நம்பர்' நூல் இன்று ரூ.189. கடந்த நூறு ஆண்டுகளில், ஒரே ஆண்டில் இப்படி விலையேறியதில்லை என்கிறார்கள் நெசவாளர்கள்.

நூலின் விலையேற்றத்தைத் துணியில் கூட்டினால் வாங்க ஆளில்லை. உற்பத்தி முடங்குகிறது. தனியார் தறியினர் நேரடியாக விற்பனை செய்வது கைத்தறித் தொழிலில் மிகக் குறைவு. பெரும்பாலும் கூட்டுறவு சங்கங்களின் மூலமே விற்பனை.

அடக்கவிலைக்கு ஏற்ப விற்பனை விலை வைத்தால், போதிய அளவு விற்பனை ஆகாது என்று சங்கங்கள் அஞ்சுகின்றன. அதனால் சங்கங்கள், உறுப்பினர்களுக்கு நூல் வழங்குவதையும் ஆர்டர்களையும் குறைத்துக் கொண்டே வருகின்றன.

முழுவீச்சில் இயங்கிக் கொண்டிருக்கும் சங்கங்கள் அரசின் திட்டங்களான இலவச வேட்டி, சீருடைத் துணி போன்றவற்றைத் தயாரிப்பவை. இங்கே கூலி மிகக் குறைவு. ஒரு சேலைக்கு ரூ.200 முதல் ரூ.700வரை தரத்திற்கேற்ப வேறுபடும். மாதத்தில்





5 அல்லது 6 சேலைகள் மட்டுமே நெய்ய முடியும். பட்டுச் சேலைகளுக்குக் கூலி அதிகம், ஆனால் அதைச் செய்ய பயிற்சியும் அனுபவமும் வேண்டும். பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் சற்று நல்ல நிலையிலிருந்தாலும், பெரிய நிறுவனங்களின் பிடியில் கொத்தடிமைகளாகச் சிக்கியே இருக்கிறார்கள்.

மற்றொரு முக்கியப் பிரச்னை விற்பனை. கோஆப்டெக்ஸ், கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தியின் விற்பனைக்காக உருவாக்கப்பட்ட நிறுவனம். மிகப் பெரிய வணிக நிறுவனமாக இது வளர்ந்திருக்கிறது. கைத்தறித் துறையின் விளம்பரத்துக்கு பெரிதும் உதவியும் இருக்கிறது. ஆனால் நெசவாளர்களின் உற்பத்திப் பிரச்னைகளைக் கண்டுகொள்வதில்லை.

மொத்த கைத்தறியின் உற்பத்தியில் 35 சதவிகிதம் மட்டுமே கோஆப்டெக்ஸ் விற்கவேற்கிறது. மீதியை அந்தந்த நெசவாளர் சங்கங்கள் நேரடியாக விற்பனை செய்து கொள்ள வேண்டும். இந்தச் சுமை தாளாமல் சங்கங்கள் செயலிழந்து போய்விடுகின்றன.

கைத்தறித் துணிகள் போதுமான அளவுக்கு விற்பனை ஆகாததற்கு மற்றொரு காரணம் அதில் இளைஞர்களைக் கவரும் டிசைன்கள் இல்லை. சென்னை கலாஷேத்திரா, திண்டுக்கல் காந்தி கிராமம் போன்ற கலை பேணும் நிறுவனங்கள் பாதுகாத்து வரும் பாரம்பரிய டிசைன்கள் பரவலாகப் பிரபலமாகவில்லை.

...என்று வெறுப்போடு பேசுகிறார் அருப்புக்கோட்டை காந்திமதி.

மேலும் டிசைன்களைப் புரிந்து கொண்டு அதை தறிகளில் நெய்துதரும் மாஸ்டர்களின் எண்ணிக்கையும் குறைவு. அரசின் உதவியுடன் நடத்தப்படும் கைத்தறி டிசைன் சென்டர்கள் நெசவுத் தொழில் அதிக இடங்களில் இல்லை. அது இருக்கும் நகரங்களில் போய் ஒரு வாரம் தங்கிக் கற்றுக்



கொள்ளும் அளவுக்குக் கிராம நெசவாளர்களுக்கு வசதியில்லை.

ஆண்டுதோறும் நூல் விலையேற்றம், ஆர்வமில்லாத அடுத்த தலைமுறை போன்ற பிரச்னைகளை சில ஆண்டுகளுக்கு முன்னரே உணரத் தொடங்கிய சில நெசவாளர்கள், கைத்தறியிலிருந்து விசைத்தறிக்கு மாறினார்கள். விசைத்தறியில், நெய்யும் பணியை மட்டும் இயந்திரம் செய்யும். குறைந்த நேரத்தில் அதிக அளவு உற்பத்தி, குறைந்த விலை என்பதால் உடனடி விற்பனை என்ற வசதிகளுடன் தமிழகத்தில் பல இடங்களிலும் 90களில் தோன்றிய விசைத் தறிகளையும் நூல் பிரச்னை விட்டு வைக்கவில்லை. ஏன்?

(தொடர்ந்து அலசுவோம்)

செய்தி, படங்கள் : **ரமணன்**




• தலையே (சோனியா அம்மையார்) சும்மா இருக்கும்போது வால்கள் (ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், நெல்லை கண்ணன்) துள்ளுவது காமெடி.

- கலைஞர்தாசன்

• 'பணயம் வைக்கப்படும் பயணிகள் பாதுகாப்பு' - தலையங்கம் மட்டுமல்ல; மத்திய அரசு விழித்துக்கொள்ள

வட்டமேஜை



அரசுக்கு

அடிக்கப்பட்ட அலாரம்!

- ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்

• மங்கையர் மலருக்கு சந்தா சேர்க்கத் திட்டமிட்டுள்ள இதே முறையில் 'மிஸ்டர்', 'மாஸ்டர்', 'சூப்பர் ஸ்டார்' என்று அறிவித்து கல்கிக்கு இரண்டு ஆண்டு சந்தா திட்டம் அறிவித்தால் வரவேற்போம்!

- கே.ஜகந்நாதன், சேலம்-1

• 'நடக்குமென்பார்; நடக்கும்' பகுதியில் அழகிய தமிழ் மகள் படம் ஒன்று பளிச் சென்று இருக்கும். ஆனால் சில வாரங்களாக இடம் பெறாமல் இருக்கிறதே... என்ன காரணம்?

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

• கல்கி க்ளினிக் புதிய பகுதி கல்கி வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

- வே.அருணாதேவி, வடமாதிமங்கலம்

• பத்மா சுப்ரமணியத்தின் மகத்தான முயற்சி வெற்றி பெற வாழ்த்துகள்!

- பி.ஹேமாம்புஜம், சென்னை - 17

● தலையங்கம் பக்கத்தில் வெளியாகியுள்ள ட்ராகன் கார்ட்டூன் நிகழவிருக்கும் ஆபத்தின் நிதர்சனப் படிப்பிடிப்பு.

- ரா.பாலாஜி, ஜமீன் பல்லாவரம்

● 'இந்துக்களுக்கு சமநீதி, சம உரிமை மற்றும் சம வாய்ப்பு கிடைக்க வேண்டும். வறுமையில் வாடும் சிறுபான்மையினருக்குக் கல்வி உதவித் தொகை, வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு என்று வாரி வழங்கும் அரசு, பொருளாதாரத்தில் பின் தங்கிய இந்துக்களைப் புறக்கணிப்பது நியாயமா' என்று ராமகோபாலன் கேட்பது நியாயமே.

- எஸ். உஷா சுதர்சன், திருச்செங்கோடு

● வாரா வாரம் புதுப்புது பகுதிகளை அறிவித்து அசத்துவதைப் பார்த்தால், விரைவில் கல்கி விலையற்ற அறிவிப்பு வருமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அட விலையை ஏற்றுங்களேன் பார்க்கலாம்... அதற்காக 'கல்கி' வாங்காமலா இருந்துவிடப் போகிறோம்!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

அலாரம்!

● அளப்பறிய ஆன்மிகமும், அறிவு சார்ந்த ஆன்ற அரசியலும், இணை சேர்ந்த இலக்கியமுமாய் பன்முகங்களாய், பல்சுவையாய்ப் பரிமளித்தது 'பரிகார ஸ்பெஷல்.'

- எம்.மீனா, தஞ்சாவூர்

● 'ராகுகாலம்' போன்ற கட்டுரைகளை எழுதிய மகான் அமரர் கல்கி உருவாக்கிய 'கல்கி' வார இதழில், 'பரிகாரச் சிறப்பிதழ்' தேவைதானா? மிகவும் வருத்தமாக இருக்கிறது. 'ஆருடக்'காரர்களின் கையில கல்கியா?

- சுப்ர.பாலன், சென்னை - 45

● அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'தபால் ரயில்' சிறுகதையின் முடிவு கண்களில் நீரை வரவழைத்தது.

- டி.கே.தேவநாதன், குரோம்பேட்டை

● அகமும் முகமும் மலர ஒரு நல்ல நூலகத்தில் நுழைந்தது போல 'கல்கி' புத்தகம் புதிய பயன்தரும் பகுதிகளை ஏந்தி பவனி வர ஆரம்பித்துவிட்டது...!

- அ.ராஜப்பன், கருமத்தம்பட்டி

● ஆருட திலகம் 'ஆக்டோபஸ் அய்யாச்சாமி' இன்றைய அரசியல் தலைவர்களின் மன ஓட்டத்தினை நகைச்சுவையோட வெளிப்படுத்தியிருந்தது அருமை.

- ஜி.சுந்தரராஜன், திருத்தங்கல்

பரிசுக் கடிதம்

கிழக்குப் பதிப்பகம் வழங்கும் ரூ.250/- மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம்

நெல்லை கண்ணன் பேட்டி நெத்தியடி. காமராஜர் பிறந்த நாள் விழாவில் கருணாநிதி முன்னிலை வகிக்க தங்கபாலு ஓரங்கட்டப்பட்டார். கருணாநிதி காரியவாதி. ஆட்சியில் அமர்வதே அவரது குறி. காங்கிரஸ் கட்சியினரும் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் காரியவாதிகளே. இருக்கவே இருக்கின்றன அமர்ந்து பயணம் செய்ய இரண்டு கழகங்கள் என்னும் call taxi. மத்திய காங்கிரஸ் தலைமைக்குத் தேவை பாராளுமன்ற இடங்கள். கருணாநிதி கொடுத்து விட்டால் மாநிலம் பற்றி அவர்களுக்கு என்ன?

- நித்யா பாலாஜி, ஜமீன் பல்லாவரம்

இந்தியாவில் மொபைல் ஃபோன் சேவை துவங்கப்பட்டபோது (1995 ஆகஸ்ட்) இன் கமிங் கால்களுக்கு ஒரு நிமிடத்துக்கு ஆறு ரூபாய். அவுட் கோயிங் கால்களுக்கு எட்டு ரூபாய். இன்று அவை பைசாவாகிவிட்டன. ஒரு விநாடிக்கு ஒரு பைசா என்று ஒரு செல்ஃபோன் கம்பெனி அறிவித்தால் அடுத்த நாளே சில கம்பெனிகள் இன்னும் ஒரு படி மேலே போய் நிமிடத்துக்கு வெறும் 29 பைசாதான் என்று இறங்கி வந்து விடுகிறார்கள். இந்தியாவில் உள்ள செல்ஃபோன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை நாற்பது கோடியைத் தாண்டிவிட்டது. உலகிலேயே இந்தியாவில் தான் செல்ஃபோன் கட்டணம் மிகக் குறைவு!

இந்த அளவுக்கு மொபைல் ஃபோன் புரட்சி, சிம் புரட்சி நடந்திருப்பதற்கு என்ன காரணம்? இந்தியா நுகர்வோர்களின் சந்தையாக இருப்பதுதான். இருக்கும் பதினோரு நிறுவனங்கள் மத்தியில் கடுமையான போட்டி நிலவுகிறது. இந்தப் போட்டியில் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்ள ஒவ்வொரு நிறுவனமும் தலை கீழாக நின்று தண்ணீர் குடிக்கின்றன.

அண்மையில் தமிழ் நாட்டில் மொபைல் சேவையைத் துவக்கியுள்ள ஒரு நிறுவனம் முதல் மூன்றாண்டுகளில் நாற்பத்தைந்து கோடி ரூபாய் நஷ்டத்தைச் சந்திக்க நேரிடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இன்று பல்வேறு செல்ஃபோன் கம்பெனிகளும் தங்களுக்கு இத்தனை கோடி வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டாலும், இவர்களில் சுமார் அறுபது சதவிகிதம் பேர் மட்டும்தான் தொடர்ந்து அவர்களது மொபைல் சேவையைப் பயன்படுத்திக் கொண்டு கம்பெனிக்கு தொடர்ந்து வருவாய் வருவதற்குக் காரணமாக இருக்கிறார்கள். மீதிப் பேர்களிடம் அந்தக் கம்பெனியின் சிம் கார்டு இருக்கிறது அவ்வளவுதான். இது ஏன்? இப்போது பல கம்பெனிகளும் 'சிம் கார்டு இலவசம்' கூடவே போனசாக இலவச டாக் டைம் பத்து நிமிடம் என்ற லெவலுக்கு வந்து விட்டார்கள். இந்தச் சிம் கார்டுகளுக்கு லைஃப் டைம் வேலிடிட்டி வேறு.





SIM புரட்சி

எனவே, வாடிக்கையாளர்கள் ரேஷன் கார்டு ஜெராக்ஸ் பிரதியையும் ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவையும் கொடுத்து விட்டு சிம் கார்டை வாங்கி விடுகிறார்கள். டாக் டைம் தீர்ந்தவுடன் சிம்மைக் கழற்றி விடுகிறார்கள்.

இப்போது ஒரு வாடிக்கையாளர் தன்னிடம் இருக்கும் ஒரு கம்பெனியின் சிம் கார்டை மாற்றி விட்டு புது சிம் கார்டு வாங்கிப் போட்டால், மொபைல் எண் மாறிவிடுகிறது. தங்கள் மொபைல் எண்ணை அடிக்கடி மாற்றுவதை விரும்பாத பல வாடிக்கையாளர்கள் ஒரே செல்ஃபோன் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆனால் வாடிக்கையாளர் சுதந்திரமாக எந்தச் செல்ஃபோன் கம்பெனியின் சேவையை வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம். அதே சமயம் தங்களிடம் உள்ள எண்ணை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று டெலிகாம் கட்டுப்பாட்டு ஆணையம் அறிவித்துள்ளது. இதற்காக வெறும் பத்தொன்பது ரூபாய் கட்டணம் செலுத்தினால் போதும் என்றும் வரையறுத்துள்ளது. இது செல்ஃபோன் கம்பெனிகளுக்குப் பெரும் திகிலை ஏற்படுத்தி உள்ளது.

இனிமேல் நகர்புறங்களில் புதிய வாடிக்கையாளர் அதிகரிப்பு சாத்தியமில்லை. கிராமபுறங்களைக் குறிவைத்து தம் விரிவாக்கத்தை ஆரம்பித்து விட்டனர். இன்றுள்ள சூழ்நிலையில் ஒரு செல்ஃபோன் டவரைப் பராமரிக்க மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபாய்வரை செலவாகிறது. இந்தியா முழுவதும் நல்ல கவரேஜ் வேண்டுமெனில் ஒவ்வொரு நிறுவனமும் அறுபத்தைந்தாயிரம் செல்ஃபோன் டவர்களை நிறுவி பராமரிக்க வேண்டும். இது சாத்தியமில்லை என்பதால் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஒரே டவரைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

செல்ஃபோன் சேவை நிறுவனங்கள் வாடிக்கையாளர்கள் பேசுவதற்காக மட்டுமின்றி காலர் டியூன், ஹலோ டியூன், இதர விளையாட்டுகளை டவுன்லோடு செய்வது மட்டுமின்றி கிரிக்கெட் ஸ்கோர், நாட்டு நடப்பு செய்திகள், ராசி பலன், ஜோக்ஸ் என்று தொடங்கி வடிவேலு காமெடி, மற்ற நகரங்களில் ஒலிபரப்பாகும் பண்பலை ஒலிபரப்புகள் வரை அனைத்தும் உங்கள் மொபைலிலேயே வழங்கிக் கட்டணம் பெறுகிறார்கள். டி.வி., எஃப்.எம். நிகழ்ச்சிகளில் கேள்விகள் கேட்டு, பொது மக்களை எஸ்.எம்.எஸ். மூலமாகப் பதிலளிக்கச் செய்வது இப்போது மிகவும் பிரபலமாக இருக்கிறது. இதன் மூலமாக செல்ஃபோன் சேவை நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட சேனல்கள், அவர்களின் டெக்னாலஜி பார்ட்னர்கள் ஆகிய மூவருமே கொழுத்த லாபம் சம்பாதிக்கிறார்கள்.

– சந்திரமௌலி



● பி.ஆனந்தன்

என மகன் எப்போதும் செல்ஃபோன், இன்டர்நெட்... என்றிருக்கிறான். எங்களோடு பேசுவது கூட குறைந்துவிட்டது. எப்படி அவனை மீட்பது?

- அருணாதேவி,
நங்கநல்லூர்

பதிலளிக்கிறார் மனநலமருத்துவர் பி.ஆனந்தன்

இன்டர்நெட்

ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்கு மேலாக செல்ஃபோன் அல்லது இன்டர்நெட்டை... தொடர்ந்து ஒரு மாதத்துக்கும் மேலாக ஒருவர் உபயோகித்தால் அவர் மது, கஞ்சா, பிரவுன் சுகர் போன்ற போதைப் பொருட்கள்; சீட்டாட்டம், குதிரை ரேஸ் போன்ற சூதாட்ட (pathological gambling) வகையான அடிமைத்தனத்துக்கு உள்ளாக வாய்ப்புள்ளது.

'இன்டர்நெட் அடிக்ஷன்' என்பது WHO-வின் மனநோய்களுக்கான வகைப்பாட்டில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக இரவு ஒன்பது மணிக்கு மேல் டி.வி./கம்ப்யூட்டர்/செல்ஃபோன்/வீடியோ கேம் போன்ற, ஒலி-ஒளி அலைகளை (sound waves - light waves) மூளைக்குள் அனுப்பும் சாதனங்களை உபயோகித்தால் 'இயல்பான தூக்க சுழற்சி'யில் பாதிப்பு ஏற்படும். விளைவு இரவுச் சாப்பாடு முடிந்த ஒரு மணி நேரத்துக்குள் தூங்காமல் இரவு ஒரு மணி, இரண்டு மணி வரை விழித்திருந்து விட்டு, காலையில் பத்து மணி வரை தூங்கும் பழக்கம் ஏற்படும். இதனால் பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் ஏற்படுவதாகவும், இருபாலருக்கும் மனச்சோர்வு, மனப்பதற்றம், மனக்குழப்பம் போன்றவை ஏற்படுவதாகவும் நிபுணர்களின் ஆராய்ச்சி முடிவுகள் காட்டுகின்றன.

உங்கள் மகனுக்கான தீர்வு:

1. இரவு ஒன்பது மணிக்கு மூளையை ஸ்விட்ச் ஆஃப் பண்ணச் சொல்லுங்கள். அதாவது ஒலி-ஒளி அலைகளினால் மூளையைத் தூண்டித் தூக்கத்தைக் கெடுக்கும் சாதனங்களை ஸ்விட்ச் ஆஃப் செய்துவிட வேண்டும்.

2. தூக்கம் வரவில்லையென்றால் படிப்பது, எழுதுவது, கிறுக்குவது போன்றவற்றைச் செய்யச் சொல்லுங்கள். படிப்பது என்றால் பாடப்புத்தகமாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. நாளிதழ்கள்/வாரப் பத்திரிகை என எதுவானாலும் சரி.

3. இறுதியாண்டு பிராஜக்ட் ஒர்க் மாதிரி ஏதேனும் அத்தியாவசியத் தருணங்களைத் தவிர மற்ற நாட்களில் இன்டர்நெட்டை ஒரு மணி நேரத்துக்கு மேல் பயன்படுத்தக் கூடாது என்ற சுயக் கட்டுப் பாட்டுப் பயிற்சி நல்லது.

4. காலை அல்லது மாலை நேரங்களில் தினமும் ஒரு மணி நேரம் வாக்கிங், ஜாகிங், சைக்ளிங், ஜிம் போன்றவற்றின் மூலமாக உடலுக்குக் கொஞ்சமா



உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...
என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர்



✱ பி.சரவணகுமார்

வது வேலை கொடுக்கலாம்.

இவ்வளவு செய்த பிறகும் அடிமைத்தனத்திலிருந்து வெளியே வர முடியவில்லை என்றால் மனநல மருத்துவரை ஆலோசித்து, சில மருந்துகள் மற்றும் அறிவியல்பூர்வமான பயிற்சிகள் செய்வது நல்லது!

எலியும், பெருச்சாளியும் சர்வசாதாரணமாக எங்கள் வீட்டில் உலா வருகின்றன. இவற்றால் ஏதேனும் அபாயம் இருக்குமா?

- வான்மதி சுரேஷ், கம்பம்

இப்ணைசகள்!

பொது நல மருத்துவர் பி.சரவணகுமார்

*எலியின் கழிவுகளால் ஏற்*படக்கூடிய தொந்தரவுகள் ரொம்ப அதிகம். எலியின் மல நீர் நாம் சாப்பிடும் சாப்பாட்டிலோ அல்லது குடிக்கும் தண்ணீரிலோ கலந்து விட்டால், எலி ஜுரம் வர வாய்ப்புகள் மிக அதிகம். மஞ்சள் காமாலை, கடும் ஜுரம், வயிற்றுப்போக்கு இவை எல்லாமே இதன் விளைவால் ஏற்படக் கூடியவையே. எலி கடித்து விட்டால், அதிலிருந்து ஒரு தொற்றுக் கிருமி பரவி, ப்ளேக் வரக் கூடும். சமயங்களில் டைபாய்டும் வரும். பெருச்சாளி கடித்துவிட்டால் ரேபீஸ் வைரஸ் பரவும். எலிகளைப் பிடிக்க இப்போது சந்தையில் சாதனங்கள் உள்ளன. பெஸ்ட் கன்ட்ரோல் நிறுவனங்களையும் அணுகலாம்.



kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.




இருளர் வாழ்வின் ஒளிவிளக்கு!



* செலின் - ஏழுமலை

அஞ்சலையின் முகத்தை யாருமே பார்த்ததில்லை. அவ்வளவு விகாரம். காரணம், முகத்தில் கட்டி; வீக்கம். முகத்தை மூடிக்கொண்டுதான் வெளியே வருவாள். இருளர் வகுப்பைச் சேர்ந்த அஞ்சலைக்கு திருப்போரூர்தான் சொந்த ஊர். பெற்றோர் குடிக்கு அடிமையாகி, தற்கொலை செய்துகொண்டவர்கள். கொடிய நோய் ஒரு புறம்; மறுபுறம் தம்பி தங்கைகள். பத்து ஆண்டுகள் வேதனைக் காலம். அப்போதுதான், இருளர்களுக்கு உதவும் சமூக ஊழியர் ஏழுமலை, அஞ்சலையைப் பார்த்தார். எப்படியும் அஞ்சலையைத் துயரத்திலிருந்து மீட்டுவிட வேண்டும் என்ற உந்துதலால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனை, சென்னை பொது மருத்துவமனை, ராமச்சந்திரா மருத்துவமனை என்று





அலைந்து திரிந்து முடித்தபோது, ஒரு விஷயம் தெரிந்தது. தேவை: ரூ. 2.5 லட்சம் பணமென்று. கலைஞர் காப்பீட்டுத் திட்டம் வரை உதவிக் கேட்டு ஒரு சுற்று வந்து நின்றபோது, யாருமே உதவவில்லை. கடைசியில் வெளிநாட்டில் இருந்து ஒரு நல்ல உள்ளம் உதவ, ஆறு மணிநேர அறுவை சிகிச்சை. இரண்டு நாள் மயக்கம். அஞ்சலை கண்விழித்தபோது கட்டியைப் போலவே அவரது துயரமும் நீங்கி இருந்தது. அஞ்சலை மட்டுமல்ல; இருளர்களுக்கு எந்த ஓர் உதவி வேண்டுமானாலும் போய் நின்றது ஏழுமலையிடம்தான். குடும்ப அட்டை, சாதிச் சான்றிதழ், பட்டா, கறவை மாட்டுக்குக் கடன் என்று சுற்றியிருக்கும் இருபது கிராமங்களையும் சைக்கிளிலேயே சுற்றி வந்தே உதவிகளை செய்கிறார். திருப்போரூரைச் சுற்றியுள்ள கிராமங்களில், ஏழுமலையால் உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் தன்னிறைவோடு பணியாற்றுகின்றன. எல்லாவற்றையும்விட முக்கியமானது திருப்போரூர் பக்கத்தில் இருக்கும் சென்னப்பட்டினம் பகுதியில் பல குடியிருப்புப் பகுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆந்திரத்தைச் சார்ந்த கட்டட வேலைக்கு வந்த தொழிலாளர்களின் பிள்ளைகள் படிப்பே இல்லாமல், வீணாய்ப் போவதைப் பார்த்தார் ஏழுமலை. உடனே தெலுங்கு மட்டுமே தெரிந்த ஓர் இளைஞரை அழைத்து வந்து, அவர்களின் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கச் செய்தார். பின்னர் அதுவே வளர்ந்து இன்று பெரிய கல்விச் சாலை ஆகியிருக்கிறது. கல்வி, புத்தகம், சீருடை, செருப்பு, உணவு ஆகியவை இலவசம்.

''ஆந்திரா, ஒரிசாவிலிருந்து வரும்

காட்டூரின் தையல்நாயகி சமேத ஸ்ரீ உத்ரவைத்ய லிங்கேஸ்வரர் கோவில் ஏழுமலையின் முயற்சியால் புதுப்பொலிவு பெற்றுள்ளது. ''இங்கே பிரதோஷ பூஜையும் நடக்கிறது'' என்கிறார் செலின். இவர் ஏழுமலை மனைவி!

''காட்டூரில் இருக்கும் 65 வீடுகளிலும் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. அதற்காக அரசுத் தரப்பில் தரப்பட்ட கடனைக் கட்டி முடித்துவிட்டோம்'' என்றார் லலிதா.

வீட்டுத் தோட்டத்தில் வெண்டையும் ரோஜாவும் விளைகின்றன. சுய உதவிக் குழு மூலம் ஆயுள் காப்பீடு திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இக்குழுவே உறுப்பினர்களுக்குத் தேவையான கடனையும் கொடுக்கிறது.

ஏழுமலையின் முயற்சியால் குழந்தைகளுக்கான இல்லமும் கட்டப்பட்டுள்ளது. சென்னை சிட்லபாக்கம் கிழக்கு லயன்ஸ் கிளப் இந்த முயற்சிக்கு உதவியுள்ளது.

குழந்தைகளுக்கு எட்டாம் வகுப்பு வரை கல்வி தருகிறோம். அவர்கள் ஊருக்குப் போகும்போது நாங்களும் கூடவே போகிறோம். அங்கிருக்கும் பள்ளிகளில் தொடர்ந்து படிக்கிறார்கள் என்று உறுதி செய்கிறோம்'' என்கிறார் ஏழுமலை. இங்கே கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு குரோம்பேட்டை எஸ்.ஆர்.டி.எஃப். விவேகானந்தா பள்ளி மூலம் பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்கிறது.

''மனித உரிமைக்கான போராட்டங்களிலும் எங்கள் அமைப்பு முன்னணியில் இருக்கிறது,'' என்கிற ஏழுமலை, ''சென்ற வருடம், ஏகாட்டூர் பகுதியில் இருந்த ஆந்திரத் தொழிலாளி ஒருவரின் ஐந்து வயது பெண் குழந்தை பலாத்காரம் செய்யப்பட்டு புதரில் வீசப்பட்டிருந்தது. நாங்கள் நடத்திய போராட்டத்தால் குற்றவாளி சிறையில் அடைக்கப்பட்டார்'' என்கிறார்.

ஏழு மலையை இருளர்கள் தங்கள் வாழ்வின் ஒளிவிளக்கு என்கின்றனர்.

- சுப்பு



கல்கி

15.08.2010 இதழில்

அடுத்த வாரம்

ஆடி ஸ்பெஷல்

- விரதங்களும்... பலன்களும்
- தள்ளுபடிகளை நம்பலாமா?
- அம்மனின் சந்நிதியில்...
- சங்கரன் கோயில் ஆடித் தபசு!
- புத்துக்கு முன்பு வளைகாப்பு!



இந்த இதழோடு 32 பக்க இணைப்பு

கோவை கோனியம்மன்!

படிக்கத் தவறாதீர்கள்...

படிக்கப் படிக்கப் பரவசம்...



தில்லாலங்கடி

● எல்லாவற்றிலும் 'கிக்' தேடி அலையும் ஒருவன் மற்றவர்களுக்கு உதவுவதே உண்மையான 'கிக்' என்று திருடனாகும்(?) கதைதான் தில்லாலங்கடி.

● காதல் 'கிக்'குக்கு தமன்னாவும், ஆக்ஷன் 'கிக்'குக்கு ஷாமும், சரிவிகித கலவையாக சமன் செய்வது கிக்கோ கிக்.

● ஜாலி பட்டாசாகச் சுற்றிவரும் ஜெயம் ரவி சீரியஸ் ஆசாமியாக மாறும்போதுதான் கதையிலும் கொஞ்சம் 'கிக்' ஏறுகிறது.

● அரைகுறை உடையிலும், அச்சுப் பிச்சு நடிப்பிலும் தமன்னா தன் 'கிக்'கை இழந்தாலும் நடனத்தில் இழந்த 'கிக்'கை மீட்டெடுக்கிறார்.

● காட்சிக்குக் காட்சி 'கிக்' ஏறிக் கொண்டே போவது வடிவேலுவின் காமெடியில்தான். அதுவும், தமன்னாவைப் பெண் கேட்கப் போன இடத்தில் அடிவாங்கும்போது தமன்னாவின் சித்தி கையால்தான் அடிவாங்குவேன் என அடம்பிடிப்பது காமெடி 'கிக்'!

● மீசை வைத்த ஷாமை காக்கி உடையில் பார்க்கையில் கஞ்சி போட்ட 'கிக்' விறைப்போடு நமக்குள்ளும் ஒட்டிக் கொள்கிறது!

● யுவன் ஷங்கர்ராஜாவின் இசையில் 'சொல் பேச்சு கேட்காத சுந்தரி' 'பட்டுப்பட்டு பட்டாம்பூச்சி' இரண்டு பாடல்களும் தேன் தடவிய 'கிக்'கென காதுக்குள் இனிக்கின்றன.

● ஆங்காங்கே லாஜிக் மீறும் திரைக்கதையும், எடிட்டிங்கும் 'கிக்'கை, 'டக்'அவுட் ஆக்குகின்றன. எனினும், பி.ராஜசேகரின் கேமரா அதைச் சமாளிக்கிறது.

● முக்கியமான நட்சத்திரங்களை அதிமுக்கியத்துவம் இல்லாத பாத்திரத்தில் பயன்படுத்தியிருப்பது குறைதான்.

● **தில்லாலங்கடி - ஏறி இறங்கும் கிக்!**

- மகிமைராஜன்

மீசை அழகன் மீட்டு தருவான்!

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து பரீட்சையோ, நேர்முகத் தேர்வோ, நல்லதோ, கெட்டதோ... எது நடந்தாலும் அதில் என்னை ஈடுபடுத்திக்கொள்ளும் முன்பாக நான் மீசை அழகன் பார்த்தசாரதியை நினைத்துத்தான் செய்ய ஆரம்பிப்பேன். அவர் நிம்மதியை, தைரியத்தை அளித்து வெற்றியைத் தருபவர் என்ற சென்டிமெண்ட் எனக்குண்டு.

- சியாமளா ரங்கநாதன்,
மந்தைவெளி-28



சக்திமிக்க டைரி!

என் நண்பர் 2002-ஆம் ஆண்டு ஓர் அழகான டைரியை அன்பளிப்பாகத் தந்தார். அதில் நான் பத்திரிகைகளுக்கு எழுதும் துணுக்குகள், கவிதைகள், விமர்சனங்கள் வெளிவந்த இதழ், தேதி ஆகியவற்றை எழுதி வைப்பேன். அதற்கான அன்பளிப்புகள் வரும்போது அதை டிக் பண்ணியும் வைப்பேன். இதுவரை சிரிப்புகள், துணுக்குகள், கவிதைகள் என எண்ணிக்கை மட்டும் 2000. கொஞ்சமாக வெளிவந்த படைப்புக்கள், நண்பர் டைரி பரிசளித்த 2002-க்குப் பிறகு அதிக அளவில் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. எனவே, நண்பரின் அந்த டைரிக்கு ஒரு சக்தி இருப்பதாக வீட்டில் மனைவி, மகள்களிடமும் கூறினேன். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். அந்த டைரி தீரும் வரை அதிலேதான் எழுதி வைப்பது என முடிவு பண்ணிவிட்டேன். இதற்குப் பின் எத்தனையோ புது டைரிகள் வந்தும் அதை நான் உபயோகிப்பதில்லை.



- வே.முருகேசன்,
ஆதம்பாக்கம்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் (2010) பிரசுரத்துக்குத்

தேர்வான கதைகள்... எழுதிய படைப்பாளிகள்...

1) விசும்பல் - நெய்வேலி பாரதிகுமார்
2) புனரபி பயணம் - ரோஷினி
3) உறவுகள் தொடர்கதை - ப.உமாமகேஸ்வரி
4) போதிமரம் - மோஹனா கோபாலகிருஷ்ணன்
5) திரைகடல் ஓடியும்... - ராம்சுரேஷ்
6) தோற்றப்பிழை - செய்யாறு தி.தா.நாராயணன்
7) கணக்கு - ஜி.ஏ. பிரபா
8) பிசின் பழ மரம் - எம்.ஆர். திருமுருகன்
9) மனிதர்கள் வாழ்கிறார்கள் - அல்லி உதயன்
10) ராட்சஸம் - சத்யராஜ்குமார்
11) குறையொன்றுமில்லை - ஜோதிநகர் சிவாஜி கிருஷ்ணா
12) ஒரு துளி சந்தோஷம் - சித்ரா ரமேஷ்
13) நவநீத கிருஷ்ணனின் காதல் கதை - மாலினி புவனேஷ்
14) ஒரு விடுமுறை தினத்தின் நிகழ்வுகள் - பா.ராஜா
15) நேர்த்திக் கடன் - ஜெயம் ஷீலா சிவக்குமார்

உதவியாளர் தேவை

புத்தக வெளியீட்டுத் துறையில் மூன்றாண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் தேவை. பிரதிகளைச் செம்மைப்படுத்தவும் திருத்தி எழுதவும் பிழை திருத்தவும் கணினியில் பணியாற்றவும் தெரிந்திருக்க வேண்டும். ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பு செய்யத் தெரிந்திருத்தல் கூடுதல் தகுதி. வயது வரம்பு: 30 வயது. கல்வி: இளங்கலை பட்டதாரி, தமிழை முதல் பாடமாகவோ இரண்டாம் பாடமாகவோ பயின்றிருக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி,
47- NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை 32.
மின்னஞ்சல்: kalki@kalkiweekly.com.

கடைசித் தேதி: 14.08.2010

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.

